# அல்ஹஸனாத்

الحسنات ! إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர் : 28 இதழ் : 08 ஒகஸ்ட் (ஜமாதுல் அவ்வல் - ஜமாதுல் ஆகிர் 1423)



## நம்பிக்கை

எமக்கானதொரு வெளியில் - நாங்கள்
விதைக்க விரும்புகிறோம் - உம்
கண்களுக்குத் தெரியாமலே
நாம் நிறையவே விதைத்துமிருக்கிறோம்
பூச்சிகளும் களைகளும் தாக்காதிருப்பதில்
பேணுதல் காட்டியும் வருகிறோம்

அவை இன்று வளர்ந்து
நாளை பூத்துக்கனி தரவேண்டும்
நாங்கள் சுவைத்து மகிழ வேண்டும் என்று
எதிர்பார்க்கை எமக்குக் கிடையாது - ஆனால்
ஆசைகள் இல்லையென மறுக்க மாட்டோம்

நூற்றாண்டுகள் கடந்தேனும் அவை
புவிப்பரப்பெங்கும் ஆழ வேர்விட்டு
வைர விருட்சங்களாய் வான்பரப்பில் கிளைவிட்டுயரும்
நிழல் பெறவும் தூய கனி பெறவும்
அணியணியாய் மக்கள் கூட்டம் அலைமோதும்
அப்போது எமக்கென்ற நிழலும்
அமுதூட்டும் அருவிகள் பாய்ந்தோடும்
சுவனத்துச் சோலையும் - மண்ணறையில்
கண்தொடு தூரம் மட்டும்
விரிந்து கொண்டே செல்லும்

எமது எஜமானை நாம் புரிந்தவர்கள்
அவன் செய்கை பற்றி வினவுபவன்
அறுவடைகள் பற்றி சற்றேனும் அலட்டாதவன்
அவனது லாபநட்டக் கணக்குகள்
உம் விதிகளுக்கு அகப்படாதவை - எனவே
நிமிடப் பொழுதுகளிலெல்லாம்
அவன் மீதான நம்பிக்கை
வலிமையுற்றே வருகிறது.

கனமூலை பாரிஸ்

20/-

இஸ்லாமிய இலட்சியக் குரல் Islamic Monthly

# இஸ்லாமிக் புக் ஹவ்ஸ்



உங்களுக்குத் தேவையான எல்லா வகையான புனித அல் குர்ஆன் பிரதிகளும்,
அருள்மறை அல்குர்ஆனின் தமிழ், ஆங்கில ஆக்கங்களும், ஹதீஸ் கிரந்தங்களும்
நூற்றுக்கணக்கான இஸ்லாமியப் புத்தகங்கங்களும்,
பாலர் வகுப்புமுதல் பல்கலைக்கழகம் வரையிலான கற்கைநெறிகளுக்குரிய பாடநூல்களும்,
காகிதாதிகள், அரபு மத்ரஸாக்களுக்கான அரபு நூல்களும்
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். அத்துடன்,

| | |
|---|---|
| ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும் | 75.00 |
| இஸ்லாமிய சட்டவியலில் பெண்கள் சாட்சியம் | 75.00 |
| சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு | 188.00 |
| மகா கவி இக்பால் | 210.00 |
| பாரசீகப் பெருங் கவிஞர்கள் | 210.00 |
| இலங்கை முஸ்லிம்களின் வரலாறு | 290.00 |
| நடைமுறைக்கேற்ற இஸ்லாம் முதற்பாகம் | 275.00 |
| நடைமுறைக்கேற்ற இஸ்லாம் இரண்டாம் பாகம் | 275.00 |

எங்களிடமிருக்கும்
ஏறக்குறைய 3000 புத்தகங்களின்
பெயர் விபரம் அடங்கிய விலைப்பட்டியல்
விலை – 5.00

த:வதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப்பரீட்சையை முன்னிட்டு பரீட்சை வழிகாட்டி நூலான "த:வதுல் குர்ஆன்" 100.00 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

## ISLAMIC BOOK HOUSE

77, Dematagoda Road, Colombo - 09.
Tel: 01- 684851 - Fax :01- 669197 E-Mail: islambks@slt.lk

---


## இதோ நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய அரிய நூல்கள்!

**உலக வரலாற்றுத் தகவல் களஞ்சியம்**

பக்கம் 304 விலை: 260/=




● உலக நாடுகள், மதங்கள், மொழிகள் ● இலங்கை இந்தியாவை ஆண்டவர்கள் ● நபிமார்கள், கலீபாக்கள், உமையாக்கள், அப்பாஸியாக்கள் மற்றும் உலகப் பிரசித்தி பெற்றவர்களின் குறிப்புகள் ● திருக்குர்ஆன் தகவல் களஞ்சியங்கள் ● உலகளாவிய கலண்டர்கள் ● உலகத்தின் சிகரங்கள், நீளமான ஆறுகள், கடல்கள், தீவுகள், நீர்வீழ்ச்சிகள் ● ஹிஜ்ரி ஆண்டுகளில் நடை பெற்ற சரித்திரங்களின் வரலாற்றுக் குறிப்புகள் ● மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ் வரலாற்று குறிப்புகள் ● நபியவர்கள் மற்றும் திருக்குர்ஆனைப் பற்றி உலக அறிஞர்களின் கருத்துக்கள். ● கிபி 5000 ஆண்டு வரை பயன்படுத்தத்தக்க ஹிஜ்ரி மற்றும் கிபி கலண்டர்கள் ● இவை உட்பட 150க்கும் மேற்பட்ட தலைப்புகள் அடங்கிய அற்புத தகவல் களஞ்சியம். ● ஆசிரியர், மாணவர்களுக்கு மகத்தானதொரு அறிவுப் பெட்டகம். ● O/L, A/L மாணவர்களுக்கும் பயன்படும் பலநூறு இஸ்லாமிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூல்.



**வேண்டாமா உங்களுக்கு இந்த பரிசுத்தமான வாழ்க்கை?**

பக்கம் 160 விலை: 105/=


ஆழ்ந்த கண்ணோட்டத்தில் இஸ்லாத்தை அறிவியல் ஆதாரங்களோடு முன்வைக்கும் நூல். மாற்று மத நண்பர்கள் உட்பட அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய அருமையான நூல்.



**வெற்றியை நோக்கி**

பக்கம் 40 விலை: 30/=

தாய், சகோதரி, மனைவி, மகள் ஆகிய அனைவர்களின் ஈருலக வெற்றிக்கு வழிகாட்டும் அழகிய நூல். பெண்களும் த:வா செய்ய வேண்டும் என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் எடுத்தியம்பும் நூல்.



**தஅலீமுத் தஜ்வீத்**

பக்கம் 48 விலை: 40/=

திருக்குர்ஆன் ஓதல் முறை சட்டத் தொகுப்பு நூல். தஜ்வீத் எனப்படும் திருக்குர்ஆன் ஓதல் முறையை அனைவரும் இலகுவாக கற்றுக் கொள்ள வழிகாட்டும் நூல்.

நான்கு நூல்களுக்கும் (ரூ: ~~435/-~~) ரூ. 400 ஐ M.W.M. RAMEEM என்ற பெயருக்கு M.O. செய்க! அல்லது தேவையான நூல்களுக்குரிய பணத்தை உரிய பெயருக்கு M.O. செய்க! (தபால் நிலையத்தை Theliyagonna, Kurunegala என குறிப்பிடவும்) தபால் செலவு இலவசம். *உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.*

**விற்பனை உரிமை**

DARUL QUR'AAN PUBLISHERS
NO: 100, KANDY ROAD,
MALLAWAPITIYA, KURUNEGALA.

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"உங்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள பெரும்பாவங்களைத் தவிர்ந்து வந்தீர்களானால் உங்களுடைய சின்னஞ்சிறு தவறுகளை உங்கள் கணக்கிலிருந்து நாம் நீக்கிவிடுவோம். மேலும் உங்களை கண்ணியமான இடத்தில் நுழைய வைப்போம்"

(அந்நிஸா : 31)

# அல்ஹஸனாத்


மலர் 28 இதழ் 08 ஒகஸ்ட் 2002
ஜமாதுல் அவ்வல்-ஜமாதுல் ஆகிர் - 1423

ISSN : 1391 - 460 X



**வெளியீடு:**

**இலங்கை ஜமாஅதே இஸ்லாமி**
Sri Lanka Jama'ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo 09
Phone :687091
Fax :686030
email :islambks@slt.lk


## விலை விபரம்

**உள்நாடு**

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூபா | 20.00 |
| வருட சந்தா | : | ரூபா | 275.00 |

**வெளிநாடு**

வருட சந்தா

| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர் | : 650.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | : 800.00 |
| இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மலேஷியா, ஜப்பான், கொரியா | : 900.00 |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | : 1200.00 |

# உள்ளே உள்ளவை


**அல்குர்ஆன் விளக்கம்**
சிறிய பாவங்கள் மன்னிக்கப்பட... 03

**அல்ஹதீஸ் விளக்கம்**
விதவைகள் மறுவாழ்வுத் திட்டம் 05

**உள்நாடு**
புதிய ஆட்டக்காரர்கள்... 07
LTTE விரும்புவது சமாதானத்தையா? 11

**கட்டுரைகள்**
ஈமானுக்கு வரைவிலக்கணம் கொடுத்தால் 31
மரபணு மாற்றப்பட்ட உணவுகள் 33

**தஃவா களம்**
மரணம் வாழ்வின் முற்றுப்புள்ளியல்ல 09
உங்களுக்கு அதிகாரம் உண்டா? 35

**சர்வதேசம்**
குஜ்ராத் வழங்கும் பாடம் 13
அப்துல் கலாம்: இந்திய ராஜதந்திரத்தின் நியமனம் 17
கோத்ரா ரயில் எரிப்பு 19
முஸ்லிம் உலகம்: சவால்களும்.... 37

**கவிதா பவனம்** 26-27

**ஜம்இய்யா பக்கம்** 40-41

**சிறுவர் பூங்கா** 42-43

**கேள்வி – பதில்**
பகுத்தறிவின் எல்லை எது? 47

**விஞ்ஞானம்**
நகருது நகருது. நிலம் தினம் நகருது 39

## அந்நிஸா

சாதனை புரிவோம் என்று... 21
திருமண ஒப்பந்தங்களும் வாக்குமீறல்களும் 23
வானொலியும் முஸ்லிம் பெண்களும் 25

**ஆரோக்கிய சந்திப்பு:**
குழந்தைப் பாக்கியம் 28


**அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் குறிப்பிட்ட தொகைக்கு ALHASANATH என்ற பெயருக்கு மணியோடர் எடுத்து பெறும் கந்தோர் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.**

ஆசிரியர் கருத்து

# பத்திரிகைகள் உண்மைகளை எழுதட்டும்!

இனவாதம் இந்நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கின்றது. இங்கு தோன்றிய, தோன்றும் எல்லாப்பிரச்சினைகளுக்கும், இந்நாடு மாற்றானிடம் மண்டியிட்டு பொருளாதார பிச்சை கேட்பதற்கும் இனவாத அடிதடிகள் மற்றும் கெடுபிடிகளின் விளைவுகளே காரணம்.

இந்த இனவாதத்தைத் தாலாட்டுப்பாடி வளர்த்து, இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கி, உயிராபத்திற்கும் அழிவு வேலைகளுக்கும் வித்திட்ட பெருமை இந்நாட்டின் சில தினசரி பத்திரிகைகளுக்கு உண்டு. அவை உண்மைக்கு மாறான செய்திகளை எழுதி குறிப்பிட்டதொரு சம்பவத்துடன் தொடர்பில்லாத படம் போட்டு தவறான விளக்கம் தந்து எழுதிய விடயங்கள் ஏற்படுத்திய விபரீதங்கள் பலவுண்டு. எல்லாம் தத்தமது இனத்தின் பெருமை காக்கவாம். எவரும் தனது இனத்தின் பெருமை காப்பதில் தவறில்லை. ஆனால் தன்னினத்தின் தவறுகளை மறைத்து, அடுத்த இனத்துக்கு சேறுபூசி குற்றக்கூண்டில் ஏற்றிவைத்து 'தன்னினப் பெருமை' காக்க முயல்வது வெட்கக்கேடான விடயம்.

குறிப்பாக, அண்மையில் இடம்பெற்ற மூதூர் மற்றும் கிழக்குப்பகுதிப் பிரச்சினைகள், இஸ்ரேல் பலஸ்தீன் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகள், உஸாமா பின் லாதின் பற்றிய தகவல்கள் பற்றிய தமிழ்த் தினசரிகளின் செய்திகளைக் காட்டலாம். உண்மைக்குப் புறம்பான, சந்தேகத்துக்கிடமான அல்லது தொடர்பேயில்லாத செய்திகளை வெளியிட்டு இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அவமானப்படுத்தும் முயற்சியில் சில தமிழ்த் தினசரிகள் நடந்துகொண்டுள்ளன. இத்தனைக்கும் மத்தியில் அவை தம்மை 'தேசிய பத்திரிகைகள்' என அழைத்துக் கொள்வதுதான் விந்தை.

தேசிய பத்திரிகைகள் என்பன ஓர் இனத்துக்காக (அது தனது இனமாயினும்) மட்டும் உழைக்கும் பத்திரிகைகளாக இருக்கக்கூடாது. தனது இனமாயினும் தவறு அங்கு இருக்குமாயின் எடுத்துக்காட்டித் திருத்துவது அவசியம். மேலும், பொய்யை, சந்தேகத்திற்கிடமானவைகளை மக்கள் உண்மை என உறுதியாக நம்பும்படி எழுதக்கூடாது.

உதாரணமாக, குஜராத் மாநிலத்தில் முஸ்லிம்கள் படுகொலை பற்றிய செய்திகளை குறிப்பிடலாம். இந்த முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதற்கான காரணம் கற்பிக்கும் பத்திரிகைகள், ''முஸ்லிம் தீவிரவாதிகள்' இஸ்லாமிய அடிப்படை வாதிகள்' 58 இந்துக்களை ரயில் பெட்டிகளுடன் எரித்து விட்டனர்'' எனக் கொட்டை எழுத்தில் குறித்துக் காட்டின. இது உண்மையல்ல.

எரிக்கப்பட்டவர்கள் 'விஷ்வ ஹிந்து பரிஷத்' எனும் ஹிந்து தீவிரவாத இயக்க உறுப்பினர்கள். எரித்தவர்கள் முஸ்லிம்கள் அல்ல. இக்கொடுமையை வெளியில் இருந்து முஸ்லிம்கள் செய்தார்கள் எனக் கூறுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. எல்லாம் உள்ளே நடந்து வெளியில் தெரிய வந்தவையே என்றாலும், பத்திரிகைகள் 'தீவிரவாதிகள்' அடிப்படைவாதிகள்' என முஸ்லிம்களைக் குறித்துக்காட்டுகின்றன. அதோடு இது விடயத்திலான இந்துக்களின் தொடர்பை மறைக்கவும் முயல்கின்றன. இந்த எரித்தல் கொடுமை யார் செய்தாலும் பிழைதான். ஆனால் அதற்குக் காரணமான **இந்துத்தீவிரவாதிகளின் "பெண் கடத்தலை" ஏன் மறைக்க வேண்டும்! அதுதான் அனைத்துக்கும் மூலகாரணமாகியது.** இந்தியாவில் இக்கொடுமை பரவுவதற்குக் காரணம், பத்திரிகைகள் இந்த உண்மையை மறைத்து எழுதிய செய்திகளே. இலங்கையிலும் தமிழ்த் தினசரிகள் சில இப்படி நடந்துகொள்வது நல்லதல்ல. அது நாளை பெரும் பிரச்சினைகளுக்குக் காரணமாகலாம்.

நம் நாட்டில் சில தமிழ் தினசரிகள் நீண்ட காலமாகவே ஒரு பக்க நிலைப்பாட்டை, அதாவது முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. 'பதுளை பாடசாலை ஒன்றின் பர்தா விவகாரம்', வட கிழக்குப் பிரச்சினைகள், செப்டம்பர் 11 லான அமெரிக்க கட்டிடத் தாக்குதல், இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினைகள் மற்றும் அவ்வப்போது முஸ்லிம்கள் தொடர்பாக ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள் போன்றவற்றில் அவை முஸ்லிம்களை குற்றம் காணும் விதத்தில் அல்லது முஸ்லிம்களுக்கு எதிராக மற்ற சமூகங்களை குறிப்பாக தமிழ் சமூகத்தைச் சீண்டிவிடும் விதத்தில் கருத்து வெளியிட்டு வருகின்றன. இது 'தேசியம்' என்ற தன்மைக்குப் பொருந்தாச் செயல். இத்தகு செயல்களை அவை கைவிட்டுவிட்டு எது உண்மையோ அதை செய்தியாக மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது 'நாம் நம்மினத்துக்குத்தான்' என்ற தமது நிலைப்பாடை அறிவித்திட வேண்டும்.

இன்று இந்நாட்டில் தமிழ் பத்திரிகைகளை வாசிப்போரில் பெரும் பகுதியினர் முஸ்லிம்களே. அந்த முஸ்லிம்களையே கருவறுக்கும் வகையில் உண்மைக்குப் புறம்பானதும் திரிபு படுத்தப்பட்டதுமான செய்திகளை வெளியிடுவது ஒரு தகாத செயல்.

முஸ்லிம்களுக்கு சார்பாக எழுத வேண்டும் என்பது எமது நிலைப்பாடு அல்ல 'உண்மையை எழுதுங்கள்' என்பதுதான் எமது கோரிக்கை. அப்படி இல்லாதவிடத்து நாளை ஒருநாள் அத்தகைய பக்கச்சார்புடைய பத்திரிகைகளை முஸ்லிம்கள் ஓரங்கட்டிவிடும் நாளாக மலரலாம்.

> "உங்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள பெரும்பாவங்களைத் தவிர்ந்து வந்தீர்களானால் உங்களுடைய சின்னஞ்சிறு தவறுகளை உங்கள் கணக்கிலிருந்து நாம் நீக்கிவிடுவோம். மேலும் உங்களை கண்ணியமான இடத்தில் நுழைய வைப்போம்" (அந்நிஸா : 31)

**அல்குர்ஆன் விளக்கம்**

மௌலவி M.H.H.M. முனீர் (முஹம்மதி)

# சிறிய பாவங்கள் மன்னிக்கப்பட...

ஸூரா அந்நிஸாவின் முப்பத்து ஓராவது இவ்வசனம் ஒரு முஸ்லிமின் தனிப்பட்ட பரிபக்குவ நிலை பற்றியும், அவனது மறுமை வெற்றி பற்றியும் பிரஸ்தாபிக்கிறது. இஸ்லாம் என்ற அழகிய வாழ்க்கை நெறியை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் தனது தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என சிலதையும், அறவே வாழ்வில் நிகழக் கூடாது என சிலதையும் இஸ்லாம் ஆக்கியுள்ளது. அவ்வாறு ஆக்கப்பட்ட நல்லவை கெட்டவைகளும் ஒரே தரத்தைச் சார்ந்தவை அல்ல. வீதியில் மனிதர்களுக்குத் தொல்லை கொடுக்கும் ஒன்றை அகற்றி விடுவதும் ஒரு நன்மையான காரியம்தான். ஆனால் அல்லாஹ்வின் பாதையில் ஆயுதம் ஏந்திப் போராடுவதைப் போன்ற ஒன்றல்ல. அது போலவே ஒரு சகோதரனைத் தூற்றுவது குற்றமாகும். ஆனால் கொலை செய்வதைப் போன்ற குற்றமல்ல. எனவேதான் இஸ்லாம் சில குற்றச்செயல்களை சிறிய பாவங்கள் எனவும், இன்னும் சிலதை பெரிய பாவங்கள் எனவும் வகைப்படுத்தியுள்ளது. அவற்றை கண்ணியத்துக்குரிய இமாம்கள் பட்டியல்படுத்தியுள்ளார்கள்.

ஒரு முஸ்லிம் தன்னை முற்றுமுழுதாக பெரும் பாவங்களிலிருந்து விடுவித்து தனது வாழ்வை இஸ்லாத்தின் அரண்களால் பாதுகாத்துக் கொண்டால் அவனது சின்னஞ்சிறு தவறுகளெல்லாம் மன்னிக்கப்பட்டு அவன் சுவனலோகத்து சுகந்தங்களை அனுபவிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வான்.

பெரும்பாவங்கள் என்றால் யாவை, அவை எவ்வாறு, எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பன கவனிக்கத்தக்கவையாகும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அதனை இவ்வாறு வரைவிலக்கணப்படுத்தினார்கள்:

*"எதற்காகவெல்லாம் அல்லாஹ் நரகத்தை சித்தப்படுத்தியுள்ளானோ அவைகளும், செய்ய வேண்டாம் எனத் தடுத்தவைகளும் பெரும் பாவங்கள் ஆகும்"*

இமாம் தாவூஸ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

*"நான் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் 'ஏழு பெரும் பாவங்கள்' யாவை? எனக் கேட்டேன். அதற்கு, 'அவை எழுபது வரையாகும். அதில் மிகவும் நெருக்கமானது ஏழாகும் என்றார்கள்"*

இமாம் அவ்ஸாயி அவர்களும் இக்கருத்தை ஒத்த நிலையையே கொண்டுள்ளார்கள்.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**"பெரும்பாவங்களில் மிகப் பெரியவற்றை உங்களுக்கு அறிவிக்கவா?' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவியபோது, 'ஆம் அல்லாஹ்வின் தூதரே' என்றோம். அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோரைத் துன்புறுத்தல், பொய்சாட்சி கூறுதல், அடுத்தாரை அநியாயமாக கொலை செய்தல் ஆகியவையாகும்' என பதிலளித்தார்கள்"** (புகாரி, முஸ்லிம்)

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**"நரகின்பால் இட்டுச் செல்லும் ஏழு பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற, 'அவை யாவை அல்லாஹ்வின் தூதரே?' என்று வினவப்பட்டது. இணைவைத்தல், சூனியம் செய்தல், முறையின்றி ஒருவரைக் கொலைசெய்தல், அநாதைகளின் சொத்துக்களை விழுங்குதல், விபசாரம் செய்தல், யுத்தகளத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடுதல், முஃமினான பெண்கள் மீது அவதூறு கூறுதல் ஆகியவை' என பதிலளித்தார்கள்"** (புகாரி, முஸ்லிம்)

பெரும் பாவங்கள் பற்றி விளக்கும்போது தப்ஹீமுல் குர்ஆனின் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

*"எந்தளவு நான் அல்குர்ஆனிலும், அஸ்ஸுன்னாவிலும் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தினேனோ அதிலிருந்து, மூன்று நிலைகளில் பெரும்பாவம் தோன்றுவதாகக் கருதுகிறேன். (அல்லாஹ் மிக அறிந்தவன்)"*

**1. ஏதேனும் ஒன்றின் உரிமையை மீறுதல். அது அல்லாஹ்வுக்குரிய உரிமையை மீறுவதாக அமையலாம். அல்லது பெற்றோர் மீதுள்ள உரிமையை மீறுவதாக அமையலாம். ஏனைய மனிதர்களின் உரிமையை மீறுவதாகவும், அல்லது தனது ஆத்மாவுக்கு கொடுக்க வேண்டியதை மறுப்பதாக அமையலாம். அது அதற்குரிய அளவுக்கு உரிமைகள் நிறைவேற்றப்படாத போது அவை பெரும் பாவங்கள் ஆகின்றன. இந்த**

**வகையில்தான் அல்குர்ஆன் "நிச்சயமாக இறைநிராகரிப்பு மாபெரும் அநியாயம்" என்கிறது.**

**2. அல்லாஹ்வின் மீது அச்சமற்றிருத்தல். அவனுக்கு எதிராக பெருமை கொள்ளுதல். அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களை பொருட்படுத்தாதிருத்தல், அவன் தடுத்தவற்றை விரும்பிச் செய்தல். ஏவியவற்றை வேண்டுமென்றே செய்யாதிருத்தல். ஒருவனிடம் எந்தளவு இறைகட்டளைகளுக்கு மாறு செய்யும் துணிவு ஏற்படுகிறதோ அந்தளவு பாவத்தின் அளவும் அதிகரித்து விடுகிறது. இக்கருத்தின் அடிப்படையில்தான் பாவங்களுக்கு 'ஃபிஸ்க்', 'மஃஸியத்' முதலிய சொற்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.**

**3. மனித வாழ்வின் அமைதியும் பாதுகாப்பும் எதன் மீது வரையறுக்கப்பட்டுள்ளதோ அந்த இணைப்புகளைத் துண்டித்துக் கொள்ளலும், வேறு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலுமாகும். அது அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையிலான உறவாக அமையலாம். அல்லது அடியானுக்கும் அடியானுக்குமிடையிலான உறவாகலாம். இந்த இணைப்புகள் துண்டிக்கப்படும் போது அமைதியின்மை, பாதுகாப்புக்குப் பங்கம் முதலியன ஏற்படுகின்றன.**

உதாரணமாக விபசாரத்தையும் அதன் பல்வேறு வடிவங்களையும் நோக்க முடியும். இச்செயல் அதன் இயல்பிலேயே சமூக ஒழுங்கமைப்பை நாசப்படுத்தக் கூடியதாகும். எனவே அது ஒரு பெரும்பாவமாகக் கருதப்படுகிறது. ஒருவர் இன்னொருவருடன் சேர்ந்து செய்யும் பாவங்களில் இது மிகவும் மோசமானதாகும்.

திருமணம் செய்து கொண்டவர்கள் விபசாரத்தில் ஈடுபடுவது ஏனைய எல்லா விபசாரங்களை விடவும் மோசமானது ஆகும். திருமணம் செய்து கொண்ட ஒரு பெண் விபசாரத்தில் ஈடுபடுவது திருமணம் செய்யாத ஒரு பெண் விபசாரத்தில் ஈடுபடுவதை விட மோசமானதாகும். அடுத்த வீட்டுப்

> **"பெரும்பாவங்களில் மூன்றாவது வகை, மனித வாழ்வின் அமைதியும் பாதுகாப்பும் எதன் மீது வரையறுக்கப்பட்டுள்ளதோ அந்த இணைப்புகளைத் துண்டித்துக் கொள்ளலும், வேறு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலுமாகும். அது அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையிலான உறவாக அமையலாம். அல்லது அடியானுக்கும் அடியானுக்குமிடையிலான உறவாகலாம். இந்த இணைப்புகள் துண்டிக்கப்படும் போது அமைதியின்மை, பாதுகாப்புக்குப் பங்கம் முதலியன ஏற்படுகின்றன"**
>
> –மௌலானா மௌதூதி (ரஹ்)–

பெண்ணுடன் விபசாரத்தில் ஈடுபடுவது அவளல்லாத வேறொருத்தியுடன் விபசாரத்தில் ஈடுபடுவதை விட மோசமானது ஆகும். மஹ்ரமிய்யத்தான பெண்களுடன் விபசாரத்தில் ஈடுபடுவது அஜ்னபிய்யத்தான பெண்களுடன் விபசாரத்தில் ஈடுபடுவதை விட மோசமானதாகும்.

இவ்வாறு ஒருபுறம் உறவுகள் துண்டிக்கப்பட்டு, இன்னோர் புறத்தில் தொடர்பு ஏற்படுவதால் பெரும்பாவங்கள் நிகழ்கின்றன. இதனையே 'ஃபுஜூர்' என்ற சொற்பிரயோகம் குறிக்கிறது.

ஒரு முஸ்லிம் தனது பலவீனத்தால் அல்லது சமூக அழுத்தங்களால் ஒரு பெரும்பாவத்தை செய்து விட்டால் அவன் ஷரீஆவின் நோக்கில் எந்நிலையை வகிக்கிறான் என்பது நோக்கப்பட வேண்டியதாகும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் பெரும்பாவங்களில் ஈடுபடுவோரை முஃமின்களாகவே கருதுகின்றனர். அல்லாஹ் விரும்பினால் அவர்களைத் தண்டிப்பான். அல்லது மன்னிப்பான். அவர்கள் பெரும்பாவத்தின் காரணத்தால் நரகில் நிலையாக இருக்க மாட்டார்கள்.

இதற்கு மாற்றமாக வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகளான முர்ஜியாக்கள், முஃதஸிலாக்கள், கவாரிஜ்கள் வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

*"ஒரு நிராகரிப்பாளனது நன்மைகள் அவனுக்கு எவ்வித பயனையும் அளிக்காதது போலவே ஒருவன் ஈமான் கொண்ட நிலையில் செய்யும் பெரும்பாவங்கள் எவ்விதக் கேட்டையும் அவனுக்கு ஏற்படுத்தப் போவதில்லை"* என முர்ஜியாக்கள் கருதுகின்றனர்.

*"பெரும்பாவத்தில் ஈடுபட்டவன் முஃமினுமல்ல, காபிருமல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கிறான். தௌபா செய்யாது மரணித்தால் அவன் நரகில் நிலையாக இருப்பான்"* என முஃதஸிலாக்கள் கூறுகின்றனர்.

*"பெரும்பாவத்தில் ஈடுபட்டவன் காபிர் ஆவான். அவன் நரகத்தில் நிலையாக இருப்பான்"* என்ற நிலைப்பாட்டை கவாரிஜ்கள் கொண்டுள்ளனர்.

இம்மூன்று சிந்தனைப் போக்குகளையும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அறிஞர்கள் மிகவும் வழிகெட்ட சிந்தனைகளாகக் கொள்கின்றனர்.

இவ்வசனத்திலிருந்து விளங்கிக் கொள்ளும் இன்னும் இரண்டு உண்மைகள் என்னவென்றால், ஒரு முஸ்லிம் தன்னை பெரும்பாவங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளும்போது அவனை அது இயல்பிலேயே சிறிய பாவங்களை விட்டும் பாதுகாத்து விடுகிறது. அடுத்ததாக, அல்லாஹ்வின் பரோபகாரத்தையும், காருண்யத்தையும் எடுத்துக் காட்டுகிறது. அவன் எப்போதும் மனிதப் பலவீனங்களை மன்னித்து, வானம் பூமியின் அகலத்தை ஒத்த சுவர்க்கத்தை தனது முஃமினான அடியார்கள் மூலம் நிரப்பவே விரும்புகிறான்.

அல்ஹஸனாத்தில் விளம்பரம் செய்து நீங்கள் பலனைப் பெறுங்கள் எமக்கும் பலனைப் பெற்றுத் தாருங்கள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

"விதவைகள், ஏழைகளுக்காக உழைப்பவர் இறைவழியில் போராடியவரைப் போலாவார். அல்லது இரவில் தொடர்ந்து நின்று வணங்கி பகல் முழுவதும் நோன்பு நோற்றவரைப் போலாவார்"

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) ஆதாரம் : புகாரி

அல்ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க்
H.M. மின்ஹாஜ் இஸ்லாஹி

# விதவைகள் மறுவாழ்வுத் திட்டம்

இஸ்லாம் சமூக வாழ்வுக்கு பாரியளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சமூக வாழ்வில் எப்போதும் பிரச்சினைகளும் தீமைகளும் அன்றாட நிகழ்வுகளாக மாறி விட்டதென்றால், ஒருவர் உண்மையான முஸ்லிமாக நிம்மதியாக வாழ முடியாது. எனவே, இஸ்லாம் சமூகத்திலுள்ள தரப்பினர் அனைவரையும் கருத்திற் கொண்டு அவரவர் கடமைகளை, உரிமைகளை மிகச் சரியாக நிர்ணயித்து சமூக நலன்களுக்கான உத்தர வாதத்தை உறுதிப்படுத்துகிறது.

விதவைகளை கரம் பற்றினார்கள். அன்னை ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்க ளைத் தவிர அன்னார் மணமுடித்த அனை வரும் விதவைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

விதவைகளுக்கான மறுவாழ்வு குறித்த சிந்தனையோடு அவர்களுக்காக பாடுபடு கின்றவர் உண்மையில் ஒரு போராளிதான். அவர் வணக்கவாளியும் கூட. ஏனெனில் தனக்காகவும், தனது குடும்பத்திற்காகவும் சிரத்தை எடுத்து உழைப்பவர் ஏக காலத்தில் விடுதலைகளுக்காகவும் முனைப்புடன்

நெருக்கடிகளும் விதவைகளின் மறுமணம் அல்லது மறுவாழ்வுக்கு தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன. தடைகள் கண்டு தயங்கி நிற்பதை இஸ்லாம் வரவேற்க வில்லை. தடைதாங்கி விதவைகளுக்காக உழைக்குமாறு இஸ்லாம் பணிக்கிறது. இதில் முதல்கட்டமாக விதவைகளுக்கு திருமணம் செய்து வைக்குமாறு திருமறை பணிக்கிறது:

**"(ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்) உங்களில் எவருக்கும்**

ஏழைகள் விதவைகள் என்ற தரப்பின ருக்காக உழைப்பவர் ஒரு போராளியின தும், வணக்க வழிபாட்டில் ஈடுபடுகின்றவரி னதும் அந்தஸ்த்தில் உள்ளார் என ஹதீஸ் எடுத்துரைக்கிறது. விதவைகளின் மறு வாழ்வுக்காக சிரத்தை எடுத்துக் கொள்பவர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வார். எனவே தான், நபியவர்கள் அத்தகையவர்களின் நிலையை உயர்த்திப் பேசியுள்ளார்கள்.

கணவனது நேரடிக் கண்காணிப்பில் அல்லது பொறுப்பில் இருந்த பெண், கணவனின் மரணத்தைத் தொடர்ந்து மீண்டும் பெற்றோர், பாதுகாவலர், கூடப் பிறந்த சகோதர சகோதரிகளின் பொறுப்பின் கீழ் வந்து விடுகிறாள். சிலபோது தனியாக வாழவேண்டிய நிலையும் ஏற்பட்டு விடுகிறது. பெற்றோர், பாதுகாவலர், கூடப் பிறந்த சகோதர சகோதரிகளின் குடும்ப வாழ்வு மிகவும் நெருக்கடிமிக்கதாக அமைந்து விட்டதென்றால் அவளது வாழ்வு பரிதாப கரமானதாக அமைந்து விடுகிறது. இச் சந்தர்ப்பத்தில் பிறர் அவளது விவகாரத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவளது மறுவாழ்வுக் காக ஒருவர் உழைப்பது ஒரு போராட்ட மாகும். அது ஓர் இபாதத்தாகும். விதவை களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தை அறிமுகம் செய்து வைத்த அண்ணலார் அதனை தமது சுயவாழ்வில் அமுல்நடத்திக் காட்டினார்கள். முதலாவதாக கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடித்தார்கள். அவர்கள் ஒரு விதவை. அவ்வாறே இன்னும் பல

செயற்பட வேண்டியிருக்கிறது. விதவைகள் பற்றிய பிரக்ஞையற்ற சமூகத்தில் அவர் களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தில் பங் கெடுப்பதானது வலுவான முன்னெடுப்புகளை வேண்டி நிற்கிறது.

சமூகத்தில் விதவைகள் என்ற தரப்பினர் சொல்லொணா துயரங்களை அனுபவிக்கின்ற னர். கைநீட்டி யாசிப்பவர்களை விட இவர்கள் தாழ்ந்த தரத்திலேயே உள்ளனர்.

இவர்களது வாழ்வியல் முறை தொடர்பில் சமூக உறுப்பினர்கள் கரிசனையற்று இருக் கின்றனர். விதவைகளின் வாழ்வு மேம்பாடு காண வேண்டும் என்ற சிந்தனையின்றி வாழ் வோர் மத்தியில் இது ஒரு சிந்தனையாக கருத்தியலாக முன்வைக்கப்பட்டு ஜனரஞ்சகப் படுத்தப்படல் வேண்டும். இப்பணியில் ஒருவர் -குறிப்பாக இத்தகைய சூழலில்- போராட்டத்து டனேயே தனது பங்களிப்பைச் செலுத்த முடியும். இச்சிந்தனை சமூக அங்கீகாரம் பெறும்வரை முழுமூச்சுடன் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. எனவே இது ஒரு போராட்டமே!

நாம் ஏற்கனவே விவரித்த சமூகச் சூழலில் விதவை மீது மீண்டும் ஒருமுறை மற்றுமோர் ஆணின் பொறுப்புக்கள் வருவதா னது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறது. பலதார மணம் பற்றிய சமூகத்தின் சிவப்புப் பார்வையும், 'மறுமணம் என்பது இழுக்கு' என்ற ஆழ வேர்பதிந்து விட்ட விதவைகளின் மனப்பதிவும், இஸ்லாமிய சிந்தனைப் பின்னணியற்ற முதல் மனைவியின் விடாப் பிடியான உளப்பாங்கும், பொருளாதார

**வாழ்க்கைத் துணையில்லாவிட்டால், அவர்களுக்குத் திருமணம் செய்து விடுங்கள். (அவ்வாறே வாழ்க்கைத் துணைவரில்லாத) உங்கள் அடிமைகளி லுள்ள நல்லோர்களுக்கும் திருமணம் செய்து விடுங்கள். அவர்கள் ஏழைக ளாக இருந்தாலும் அல்லாஹ் தன்னு டைய அருளைக் கொண்டு அவர்களைத் தன்னிறைவு உள்ளவர்களாக ஆக்கி வைப்பான். அல்லாஹ் மிக்க விசால மானவனும் (மனிதர்களின் நிலைமையை) நன்கறிந்தோனுமாக இருக்கிறான்"**

**(ஸூரதுந் நூர்: 32)**

தற்காலிகமாக தனது விவகாரங்களுக் காக தானே பொறுப்புதாரியாக இருந்த விதவை அவசரமாக மீண்டும் மற்றொரு ஆணின் பொறுப்பின்கீழ் வந்துவிட வேண்டும் என்பதே அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாகும். ஒரு பெண் ஓர் ஆணின் துணையின்றி நிர்வாகப் பொறுப்பை நிறைவேற்றுவது சிரம சாத்தியமான ஒன்றாகும். நிர்வாக இயந்திரம் சீராக இயங்க பொருளாதாரம் இன்றியமையாததாகும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி பாராமரிப்புச் செலவைப் பொறுப்பேற்று குடும்பம் வறுமைக் கோட் டுக்குக் கீழ் சென்று விடாது அதனைப் பாதுகாக்கும் அரணாக கணவன் இருக்கி றான். பெண்ணுக்கு இப்பொறுப்பு வழங்கப் படவில்லை. இதனையே அல்குர்ஆன் இப்படிச் சொல்கிறது:

**“பெண்களின் நிர்வாகிகளாக ஆண்களே இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் ஒருவரை விட மற்றவரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான். அன்றி, (ஆண்களாகிய) அவர்கள் பெண்களுக்காக செலவு செய்கின்றனர்”**

**(ஸூரதுந் நிஸா : 34)**

விதவை தனக்காக அல்லது தனது பிள்ளைகளுக்காக சுயஉழைப்பை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஓர் ஆணின் தரத்தில் நின்று இதனை மேற்கொள்வது விதவையைப் பொறுத்த மட்டில் சிரமசாத்தியமான விடயமே. இவ் வேளையில் ஷரீஆவின் சட்ட வரம்புகளை மீறி பொருளீட்டல் நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிர்க்கதியான நிலைக்குள்ளாகி விடுகிறாள் விதவை. இருந்தாற்போல கிடைக்கப் பெறும் நிவாரணங்கள், நன்கொடைகள், அன்பளிப்புகள் நிரந்தரத் தீர்வாக அமைய மாட்டாது. புதியதொரு ஆணின் பரிபாலிப்பின் கீழ் வாழ்வதே இதற்கான நிரந்தரத் தீர்வாகும்.

அவ்வாறே ஒரு பெண் குமரிப் பருவத்தில் விதவையானால் அவள் உடலியல் தேவைகளை அடக்கிக் கொண்டு வாழத் தலைப்படுகிறாள். உயரிய ஈமானும், பலம் வாய்ந்த இறையச்சமும் உள்ளவர்களைத் தவிர மற்ற பெண்கள் இவ்விடயத்தில் தவறிழைத்து விடுகின்றனர். காமுகர்களும், உள்ளத்தில் நோயுள்ளவர்களும் விதவைகளின் நிர்க்கதியான நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுடன் ஷரீஆ அனுமதிக்காத வழிகளில் படுமோசமான தகாத உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். விபசாரம் போன்ற சமூகத் தீமைகள் உருவாக இது ஏதுவாக அமைந்து விடுகிறது. எனவேதான் உமர் இப்னுல் கத்தாப் (ரழி) அவர்கள் தமது ஆட்சிக் காலப் பிரிவில் சமூகத் தீமைக்கான ஆணிவேர்களை இனங்கண்டு களைந்தெறிந்தார்கள். ஸைத் இப்னு அஸ்லம் அவர்கள் வழியாக அபூ ஹப்ஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“மதீனாவைக் காவல் காக்கும் பொருட்டு மாறுவேடத்தில் வலம் வந்த உமர் (ரழி) அவர்கள் ஒரு வீட்டில் உள்ள ஒரு பெண் இவ்வாறு கவி பாடியதை செவிமடுத்தார்கள்:

**காரிருள் நீண்டு செல்கிறதே**
**கொஞ்சிக் குலாவி விளையாட-**
**பிரியமுள்ள கணவன் இல்லையே!**
**இறையச்சம் மட்டும் இல்லையெனில்**
**கட்டில் கால்கள் அசைந்திடுமே**
**என்றாலும் இறைஉணர்வும் நாணமும்**
**என்னைப் போர்த்திருக்கும்**
**கணவன் வாகனம்**
**பிறரால் சவாரி செய்யப்படாது**
**அவர் மானம் காப்பேன்!**

> பலதார மணம் பற்றிய சமூகத்தின் சிவப்புப் பார்வையும், மறுமணம் என்பது இழுக்கு என்ற ஆழ வேர்பதிந்து விட்ட விதவைகளின் மனப்பதிவும், இஸ்லாமிய சிந்தனைப் [illegible] முதல் மனைவியின் விடாப்பிடியான உளப் [illegible] பொருளாதார நெருக்கடிகளும் விதவைகளின் மறுவாழ்வுக்கு தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன.

இவளைப் பற்றி கலீபா அவர்கள் விசாரித்தார்கள். ‘அல்லாஹ்வின் பாதையில் போராடச் சென்ற கணவனைப் பிரிந்து வாழும் பெண்’ என அவர்களிடம் கூறப்பட்டது. உடனே அவளை தன் வீட்டில் வந்து இருக்கும்படி அவளுக்கு கூறி அனுப்பி விட்டு, போராடச் சென்ற அவளது கணவனை நோக்கி ஒருவரை அனுப்பி அவரை வரவழைத்தார்கள். பின்னர் தனது மகள் ஹப்ஸாவிடம் சென்று, ‘மகளே! ஒரு பெண் கணவனைப் பிரிந்து எத்தனை நாட்கள் பொறுமையுடன் இருப்பாள்?’ எனக் கேட்டார்கள். ‘ஸுப்ஹானல்லாஹ்! உங்களைப் போன்றவர்கள் என் போன்றவரிடம் இவ்வாறு கேட்கலாமா?’ என ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நாணத்துடன் கேட்டார்கள். ‘இதில் முஸ்லிம்களுக்கு நலன் இருக்கிறது என நான் கருதியிருக்காவிட்டால் உன்னிடம் இதுபற்றிக் கேட்டிருக்க மாட்டேன்’ என உமர் (ரழி) அவர்கள் பதில் அளித்தார்கள். அதற்கு ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ‘ஐந்து அல்லது ஆறு மாதங்கள்தான் ஒரு பெண் கணவனைப் பிரிந்து பொறுமையுடன் இருப்பாள்’ என்றார்கள். எனவே, கலீபா அவர்கள் யுத்தத்திற்காக செல்வதற்கு ஒரு மாதமும், திரும்பி வருவதற்கு ஒரு மாதமும் தங்கியிருப்பதற்கு நான்கு மாதமும் என மனிதர்களுக்கு காலத்தை நிர்ணயித்து சட்டம் பிறப்பித்தார்கள்.”

(பிக்ஹுஸ் ஸுன்னா : 2ம் பாகம், 324ம் ப)

எனவே ஒரு விதவையின் உணர்வுகளை ஹறாத்தை விட்டும் பாதுகாக்கும் நோக்குடன், அவளுக்கு மறுமணம் செய்து வைக்க பொறுப்புதாரர்கள் முன்வர வேண்டும். திருமணம் செய்து கொள்ள பலதார மணத்திற்கு தகுதியும், தகைமையும் உள்ளவர்கள் முன்வர வேண்டும். சமூகப் பெறுமானம் இழந்து நிற்கும் விதவைகள் விவகாரத்தை கவனிக்க முன்வருவோர் சமூகத்தின் சிவப்புப் பார்வையை ஊடறுத்தே வரவேண்டியுள்ளது. இது அர்ப்பணத்துடன் கூடிய ஒரு போராட்டமே!

இந்த வகையில் கணவனின் முதல் மனைவியின் உளப்பூர்வமான ஒத்துழைப்பும் கூட விதவைகள் விவகாரத்தில் சிரத்தை எடுப்பதாகவே அமையும். ஒரு கணவன் மறுமணம் செய்து கொள்வது அவளது ரோஷ உணர்வுடனும், கணவன் மூலம் தனக்கு வரும் வருமானத்துடனும் சம்பந்தப்பட்டது. இதனை பின்வரும் நபிமொழி விளக்குகிறது: அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“ஒருவர் தனது சகோதரருக்கு எதிராக திருமணப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதையும், அவருக்கு எதிராக வியாபாரம் செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். மேலும் ஒரு பெண் தனது கணவனின் வருமானத்தை தான் மட்டும் போதியளவு அனுபவிப்பதற்காக அவரது அடுத்த மனைவியை விவாகரத்து செய்யுமாறு கோரலாகாது என்றும் நபியவர்கள் கூறினார்கள்”**

**(புகாரி, முஸ்லிம்)**

அவ்வாறே, விதவையை மறுமணம் செய்து கொள்ள முன்வருவோரும் தமது ஏனைய மனைவியருடன் நீதமாக நடந்து கொள்ள வேண்டும்.

**“(விசுவாசிகளே! உங்களுக்கு மனைவியர் பலரிருந்தால்) நீங்கள் (உங்கள்) மனைவியர்களுக்கிடையில் (முற்றிலும்) நீதமாக நடக்க வேண்டுமென்று (எவ்வளவு) விரும்பிய போதிலும் (அது) உங்களால் சாத்தியப்படாது. ஆனால் (ஒரே மனைவியின் பக்கம்) நீங்கள் முற்றிலும் சாய்ந்து மற்றவளை (அந்தரத்தில்) தொங்கினவளாக விட்டுவிடாதீர்கள்...”**

**(ஸூரதுந் நிஸா : 129)**

விதவையின் பொறுப்புதாரிகள் அவளுக்கு மறுவாழ்வளிக்க முன்வருவோர் முதலான அனைத்துத் தரப்பினரும் அவளுக்காக உழைப்பவர்களே! அவர்கள் அனைவரும் இறைவழியில் போராடுபவர்களே! அவர்கள் அனைவரும் வணக்கவாளிகளே! இபாதத்துகளில் ஸுன்னாவை உயிர்ப்பிக்க உற்சாகம் பெறும் அனைவரும் சமூகவியலிலும் ஸுன்னாவை உயிர்ப்பிக்க முனைப்புடன் முன்வருவார்களாக!

**துணைநின்றவை :**
**பத்ஹுல் பாரி, பிக்ஹுஸ் ஸுன்னா**
**மின்ஹாஜுஸ் ஸாலிஹீன்**
**ரியாளுஸ் ஸாலிஹீன்**

# இனப்பிரச்சினை விவகாரத்தில் முஸ்லிம்கள் சார்பாக தலைதூக்கும் புதிய ஆட்டக்காரர்கள்!

**- நாஸிஹ் அமீன் -**

இலங்கை முஸ்லிம் சமூகம், சமாதான முயற்சிகள் களைகட்டத் தொடங்கியதுடன் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. குறிப்பாக இனப்பிரச்சினை சார்ந்து முஸ்லிம் அரசியல் அரங்கில் ஏற்பட்டு வரும் இம்மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் முஸ்லிம் உம்மத் முகம்கொள்ளும் துரித மாற்றங்களுடன் தொடர்புபட்டவை ஆகும்.

கடந்த செப்டெம்பர் 11 தாக்குதலின் பின் அமெரிக்கா கோடிட்டு இரண்டு வகுப்பினரை பிரித்துக் காட்டியது: முதலாவது வகுப்பினர், எம்முடன் (அமெரிக்காவுடன்) இணைந்துள்ளோர். இதில் முஸ்லிம் நாடுகளின் மன்னர்களும், ராணுவத் தளபதிகளும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தாத ஆட்சியாளர்களும் உள்ளடங்குவர். இக்குழுவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை அங்கீகரித்த அனைத்து நாடுகளும் - இலங்கை உட்பட- இடம்பிடிக்கின்றன. இவர்கள் அனைவரும் அமெரிக்காவின் நேசர்கள். இரண்டாவது வகுப்பில் இஸ்லாமும், முஸ்லிம் உலகிலுள்ள பொதுமக்களும், அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிராகரித்துள்ள ஏனைய பிரஜைகளும் நாடுகளும் அடங்குகின்றன. இவர்கள் மனிதநேயத்தை மதிக்கும் உலகத்தின் எதிரிகள். *"நீங்கள் எம்முடன் இல்லையென்றால் அவர்களுடன்தான் இருக்கின்றீர்கள்"* என ஜோர்ஜ் புஷ் முழங்கியதன் கருத்து இதுதான்.

அமெரிக்காவின் மேற்படி நிலைப்பாட்டுக்கும் இலங்கை முஸ்லிம் அரசியல் அரங்கில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை எளிதில் அனுமானிக்க முடிகிறது. இவ்வனுமானம் கற்பனையில் உதித்த ஒன்றல்ல. விவகாரங்கள் செல்லும் திசை, பதிலாக ஏற்படும் புதிய மாற்றங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்ட கருதுகோள்களாகும்.

இலங்கை அமெரிக்காவின் பிரதான அச்சுறுத்தல் வலயமாக கணிக்கப்படுவதில்லை. மத்திய கிழக்கும் முஸ்லிம் நாடுகளும், சீனா போன்று வளர்ந்து வரும் சர்வதேச சக்திகளுமே அவ்வாறு கணிக்கப்படுகின்றன. அமெரிக்கா இலங்கை விவகாரத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டாமல் இருந்ததற்கான காரணம் சர்வதேச அரங்கில் எமது நாட்டுக்கு இருந்த முக்கியமற்ற ஸ்தானமாகும். ஆனால் செப்டெம்பர் 11ம் திகதிய நிகழ்வின் பின் அமெரிக்காவுக்கு இலங்கையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் ஸ்திரமற்ற நிலை மற்றும் தனது இருப்புக்கு உள்ள எதிர்கால அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தனது தந்திரோபாயங்களை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்து வருகிறது.

இந்து சமுத்திரத்தையும் தூர கிழக்குப் பிரதேசத்தையும் தனது கண்காணிப்பின் கீழ் வைத்துக் கொண்டு பொலிஸ்காரன் வேலை செய்வதற்கு அமெரிக்கா, மத்திய கிழக்கையோ பாகிஸ்தானையோ அல்லது ஆப்கானிஸ்தானையோ நம்பி இறங்க முடியாதென்ற தீர்மானத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால் அது இலங்கையை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முனையாக (Strategic Point) கருதுகிறது.

திருகோணமலையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகப் பிரதேசம் அமெரிக்காவின் பிரத்தியேகமான கவனத்தை ஈர்த்துள்ளது. இத்துறைமுக விவகாரம் மிக நீண்ட காலமாக அமெரிக்காவின் சிந்தனையில் ஊசலாடிக் கொண்டுதான் இருந்தது. எனினும் செப்டெம்பர் 11ம் திகதி தாக்குதலுக்குப் பின் இதில் அமெரிக்காவின் ஆர்வம் பன்மடங்கு அதிகரித்ததை அவதானிக்கலாம். டிஸம்பரில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடைத்த தேர்தல் வெற்றி அமெரிக்காவுக்கு வாய்ப்பை விரிவுபடுத்திக் கொடுத்தது. இதன் விளைவாக திருகோணமலையில் அமெரிக்கா வந்திறங்கப் போவது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் STRATFOR (3 April 2002) எனும் செய்தி ஊடகத்தின் கூற்றுப்படி இலங்கை அரசுக்கும் தமிழ் தீவிரவாதிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்த பரஸ்பரம் நம்பிக்கை வளர்க்கும் நடவடிக்கைகள் ஆகியன அமெரிக்காவுக்கு உற்சாகத்தை ஊட்டி அதன் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளன. ஆகையால் LTTE யின் அச்சுறுத்தலிலிருந்து நீங்கிய ஒரு களமாக திருகோணமலையை அது கருதுகிறது

எனினும், வேறொரு மறைமுகமான எதிரி குறித்து அமெரிக்க ராணுவ கொள்கை வகுப்பாளர்கள் எச்சரிக்கையடைந்து முற்சுறுசுறுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எதிரி அற்பளவு பலமுள்ளவனாக இருந்தாலும், தலைதூக்க விடக்கூடாது என்ற அமெரிக்காவின் முற்பாதுகாப்பு நடத்தைதான் இதற்கான காரணம். இஸ்லாமிய எழுச்சியே அமெரிக்காவின் தற்போதைய முதல் தர எதிரி. எனவே அது நசுக்கப்பட வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்பு இவ்வாறான ஒரு சூழல் இருந்திருப்பின் அமெரிக்கா தனது ராணுவ வல்லமை கொண்டு இலங்கை அரசின் துணையுடன் இஸ்லாமிய எழுச்சியை புதைகுழிக்கு அனுப்பும் கைங்கரியத்தை சிறப்பாக நிறைவேற்றியிருக்கும். ஆனால் இப்போது கள நிலவரம் முற்றிலும் மாறியுள்ளது. ராணுவ வல்லமையைக் கொண்டு நசுக்க முயல்வது அதிகளவிலான பொருளாதார மற்றும் மனித வளத்தை விரயமாக்கும் காரியமென அவர்கள் கருதுகின்றனர். எனவே 'சாத்வீகமான' வழிகளைக் கொண்டு எதிரியின் அணிக்குள் கொள்கை மோதலையும் சிக்கலையும் தோற்றுவித்து, அவர்கள் தமக்கிடையில் சண்டையிட்டுக் கொள்ளும் நிலையை

> "International Alert நிறுவனம் ஈடுபட்டு வரும் எமது நாட்டுக்கு எதிரான நடவடிக்கைககள் குறித்து நான் அதிக கவலையடைந்துள்ளேன். குறிப்பாக அதன் பிரதான இரு உறுப்பினர்களான திரு. குமார் ரூபசிங்ஹ, திரு. அட்டல் ஸப்போ ஆகியோரின் நடவடிக்கைகள் அதிருப்தியாக அமைந்துள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேல் சென்று எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடு செய்கின்றனர்"

உருவாக்குதல் அல்லது அவர்களது சிந்தனைகளையும் முயற்சிகளையும் திசைதிருப்புதல் என்ற பலமுனை வழிமுறையை கையாண்டு வருகிறது. இவ்வழிமுறையானது வளவிரயம் குறைந்ததும் நீண்டகாலப் பலனைத் தரக்கூடியதுமாகும்.

இனி, இலங்கையில் அமெரிக்கா யாரை தனது இலக்காகக் கொண்டுள்ளது என்ற கேள்வி எழலாம். அதேபோல் இலங்கையில் இஸ்லாம் உண்மையாகவே எழுச்சி பெறுகிறதா? அந்த எழுச்சியின் ஓட்டுநர்கள் யார்? போன்ற விடயங்களுக்கும் விடைகாண வேண்டியுள்ளது. தற்போது முழு உலகமும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமிய எழுச்சியின் தாக்கம் இலங்கையிலும் பிரதிபலிக்கிறது என்பதை மறைக்க முடியாது. இதன் பின்னணியில் உள்ள பல முஸ்லிம் அமைப்புகளையும், தனிமனிதர்களையும்,

- இனங்காணுதல்
- அவர்களது முயற்சிகளை பல்வேறு வழிகளினூடாக முனைப்பிழக்கச் செய்தல்.
- இவ்வமைப்புக்களின் சிந்தனையையும், கவனத்தையும் திசைதிருப்பும் நோக்குடன் அவர்களுக்கு முக்கியமற்ற நிகழ்ச்சித் திட்டங்களில் அவர்களை ஈடுபடச் செய்தல்.
- இத்தகைய பணிக்காக முஸ்லிம்களுக்கு மத்தியில் ஆட்களையும் நிறுவனங்க ளையும் உருவாக்கி ஏவிவிடல்.

போன்ற தந்திரோபாயங்களை அது கையாளும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏதாவது ஒரு வகையில் பலவீனப்படுத்தப்பட வேண்டிய ஓர் அமைப்பாக இவ்விதம் இனங்காணப்பட்டிருக்கலாம். மு.கா. இஸ்லாமிய எழுச்சிக்கு நேரடியாக பாரியளவில் பங்களிப்புச் செய்யும் ஒரு சக்தியாக இல்லாவிட்டாலும், திருகோணமலையில் அமெரிக்காவின் இருப்புக்கு ஒரு காலத்தில் அச்சுறுத்தலாக அமையலாம் எனக் கருதப்படுகிறது. இதேபோல் வேறு அமைப்புக்களும் தனிமனிதர்களும் CIA இன் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருக்கலாம்.

இவ்வாறு கருவறுக்கப்பட வேண்டியவை என இனங்காணப்பட்ட அமைப்புக்களுடன் இணைந்து செயலாற்றும் மனிதர்களை விலைக்கு வாங்கி, அவர்களது அந்தஸ்தையும் செல்வாக்கையும் பல்வேறு வழிகளினூடாக உயரச் செய்து அவர்களைக் கொண்டு தமது பணிகளை பூர்த்திசெய்து கொள்ளும்.

இத்தகையோர் முஸ்லிம் அணிகளுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டு, பல்வேறு புதிய பிரச்சினைகளை உருவாக்கி, பயன்தராத சில காரியங்களை முன்னுரிமை மிக்க காரியங்களாக மாற்றி, அமைப்புகளின் வளங்களை அதில் மூழ்கடிக்கச் செய்து விடுவார்கள். விளைவாக முஸ்லிம் அமைப்புகள் முனைப்பிழந்து விடும்.

திருகோணமலையில் தனது நீண்டகால செயற்திட்டம் தாக்குப்பிடிக்க வேண்டுமானால் முஸ்லிம் உம்மத்தின் மத்தியில் காணப்படும் ஜிஹாதிய உணர்வை மங்கவைக்க வேண்டுமென அமெரிக்கா கருதுகிறது. ஜிஹாதிய உணர்வு, உரிமைப் போராட்டம், சமூக எழுச்சி, சீர்திருத்தம் போன்றவற்றை சுலோகங்களாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள் இலங்கையில் இருப்பது அமெரிக்காவுக்கு ஆபத்தானது. எனவே எமது சமூகத்தில் ஆங்காங்கே அலைந்து திரியும் எட்டப்பர்களும், புல்லுருவிகளும் அமெரிக்காவின் இப்புனித பணிக்கு துணைபோகவுள்ளனர்.

திருகோணமலை முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் அமெரிக்காவுக்கு இன்னுமொரு விடயம் அதிக கரிசனை மிக்கதாக அமைகிறது. அதுதான் அங்குள்ள முஸ்லிம் சனத்தொகை! சென்ற வருடம் எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின்படி திருகோணமலையின் 11 செயலாளர் பிரிவுகளுள் 7 பிரிவுகளில் முழுமையான கணக்கெடுப்பு நடைபெற்றது. அதன் பிரகாரம் அம்மாவட்டத்தின் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். (Dept. of Census and Statistics Sri Lanka Vol.2001/3) இந்த விவகாரமும் அமெரிக்க ராணுவ கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது எனலாம்.

CIA தனது திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஒருபோதும் நேரடியாக களத்தில் இறங்குவதில்லை. மாறாக இத்தகைய வேலைகளுக்காக CIA யினால் உருவாக்கப்பட்ட முன்னணி நிறுவனங்களைக் (Frontline Organizations) கொண்டே அமுல்படுத்துகிறது. தலைமையகங்களை பொதுவாக அமெரிக்காவில் வைத்திருப்பதுமில்லை. உலகின் வேறு பிரதேசங்களிலிருந்தே இயங்குகின்றன. இவற்றின் சுலோகங்களாக மனித உரிமை, பெண்ணுரிமை, சிறுபான்மையினரின் பாதுகாப்பு, சர்வமத சமாதானம் போன்றவை அமைந்திருக்கும். இவை பல நாடுகளில் அரச சார்பற்ற நிறுவனங்களாக (NGO's) பதிவுசெய்யப்பட்டிருக்கும். CIA க்காக கீழ்மட்டத்தில் பணிவிடை செய்யும் எட்டப்பர்களுக்கு மேற்படி நிறுவனங்களுடன்தான் தொடர்பிருக்கும். சிலவேளை தாம் யாருக்காக வேலை செய்கிறோம் அல்லது யாரால் இயக்கப்படுகிறோம் என்பது கூட இவர்களுக்குத் தெரியாதிருக்கலாம். இவ்விதம் காணப்படும் CIA யின் முன்னணி நிறுவனங்கள் போன்று பல நாடுகளில் முன்னணி மனிதர்களையும் விலைக்கு வாங்கியுள்ளது. அமைச்சர்களாக, நிர்வாகத்துறை சார்ந்தவர்களாக முதலீட்டாளர்களாக அல்லது வேறு துறைகளில் பிரபல்யம் மிக்கவர்களாக இவர்கள் இருப்பர். நாடுகளின் கொள்கை வகுப்பு, பொருளாதார சீர்திருத்தம் மற்றும் ஆட்சி நிர்வாகம் போன்றவற்றில் இவர்கள் செல்வாக்குச் செலுத்தி அமெரிக்காவுக்குத் தேவையான விதம் அவற்றை மாற்றியமைத்துக் கொடுப்பார்கள்.

சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட Report of the Sinhala Commission- Part -II இல் இவ்விதமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒரு நிறுவனம்தான் International Alert என்பதாகும். இவ்வமைப்பு இங்கிலாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்குகிறது. மேற்குறிப்பிட்ட அறிக்கை இவ்வாறு கூறுகிறது: (50➡)

## த.்.வா களம் :

'மரணம்' மனித வாழ்வின் முற்றுப்புள்ளி அல்ல, அது ஒரு 'கொமா'வாகும். மனித வாழ்க்கை பல 'கொமா'க்களைத் தாண்டிச் செல்லும் ஓர் அற்புத வாழ்வாக இருக்கிறது. ஏனைய படைப்பினங்களின் வாழ்க்கையிலிருந்து மனித வாழ்வை வேறு படுத்தும் சிறப்பம்சங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ரூஹின் ஒரு ஊதுகையும், மண்ணின் ஒரு பிடியும் அற்புதமாக கலப்புச் செய்யப் பட்டு உருவாக்கப்பட்ட மகத்தானதொரு படைப்பே மனிதன்.

**"நான் அவனை வடிவமைத்து எனது ரூஹை அவனில் ஊதினால் (மலக்குகளே!) நீங்கள் அவனுக்கு சிரம்பணிய வேண்டும்"**

**(அல்குர்ஆன்- 12:29)**

மனிதனுக்குள் ஊதப்படுகின்ற அவனது (ஆன்மா) ரூஹ் ஏனைய எந்தப் படைப் புக்கும் வழங்கப்படாத ஒரு பிரத்தியேக அருட்கொடையாகும்.

இங்கே நாம் மற்றோர் உண்மையையும விளங்கிக் கொள்ள முடிகிறது. ஒரு மனிதனது ஆன்மா கர்ப்பத்துக்கு கொண்டுவரப்படுவதற்கு முன்பதாக ஒரு வாழ்க்கை நிலையைப் பெற்றிருக்கிறது. இந்தக் கட்டத்தை மனித வாழ்வின் முதல் கட்டம் என்று குறிப்பிடுவதே மிகவும் பொருந்தும்.

மனித வாழ்வின் இரண்டாவது கட்டமாக தாயிடம் கர்ப்ப வாழ்வைக் குறிப்பிடலாம். மூன்றாவது நிலையில்தான் மனிதன் உலகத்துக்கு வருகை தருகிறான்.

மனிதனின் நீண்ட வாழ்க்கைப் பயணத் தில் இன்னும் பல கட்டங்களையும் அவன் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

மீண்டும் அவனது ஆன்மா உடலிலிருந்து பறிக்கப்படுகிறது. அது அவனது வாழ்வின் நான்காவது நிலை. அதன் பின் மஹ்ஷர் மைதானத்தில் அவன் எழுப்பப்படுகிறான். அங்கே ஆயிரம் வருடங்களுக்கு நிகரான நாட்களை எண்ணி எண்ணி அந்த மஹ்ஷர் வாழ்க்கையை அவன் அனுபவிக்க வேண்டும். இது அவனது வாழ்வின் ஐந்தாவது கட்டம். அதைத் தொடர்ந்து வழங்கப்படுகின்ற தீர்ப்பு,

இந்த இரண்டு அம்சங்களில் கவனம் செலுத்தும் பொறுப்புடன் எமது பயணத்தின் திசையைத் தீர்மானிக்கும் சுதந்திரமும், அத்திசையில் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் கடிவாளமும் எமது கைகளிலேயே தரப்பட்டுள்ளன.

ஆனால் இந்த சுதந்திரமும் கடிவாளமும் மரணம் வரையில்தான் எமது உடமை களாக இருக்கும். அதற்கு அப்பால் எமது பயணத்தையோ, திசையையோ தீர்மானிக்கும் அதிகாரம், உரிமை எங்களிடமிருக்க மாட்டாது. அதாவது மரணத்திற்குப் பிறகு நாம் வழிநடத்தப்படுவோம். நாம் எதனையும் வழிநடத்த முடியாது.

இந்த வகையில் மனிதனின் நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் அனைத்து சுதந்தி ரங்களும் தரப்பட்டிருக்கும் 3ம் கட்ட வாழ்க்கை (உலக வாழ்க்கை) முக்கியத்து வம் பெறுகிறது. இந்த வாழ்க்கைக் கட்டத்தை மனிதன் ஒருமுறை மட்டும்தான் கடந்து செல்ல முடியும். இந்தக் கட்டத்தை கற்பனைகளோடும் உல்லாசங்களோடும் அல்லது கவனயீனங்களோடும் பொழுது

# மரணம் வாழ்வின் முற்றுப்புள்ளியல்ல!


உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்


இந்த 'ரூஹ்' முதல் மனிதன் ஆதம் (ﷺ) அவர்களுக்கு ஊதப்பட்டது போலவே ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறாக ஊதப்படுகிறது என்பதை நாம் நபி மொழிகளில் காணுகிறோம்.

**"உங்களில் ஒரு மனிதனது உற்பத்தி அவனது தாயின் கர்ப்பத்தில் நாற்பது நாட்கள் இந்திரியமாகவும், அதேபோன்று ஒட்டிக்கொண்டிருக்கும் அட்டை போன்றும், அதேபோன்று சதைக் கட்டியாகவும் ஒன்று சேர்க்கப்படுகிறது. பின்னர் ஒரு மலக்கு அனுப்பப்படுகிறார். அவர் அதில் ரூஹை ஊதுகிறார்...."**

**அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (ரலி)**
**ஆதாரம்: புகாரி, முஸ்லிம்**

இந்த நபிமொழி ஓர் உண்மையை உணர்த்துகிறது. 'கரு' விருத்தியடையும் நான்காவது மாதத்தில்தான் (40 நாட்கள் எனும் கருத்தும் உண்டு) ரூஹ் ஊதப்படு கிறது என்பதால் 'ரூஹ்' என்பது உயிராக இருக்க முடியாது. ஏனெனில் 'ரூஹ்' இல்லாத நிலையிலும் நான்கு மாதங்களாக 'கரு' விருத்தியடைந்திருக்கிறது. உயிர் இல்லாத ஒன்று எவ்வாறு விருத்திடையலாம்?

ஒன்றில் சுவனம் அல்லது நரகம் என்ற இறுதிக் கட்டத்துக்கு மனித வாழ்வை இட்டுச் செல்கிறது.

இனி அந்த இறுதிக்கட்ட வாழ்வு எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது என்பதை அல்லாஹ் ஒருவனே அறிவான். குர்ஆன் பல இடங்க ளில் அந்த இறுதிக்கட்ட வாழ்க்கை நிரந்தர மானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் வந்தடைகின்ற மூன்றாவது -அதாவது நாம் இப்போது அனுபவிக்கின்ற உலக வாழ்வு- மிகவும் முக்கியமானதும் பாரதூரமானதும் ஆகும். மனித வாழ்வின் நீண்ட பயணத்தோடு ஒப்பிடும்போது உலக வாழ்க்கை மிகவும் குறுகியது என்றாலும் அதன் முக்கியத்துவம் எந்த வகையிலும் குறைந்ததல்ல. காரணம் இங்கே இரண்டு விடயங்களை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

1. **வாழ்வின் அடுத்தடுத்த கட்டங்களும் இறுதி இலக்கு வரையிலான பயணமும். (இவை மரணத்திற்கு அப்பாலுள்ள விடயங்கள்)**
2. **உலகில் எம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளும், கடமைகளும் (இவை மரணம் வரையுள்ள விடயங்கள்)**

போக்குகளோடும் அல்லது சாகசங்களோடும் சாதனைகளோடும் அல்லது மயக்கங்க ளோடும், குழப்பங்களோடும் அல்லது தெளிவுகளோடும் சீரிய நடைமுறைகளோடும் மனிதன் கடந்து செல்ல முடியும். ஆனால் ஒருமுறை மட்டுமே! அந்த ஒருமுறையில் தான் விட்ட தவறுகளைத் திருத்தி தன்னை மீளமைத்துக் கொள்வதற்காக மீண்டும் மனிதன் உலகத்துக்கு வரமுடியாது.

உலக வாழ்க்கை நீர்க்குமிழியைப் போல வேகமாக மறைந்து போகும் தன்மையுடையதாக இருப்பினும் அதன் முக்கியத்துவம் ஏனைய கட்டங்களைவிட எந்த வகையிலும் குறைந்ததல்ல. எனவே இந்தக் கட்டத்தை எவ்வாறு அணுகலாம் என்பதை நோக்குவோம்.

மனித வாழ்க்கையின் பல கட்டங்கள் மரணத்திற்குப் பின்னால் காணப்படுகின்றன. அந்தக் கட்டங்களைக் கடந்து தனது பயணத்தைத் தொடர விரும்பும் மனிதன் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள

வேண்டும். அந்த உண்மை இதுதான். மரணம் முதல் சுவனம் வரை 'தனிமை'யே துணை. அங்கு உதவிகளும் பக்கபலங்களும் இருக்க மாட்டா. மஹ்ஷர் மைதானத்திலும் கூட ஒரு மனிதன் தனது தாய் தந்தையர், உறவினர் போன்றோரை அலட்சியம் செய்து விடுவான்.

மரணத்திற்கு அப்பாலிருக்கும் இந்தத் தனிமைக்குப் பரிகாரம் காண விரும்பினால் அதன் பொறுப்புக்களை ஒவ்வொரு மனிதனும் சுயமாக சுமந்து கொள்ள வேண்டும். உலகில் ஆற்ற வேண்டிய பொறுப்பு வாய்ந்த கடமைகளுள் இதுவும் ஒன்று. இதற்காக உலகில் ஒரு மனிதன் என்ன செய்யலாம்? அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

**"தனது இரட்சகனின் சந்நிதியைப் பயந்து தனது உள்ளத்தை (தனது சொந்த விருப்பு வெறுப்புக்கள் எனும்) மனோஇச்சைகளிலிருந்து தடுத்துக் கொள்பவன் எவனோ அவன் ஒதுங்கும் தலம் சுவனமே"**

உலகில் தனிமனித வாழ்வை அல்லாஹ் ஒரு பெரும் போராட்டத்திற்கு முன்னால் நிறுத்தியிருக்கிறான். அந்தப் போராட்டத்தை ஒவ்வொரு மனிதனும் தனக்குள் நிகழ்த்தி யாக வேண்டும். அந்தப் போராட்டத்தில் ஒன்றோடொன்று மோதுகின்ற இரண்டு படையணிகள் இருக்கின்றன.

1. **மனிதனின் சொந்த விருப்பு வெறுப்புகள் (ஆசைகள்)**
2. **அல்லாஹ்வின் விருப்பு வெறுப்புகள் (ஏவல் விலக்கல்கள்)**

ஒரு மனிதனின் உள்ளத்தில் இந்த இரண்டு படையணிகளும் மோதி ஒன்றை யொன்று ஜெயிக்க முயலுகின்றன. எதை எது வெற்றி கொள்கிறது என்பதில்தான் மரணத்திற்குப் பின்னாலுள்ள வாழ்வின் மகிமை தங்கியிருக்கிறது.

மனிதனின் விருப்பு வெறுப்புக்கள் அல்லாஹ்வுடைய விருப்பு வெறுப்புகளுடன் இணங்கிச் சென்றால் தவறில்லை. இணங்க மறுத்தால் அங்குதான் போராட்டம் ஆரம்ப மாக வேண்டும். அந்தப் போராட்டத்தில் அல்லாஹ்வின் விருப்பு வெறுப்புகள் மிகைத்து அவற்றைப் பின்பற்றுகின்ற நிலைக்கு மனித னின் விருப்பு வெறுப்புகள் ஆக்கப்பட்டால் மட்டுமே மரணத்திற்குப் பின்னாலுள்ள வாழ்க்கையை மனிதன் நிம்மதியாகத் தொடரலாம்.

மனிதன் செய்கின்ற நற்செயல்களில் கூட அவன் இத்தகையதொரு போராட்டத்திற்கு முகம் கொடுத்தாக வேண்டும். செயல் நல்லதாக இருப்பினும் விருப்பு வெறுப்புகள் வேறுபடலாம். உதாரணமாக தர்மம், ஜிஹாத் போன்ற நற்செயல்களை செய்கின்ற மனிதன் அந்த நற்செயல்களினூடாக தனது அற்ப சொற்ப ஆசையொன்றை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கலாம். மக்கள் தன்னைப் பாராட்ட வேண்டும் என்ற ஓர் ஆசை இந்த நற் செயல்களை செய்கின்ற போது வந்து விட்டாலே போதும். அங்கு அல்லாஹ்வின் விருப்பம் மனிதனின் விருப்பத்தின் முன்னால் தோற்றுவிடுகிறது. இத்தகைய சூழ்நிலையில் ஒரு மனிதன் மு:'மினாக இருக்க மாட்டான் என நபி (ﷺ) அவர்கள் கூறுகிறார்கள்:

**"நான் கொண்டு வந்த (மார்க்கத்) தை தனது மனோஇச்சை பின்பற்றும் வரை உங்களில் எவரும் ஈமான் கொள்ள முடியாது"**

ஒரு மனிதனைப் பார்த்து நாம் சிரிக்கின்ற சிரிப்பு முதல் இந்த உலகத்தை சீர்திருத்தும் முயற்சிகள் வரை ஒவ்வொரு தனிமனிதனும் தனது உள்ளத்தில் விருப்பு வெறுப்புப் போராட்டத்தை நடத்தாமல் மரணத்துக்குப் பின்னால் உள்ள வாழ்வை ஒளிமயமாக்க முடியாது.

இது மனிதனது நீண்ட வாழ்க்கைப் பயணத்தின் மூன்றாம் நிலையில் (உலகில்) மனிதன் கவனம் செலுத்த வேண்டிய ஒரு பகுதியாகும். இது தவிர தனது கவனத்தை யும் ஈடுபாட்டையும் செலுத்த வேண்டிய மற்றொரு பகுதியும் உண்டு. அதனை பின்வருமாறு கூறலாம்:

மரணம் வரையிலுள்ள வாழ்க்கை விடயத்தில் ஒரு முஸ்லிமிடம் இஸ்லாம் எதிர்பார்க்கும் கடமையே அதுவாகும்.

த:'வாக் களத்தில் எல்லோரும் உபதேசம் செய்கின்ற அம்சம்தான், மரணத்திற்குப் பின்னாலுள்ள வாழ்க்கையும் அங்கு ஒரு மனிதன் எதிர்நோக்க வேண்டியிருக்கும் இன்ப துன்பங்களுமாகும். த:'வாவில் இந்த அம்சத்தை உண்மையில் எவரும் புறக்க ணிக்கலாகாது. புறக்கணித்தால் இஸ்லாமிய த:'வாவே அர்த்தமற்றதாகிவிடும்.

இருப்பினும் அதன் பொருள் மரணம் வரையுள்ள வாழ்க்கையை மறந்து விடலாம் என்பதல்ல. அதனை மறந்து விடுவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவுமில்லை. மரணத் திற்குப் பின்னால் உள்ள வாழ்க்கையின் வெற்றிக்கு எவ்வாறு விருப்பு வெறுப்புக்களின் போராட்டம் வழிசெய்கிறதோ அதுபோன்று மரணத்திற்கு முன்னாலுள்ள (உலக) வாழ்க்கையின் வெற்றிக்கு வழிசெய்யும் ஒரு போராட்டமும் இருக்கிறது.

உலகில் யாருக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதே அந்தப் போராட்டமாகும். தெளி வின்மைகள், சர்ச்சைகள், முரண்பாடுகள், பிணக்குகள், இழுபறிகள் போன்றவை உருவாகுகின்ற சந்தர்ப்பங்களில் இத்தகைய தொரு போராட்டம் எழுகிறது. அந்நேரம் முஸ்லிம்களின் பொறுப்பு எத்தகையது என்பதை குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

**"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ் வுக்கும், அவனது தூதருக்கும், உங்க ளது தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள். ஒரு விடயத்தில் பரஸ்பரம் நீங்கள் பிணங்கிக் கொண்டால் அல்லாஹ்விட மும் அவனது தூதரிடமும் அதனைக் கொண்டு வாருங்கள்..." (4:59)**

மற்றொரு வசனத்தில் இவ்வாறு கூறுகிறான்:

**"அல்லாஹ்வுக்கும் அவனது தூத ருக்கும் கட்டுப்படுங்கள். உங்களுக்கு மத்தியில் நீங்கள் பிணங்கிக் கொண்டால் தோல்வியடைவீர்கள். உங்களது பலமும் குன்றிவிடும். (எனவே கட்டுப்படும் விடயத்தில்) பொறுமையுடனிருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர் களுடன் இருக்கிறான்" (8:46)**

இந்த இரண்டு வசனங்களிலும் 'கட்டுப்பாடு' எனும் கடமையை நிறைவேற்ற முற்படும்போது அதற்கு சவாலாக அமையும் ஒரு பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சர்ச்சை, பிணக்கம், இழுபறி, முரண்பாடு என்பவைகளே அப்பிரச்சினைகள். இவற்றைத் தீர்க்கும் வழிமுறையையும் இந்த வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன.

1. **தலைவர்களும் அவர்களுக்குக் கட்டுப்படு வோருமாக அனைவரும் இணைந்து தமது பிரச்சினைகளை குர்ஆனினதும் சுன்னாவினதும் பரிசீலனைக்குக் கொண்டு வருதல்.**
2. **குர்ஆனினதும் சுன்னாவினதும் அடிப்படை யில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு முற்படும் போது தலைவர்களின் வழிகாட்டலிலோ அல்லது பின்பற்றுவோரின் தெளிவின்மை களிலோ அதிருப்தி ஏற்பட்டு முரண்பாடு களும் சர்ச்சைகளும் தீர்க்கப்படாத நிலைக்கு சமூகம் சென்று விடாமல் பொறுமை காக்க வேண்டும்.**

இந்த வழிமுறைகளைப் பின்பற்றத் தவறி னால் முஸ்லிம்களின் பலம் குன்றும். தோல்விக்கு அவர்கள் ஆளாக நேரிடும். அவர்களது உலக வெற்றி பாதிக்கப்படும் என்று எச்சரிக்கின்றன மேலே கூறப்பட்ட வசனங்கள்.

முஸ்லிம்கள் உலகில் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டால் அல்லாஹ் இந்த உலகின் வெற்றி குறித்து முஸ்லிம்களுக்கு வழங்கி யிருக்கும் வாக்குறுதிகள் எவ்வாறு நிறைவேறும்?

(51ம் பக்கம் பார்க்க)

- அஸ்அத் -

முஸ்லிம்களின் பொருளாதாரத்தின் மீது இலக்குவைத்து நன்கு திட்டமிட்டு மூதூர், வாழைச்சேனை கிராமங்களில் உள்ள முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆயுதம் தரித்த காடையர் கூட்டத்தின் அடாவடித்தனங்கள் சற்று ஓய்ந்திருக்கின்ற போதும் மழைவிட்டும் தூறல் நிற்கவில்லை என்பதைப்போல் குறிப்பிட்ட பிரதேசங்களில் நிலமை இன்னும் சுமுகநிலைக்கு வரவில்லை. அவ்வாறு சுமுகநிலை ஒன்று ஏற்பட விடுதலைப் புலிகள் அங்குமிங்குமாக ஒன்றின்பின் ஒன்றாக பல தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

வாழைச்சேனை, மூதூர் சம்பவங்கள் LTTE யின் முழுமையான ஆதரவுடனேயே நடத்திமுடிக்கப்பட்டன என்பது யாரும் அறியாத விடயமல்ல. மூதூரில் - ரஞ்சன், வாழைச்சேனையில் அன்பினியன், பாஸ்கரன், சேனாதி போன்ற LTTE உறுப்பினர்களே இந்தக் காட்டுமிராண்டிச் செயல்களுக்கு காரணமாக இருந்துள்ளனர். அத்தோடு குறிப்பிட்ட பகுதிகளில் மீண்டும் சுமுக நிலையைக் கொண்டுவருவதற்கு இவர்களுடன் சேர்ந்து இன்னும் பல LTTE உறுப்பினர்கள் தடையாகவும் இருந்து வருகின்றனர். இவர்களின் செயற்பாடுகள், இப்பகுதியில் வாழும் மக்கள் பதட்டத்துடனும் பீதியுடனும் இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவே அமைந்துள்ளது. ஏனெனில் நடந்தவற்றை மறந்து வாழ எத்தனிக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பழையவற்றைப் புதுப்பிக்கும் விதமாக அவ்வப்போது ஏதாவது நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

# LTTE விரும்புவது சமாதானத்தையா...?

வாழைச்சேனையில் தமிழருக்கென்று ஒரு தனியான சந்தைத் தொகுதியை உருவாக்க வேண்டும் எனப் புலிகள் பல தடவைகள் முயன்றபோதும் அவர்களது அந்த முயற்சி தோல்வியிலேயே முடிந்துள்ளது. தமது முயற்சி வெற்றியடைய வேண்டுமானால் முஸ்லிம்களின் வியாபாரத் தலங்கள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் கடந்த 27.06.2002 வாழைச்சேனையில் முஸ்லிம்களின் கடைத்தொகுதிகள் முற்றாக எரிக்கப்பட்டன. இதன் இரண்டாவது பகுதியான தமிழர்களுக்கான தனியான ஒரு சந்தைத் தொகுதி திறக்கும் வேலை இக்கோர சம்பவம் இடம்பெற்று ஓரிரு நாட்களிலேயே நடைபெற்றுள்ளது. புதிய சந்தைத் தொகுதியை LTTE யின் கிழக்கு மாகாண அரசியல் பிரிவு தலைவர் விசு திறந்து வைத்தார். அவ்விழாவில் பல உயர்மட்ட புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அத்தோடு முஸ்லிம்களுடன் யாரும் எத்தகைய வியாபாரத் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளனர். இத்தடைகளை மீறி சில தமிழ் பொதுமக்கள் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்டே வருகின்றனர். அண்மையில் இவ்வாறு வியாபாரத் தொடர்பு வைத்திருந்த இரண்டு தமிழர்கள் LTTE யினரால் பிடிக்கப்பட்டு அவர்களின் வியாபார உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டு, அவர்கள் நையப் புடைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோன்று பஸ் போக்குவரத்துப் பாதைகளையும் மாற்றியுள்ளனர். இதனால் வாழைச்சேனைக்குச் செல்லும் போக்குவரத்து வாகனங்கள் தற்போது அவர்கள் சந்தைத் தொகுதி அமைந்திருக்கும் வீதியினூடாகச் செல்வதால் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் முஸ்லிம்கள் இடையில் இறங்கி நடந்து வரவேண்டி இருக்கிறது.

இவை யாவற்றிற்கும் மேலாக வாழைச்சேனை முஸ்லிம்கள் தமது பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டிருக்கும் நிலையில் எரிந்த தமது கடைகளை ஓரளவுக்காவது திருத்தி அன்றாட ஜீவனோபாயத்தை நடத்துவதற்காவது எதையாவது தேடலாம் என்று அங்கு சென்றபோது 'தமிழர் விழிப்புக்குழு' என்ற அமைப்பு, *'எரிந்த தமிழர்களின் கடைகளுக்கு நட்டஈட்டை பெற்றுத்தராத வரை எந்த முஸ்லிமும் கடைகளை மீளத் திறக்கக் கூடாது; திறக்கவும் விடமாட்டோம்'* என ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருந்தது. இதனால் முஸ்லிம்கள் மேலும் நம்பிக்கை இழந்திருக்கின்றனர்.

இங்கு ஏற்பட்ட அனர்த்தத்தாலும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளாலும் இப்பகுதியில் பரவியுள்ள பதட்ட நிலையைப் போக்குவதற்காக கரிகாலன் உட்பட LTTE உறுப்பினர்கள், அலிஸாஹிர் மௌலானா மற்றும் பல முஸ்லிம் பிரதிநிதிகளும் 05.07.2002ல் ஒரு பேச்சுவார்த்தை நடத்தி முஸ்லிம்கள் இதன் பிறகு வயல் பகுதிகளுக்கு வரலாம், அவர்களுக்கு எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம் பெறாது என்று கரிகாலனால் உத்தரவாதம் வழங்கப்பட்டது. இதை நம்பி அன்று மாலையே சில முஸ்லிம்கள் தமது வயல்களை பார்த்துவரச் சென்றனர். அங்கு சென்ற முஸ்லிம்களிடம், *''நாளை (06.07.2002) வயல் சொந்தக்காரர்கள் அனைவரும் 'மூக்கர் கல் சந்திக்கு' வரவேண்டும்''* என்று LTTE யினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு சென்றபோது, LTTE பொறுப்பாளர் குகநாதன், *''மாடு திங்கிற சோனிகளே எங்களை எதிர்க்கிறீங்களா?''* என்று முஸ்லிம்களை பார்த்துக் கேட்டதோடு தூஷண வார்த்தைகளையும் பிரயோகித்துள்ளார். அப்போது அங்கிருந்த அப்பகுதி வட்டவிதானை, *''நீங்கள் வரச் சொல்லவும்தானே நாங்கள் வந்தோம். கொஞ்சம் மரியாதையாக பேசுங்கள்''* என்று சொன்னதற்கு அவர் பலமாக ஆயுதத்தால் தாக்கப்பட்டார். *''அவர் ஒரு நோயாளி. அவரைத் தாக்க வேண்டாம்''* என்று அங்கிருந்த முஸ்லிம்கள் கூறியபோதும் அது எடுபடவில்லை. மேலும் முஸ்லிம்களுக்கு மிக மோசமான வார்த்தைகளைப் பிரயோகித்து தூசித்துள்ளார். முஸ்லிம்கள் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றுமாறு கூறியதுடன் அவர்கள் அனைவரையும் நீண்டநேரமாக வெயிலிலும் நிறுத்திவைத்து வதை செய்துள்ளார். பின்னர், *''உங்கள் வயல்களை கடந்த சில நாட்களாக நாங்கள்தான் பாதுகாத்துள்ளோம். அதற்கு 50,000 ரூபாய் கூலி தரவேண்டும்''* என்றும் *''மூன்று நாட்களின் பின்னர்தான் இந்தப் பக்கம் வரவேண்டும்''* என்றும் கூறி விரட்டியடித்துள்ளார்.

அவர்கள் வயல்களை பாதுகாத்த இலட்சணம்தான் வயல் வாடிகளில் இருந்த பசளைகள், களைகொல்லிகள் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டு வயல் வாடிகளும் தீயிட்டு கொளுத்தப்பட்டிருந்தமையாகும். அத்துடன் பல வயல்களும் நீரின்றி கருகி கைவிடவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றன. இதை யாரிடம் சொல்வது? கவலைக்குரிய விடயம்

என்னவென்றால் இவை யாவும் நடைபெற்ற வேளை 150க்கும் மேற்பட்ட முஸ்லிம்களும், ஓரிரு ஆயுதம் தரித்த புலிகளுமே அங்கிருந்தனர். இந்த நிகழ்வானது தாத்தாரிய காலத்தை நினைவுபடுத்துவதாகவே இருக்கிறது.

இதே நேரம் வாழைச்சேனை, கோரளை மத்திய செயலகப் பிரிவில் அடங்குகின்ற கேணிநகர், பாலை நகர் போன்ற கிராமங்களில் முஸ்லிம்கள் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் இருந்தே வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசங்கள் நெற்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு போன்றவற்றிக்கு உகந்ததாக இருந்ததால் அதனுடன் தொடர்பான சுமார் 375 குடும்பங்கள் அங்கு வசித்து வந்தன. இப்பகுதி முஸ்லிம்கள் அடிக்கடி LTTE இயக்கத்தினரால் இனந்தெரியாத விதமாக கொலை செய்யப்பட்டும் வந்துள்ளனர். இதனால் சில முஸ்லிம் குடும்பங்கள் இவ்விடங்களை விட்டு வெளியேறியும் உள்ளன. இருந்தபோதும் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டுச் செல்ல மனமின்றியும், வெளியேறிச் செல்வதற்கு வேறிடமின்றியும் சுமார் 150 குடும்பங்கள் வரும் கஷ்டங்களை சகித்துக் கொண்டு அங்கு தொடர்ந்து வசித்தே வந்தன. ஆனால் வாழைச்சேனை சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த 14.07.2002 இரவு 7.00 மணியளவில் பாலைநகர் கிராமத்தின் தலைவரின் வீட்டுக்கு வந்த LTTE உறுப்பினர்கள் இங்கிருக்கும் முஸ்லிம்கள் உடனடியாக வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் விளைவு விபரீதமாக அமையுமென்று அச்சுறுத்தினர். இதனால் பதற்றமடைந்த முஸ்லிம்கள், இது இரவு நேரம் என்பதால் இப்பொழுது போக முடியாதென்றும் காலையில் செல்கிறோம் எனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டு அங்கிருந்த அனைத்து முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டு தற்பொழுது வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கின்றனர். இவ்வகதிகள் பற்றி இப்பகுதி பிரதேச செயலாளர்களோ அல்லது மாவட்ட செயலாளரோ எவ்வித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

வரியோ கப்பமோ அறவிடுவதில்லையென்று பல ஒப்பந்தங்களிலும் மேடைப் பேச்சுக்களிலும் LTTE யினர் கூறியபோதும் நடைமுறையில் வரிஅறவிடுவது கைவிடப்படவில்லை. ஓட்டமாவடியில் வசிக்கும் சில மீனவர்கள் வாகனேரிக் குளத்தில் மீன் பிடிப்பதற்காகவும், தோணிகளை அங்கு வைத்திருப்பதற்காகவும் 14 தோணிகளுக்கும் ஒரு வருட வரியாக ரூபா 280,00.00 செலுத்தியே தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

**கல்முனை தொடக்கம் வாழைச்சேனை வரை கரிகாலன் முதல் சாதாரண தமிழ் மகன் வரை கைலாகு செய்து வந்த எம்.எச். முஹம்மத் அவர்கள் வாழைச்சேனையில் பாதிக்கப்பட்ட ஒரு முஸ்லிமையாவது சந்திக்காமல் கொழும்பு திரும்பியது அவரின் முஸ்லிம்கள் மீதான பற்றை எடுத்துக்காட்ட போதுமானதாகும். எனவே, முஸ்லிம்களின் வேதனைகளில் குளிர்காய்வதை விட்டுவிடுவதே அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு செய்கின்ற பேருதவியாக அமையும்.**

கடந்த மாதம் வாழைச்சேனையில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து இத்தோணிகள் அனைத்தும் அப்பகுதி புலிகளின் பொறுப்பாளர் குகநாதனின் கட்டளையின் பெயரில் எடுத்துச் செல்லப்பட்டன. இவை பற்றி பொலிஸாரிடமும் இராணுவத்தினரிடமும் முறையிட்டபோது அவர்களது வழக்கமான பதிலான *'யுத்த நிறுத்த காலப்பகுதியில் எங்களால் எதுவும் செய்யமுடியாது'* என்றே கூறினர். பின்னர் அப்பகுதி LTTE பொறுப்பாளர் குகநாதனைச் சந்தித்து, *'நாங்கள் உங்களுக்கு வரிகட்டியே தொழில் செய்கிறோம். வரிகட்டி இப்போது சில மாதங்கள் கடந்து விட்டன. எனவே எங்கள் தோணிகளைத் தாருங்கள்'* என்று கேட்டபோது, *'நாங்கள் தோணிகளை இராணுவ முகாமுக்கு அருகில் இருந்து (அவர்களின் பகுதியைக் குறிப்பிட்டு) இங்கு கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு ஒரு தோணிக்கு ரூபா 500 தர வேண்டும்'* என்றார். இதைக் கொடுத்து விட்டாவது தமது பொருளை பாதுகாத்துக் கொள்வோம் என்று முயன்றபோதும், ''இன்று வா நாளை வா'' என்று அலைக் கழிப்பதால் தமது தோணிகளை மீளப் பெற்றுக் கொள்வதில் நம்பிக்கை இழந்தவர்களாகவே முஸ்லிம்கள் இருக்கின்றனர்.

இவை தவிர LTTE யினர் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கின்ற திட்டங்களைப் பற்றி கேள்வியுறும் முஸ்லிம்கள் மேலும் குழம்பிப் போயுள்ளனர். இதிலொரு திட்டமே மட்டக்களப்பிலிருந்து ஓட்டமாவடியூடாக செல்லும் அனைத்து வாகனங்களையும் செங்கலடியில் வைத்துத் திருப்பி வாகனேரியினூடாக செல்லத்தக்க விதமாக பாதை அமைத்தலும், வெருகல், மாங்கேணி, வாகரை போன்ற இடங்களில் உள்ள தமிழ் மக்கள் ஓட்டமாவடிக்கு வருவதைத் தடுப்பதற்காக நாசிவன் தீவிலிருந்து வாழைச்சேனை வருவதற்கு ஆற்றின் குறுக்கே பாதை அமைத்தலுமாகும்.

இத்திட்டங்கள் பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும், இதனை அவர்கள் மேற்கொள்ளத் துணிய மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை முற்றாக அழிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியோடு ஒப்பிடும்போது இது ஒரு சிறிய விடயமே!

LTTE யினர் வாழைச்சேனையில் மேற்கொண்ட நாசகார வேலைகளைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பீதியும் அச்சமும் தொடரும் விதமாகவே தமிழ் வியாபாரிகளை முஸ்லிம்களுடன் தொடர்பு கொள்ள விடாது தடுத்தல், தமிழர்களுக்கான சந்தையைத் திறந்தமை, போக்குவரத்துப் பாதையை மாற்றியமை, வயலுக்கு சென்ற முஸ்லிம்களை தூசித்துத் தாக்கியமை மற்றும் கேணிநகர், பாலைநகர் முஸ்லிம்களை வெளியேற்றியமை போன்ற அம்சங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவையனைத்தும் நடந்தபோதும் இவைபற்றி எந்தவொரு ஊடகமும் கவனம் எடுக்கவில்லை.

இது தொடர்பில் கண்டிக்கத்தக்கதும் வேதனைக்குமுரிய விடயம்தான் இந்தப் பிரச்சினையையும் தங்களது அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு அரசியல்வாதிகள் முயற்சித்திருப்பதாகும். மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். முஹம்மத் அவர்கள், *''வாழைச்சேனைப் பிரச்சினையில் புலிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை; அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள்''* என்று விடுத்த அறிக்கை பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைந்தது.

கல்முனை தொடக்கம் வாழைச்சேனை வரை கரிகாலன் முதல் சாதாரண தமிழ் மகன் வரை கைலாகு செய்து வந்த எம்.எச். முஹம்மத் அவர்கள் வாழைச்சேனையில் பாதிக்கப்பட்ட ஒரு முஸ்லிமையாவது சந்திக்காமல் கொழும்பு திரும்பியது அவரின் முஸ்லிம்கள் மீதான பற்றை எடுத்துக்காட்ட போதுமானதாகும். எனவே, முஸ்லிம்களின் வேதனைகளில் குளிர்காய்வதை விட்டுவிடுவதே அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு செய்கின்ற பேருதவியாக அமையும்.

அனைத்து விடயங்களுக்கும் காரணகர்த்தாவாக இருந்துவரும் LTTE யினர் தாங்கள் சமாதான விரும்பிகள்; முஸ்லிம்களை அரவணைத்துச் செல்லவே விரும்புகிறோம் என சர்வதேச ரீதியாக தமக்கென ஓர் ஆதரவைத் தேடிக்கொள்ள எத்தனிக்கும் இவ்வேளையில் இவ்வாறான அறிக்கைகள் LTTE க்கு தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கே உதவும்.

# குஜ்ராத் வழங்கும் பாடம்

**- கே. என். பணிக்கர் -**

**மோடி நீக்கப்பட வேண்டும் என்பதைவிட முக்கியமானது மோடிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான்.**

இன்று நமது சமூகத்தின் முன்புள்ள சவால்களை சந்திக்க வேண்டுமானால் ஜனநாயகம், மதசார்பின்மை இவற்றில் நம்பிக்கையுள்ளவர்கள் எல்லாரும் ஒன்று சேர வேண்டியிருக்கிறது. ஏனென்றால் மதவெறி என்பது ஜனநாயகத்துக்கும் எதிரானது சமூகத்துக்கும் பண்பாட்டுக்கும் எதிரானது.

ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்திலும் சில தருணங்கள் வரும். தீர்மானமான முடிவுகளை எடுக்க வேண்டிய தருணங்கள். இன்று அத்தகைய ஒரு தருணம்.

இதற்கு முன்பும் அப்படிப்பட்ட ஒரு தருணம் வந்தது. 1950 இல் சுதந்திரம் பெற்றவுடன் மூன்றாண்டுகள் பிரிவினையின் விளைவாக நடந்த மதப் படுகொலைகள், கலவரங்கள் அவற்றுக்குப் பிறகு நாம் ஒரு முடிவெடுத்தோம். இந்தியா மதச்சார்பற்ற ஜனநாயக நாடாக இருக்கும் என்று அறிவித்தோம். நாம் குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் நாடாக நம்மை அறிவிக்க விரும்பவில்லை.

கலாசாரம். அதுதான் நமது மதச்சார் பின்மைக்கு ஆதாரம்.

எங்கள் கிராமத்தில் என் வீட்டெதிரே ஒரு மசூதி இருந்தது. சின்ன வயதிலேயே நான் எனது அம்மா அதற்குக் காணிக்கைகள் அனுப்புவதைக் கண்டிருக்கிறேன். அவர் ஆழ்ந்த கடவுள் பக்தியுள்ள இந்து. அதே சமயம் மசூதிக்கு காணிக்கை அனுப்ப அவர் தவறியதே இல்லை. அவரை அப்படிச் செய்ய வைத்தது எது?

சகிப்புத்தன்மை என்கிறார்கள். அப்படிச் சொல்லுவதே தவறு. யார் யாரை சகித்துக் கொள்வது? சகிப்புத்தன்மை என்பது ஒரு கெட்டவார்த்தை. என் அம்மா மசூதிக்கும் காணிக்கை அனுப்பியது எதைச் சகித்துக் கொள்வதற்காக? அது அல்ல காரணம்.

யையும் உபநிஷதங்களையும் சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டதால்தான் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று ஒரு நண்பர் சொன்னார். இல்லை இப்படி நடப்பவர்களிடம் போய் உபநிஷதத்தைச் சொன்னால் அது எப்படி ஏறும்? குஜராத்தில் திட்டமிட்டு முன் தயாரிப்புக்களுடன் வன்முறை நடத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கொடூரத்தின் விபரங்களை இங்கு விபரிக்கத் தேவையில்லை. போதுமான அளவு ஏற்கெனவே அறிந்து வைத்திருக்கிறோம். அவற்றை நாம் நினைவில் வைத்துக் கொள்வது போதுமானது.

நமக்கு முக்கியமான விஷயம் குஜராத் தரும் செய்தி என்ன? அதை நாம் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதுதான்.

மூன்றாண்டு விவாதங்களுக்குப் பிறகு கலவரங்கள் நடந்து முடிந்த சூழலில் நாம் மதச்சார்பற்ற அரசியல் அமைப்பையே தேர்ந்தெடுத்தோம்.

அதன் பிறகு 1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, பாசிசப்படைகள் நமது வீட்டருகே வருகிற காலடிச் சத்தங்கள் நம் காதில் விழுந்தன. மதவெறியை நாம் பாசிசம் என்று கருதுவதில்லை. பாசிசத்தை நோக்கி இட்டுச் செல்வதற்கான கூறுகள் அதில் இருக்கின்றன.

இப்போது குஜராத் வன்முறை. பாசிசப் படைகள் நம் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டன. இனி நாம் என்ன செய்ய வேண்டும்? வரப்போகும் தலைமுறைகளுக்கு மதச் சார்பற்ற அமைதியான இந்தியாவைக் காப்பாற்றித்தர நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலில் இந்த மதச்சார்பற்ற சமூகம் இங்கே எப்படி வந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது ஒன்றும் தற்செயலாக நடக்கவில்லை. நீண்டகாலமாக நமது சமூகம் பன்முகம் கொண்டதாக பல்வேறு விதமான வாழ்க்கை முறைகள் நம்பிக்கை கொண்டதாக இருந்து வந்திருக்கிறது. அந்தப் பன்முகம்தான் நமது

அவர் அப்படிச் செய்யக் காரணம் பிற மதங்கள் மீது இருக்கும் மரியாதை உயர்ச்சிதான். எல்லா மதங்களும் கடைசியில் ஒன்றுதான், உலகமே ஒரே குடும்பம்தான் என்ற மரியாதை, மதிப்புணர்ச்சிதான் காரணமே தவிர சகிப்பது அல்ல. அந்த கலாச்சாரம்தான் நமது மத்ச்சார்பற்ற அரசியலுக்கு ஆதாரம்.

இன்று அந்த உணர்வுக்கு, அந்தக் கருத்தாக்கத்திற்கு முடிவு கட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் உண்மையான ஆபத்து. பெங்களூரில் ஆர்.எஸ்.எஸ். போடும் தீர்மானம் பெரும்பான்மையை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள் என்று சொல்லுவது- அந்த ஆபத்தின் அடையாளம். இந்துமதத்திற்கு ஆபத்து. இந்துமதத்தைக் காப்பாற்ற இப்படிச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படித்தான் இந்துமதம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால் அதுதான் ஒவ்வொரு இந்துவுக்கும் அவமானம். கையில் திரிசூலங்களுடன் ஆயிரக்கணக்கில் வெறியுடன் தெருவில் சென்று கொன்று குவிப்பதால் இந்துமதத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்? அப்படிச் செய்பவர்களுக்கு நாம் கீதை

குஜராத்தில் எதுவும் திடீரென நடந்து விடவில்லை. கோத்திரா ரயில் கொலைகள் சம்பவம் நடந்திருக்காவிட்டாலும் கூட, குஜராத் வன்முறை நடந்திருக்கும். வேறு ஏதாவது ஒரு காரணத்தால் நடத்தப்பட்டிருக்கும். கோத்ரா சம்பவங்களை மதச் சார்பற்றவர்கள் கண்டிக்கவில்லை என்று சங்பரிவாரங்கள் நாடு முழுவதும் ஒரு பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அது அப்பட்டமான பொய். அருந்ததி ராய் முதல் ஷபானா ஆஸ்மி வரை பல மதச்சார்பற்ற சிந்தனையாளர்களும் கோத்ராவைக் கண்டித்தார்கள் என்பதே உண்மை. ஆனால் இந்தப் பொய் பரப்பப்படுவதன் அசல் நோக்கம், குஜராத் பற்றிய உண்மைகளிலிருந்து கவனத்தை திசை திருப்புவதுதான்.

குஜராத்தில் மக்கள் சமுதாயம் தொடர்ந்து மதவெறி ஊட்டப்பட்டு வந்திருக்கிறது. பத்தாண்டுகளாக ஏராளமான துண்டுப் பிரசுரங்கள், கலைக்கூடங்களில் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்ட விஷயங்கள், அவ்வப்போது நடத்தப்பட்ட கலவரங்கள் என்று இந்த விஷயம் மெல்ல மெல்ல பரப்பப்பட்டது. முஸ்லிம் கடைகளில் வாங்காதீர்கள், இந்துக் கடைகளிலேயே

வாங்குங்கள் என்பதில் தொடங்கி விதவிதமாக முஸ்லிம்களை புறக்கணிக்கச் சொல்லும் பிரச்சாரம் நீண்டகாலமாக நடந்து வந்தது. சமூகம் திட்டமிட்டு பிளவுபடுத்தப்பட்டது. முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்களில் இருந்து வேண்டுமென்றே இந்துக்கள் வெளியேறி வேறு இடங்களில் குடியேறினார்கள். இதேபோல இந்துக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தொடர்ந்து வசிக்கப் பயந்து முஸ்லிம்கள் வெளியேறினார்கள். இப்படி சமூகத்தில் ஒரு பிரிவினரை சேரிப்படுத்துவது பல்லாண்டு காலமாக செய்யப்பட்ட நடவடிக்கைகளின் விளைவு.

இப்படி ஒரு சமூகம் மதவெறியூட்டப்பட்ட சமூகமாக மாறிவிட்டால் பாதுகாப்பு எங்கிருந்து கிடைக்கும்? அரசிடம் இருந்துதான் கிடைக்க வேண்டும். அதனால்தான் நேரு, அரசாங்க அமைப்பு, அரசியல் அமைப்புகள் மதச்சார்பற்றவையாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். காந்தியிடம் இருந்து நேரு இதில் வேறுபட்டார். காந்தியோ சிவில் சமூகம் பிளவுபடாது, இந்து முஸ்லிம் ஒற்றுமை இணக்கம் நிலவும் என்று நம்பியவர்.

குஜராத்தில் சிவில் சமூகம் பிளவுபடுத்தப்பட்டது. மக்களை பாதுகாக்க வேண்டிய அரசாங்கமும் மதச்சார்புள்ள அரசாக மாற்றப்பட்டது. காப்பாற்ற வேண்டிய பொலிஸே கொலைகாரர்களாக மாறும் சூழ்நிலை இதுதான். அறுவைச் சிகிச்சை கட்டிலில் படுத்திருக்கும் நோயாளி தன் முன்புள்ள சத்திர சிகிச்சை நிபுணரே கொலையாளி என்று உணர்கிற கொடூரமான நிலைமை இது.

இந்தியாவில் இதற்கு முன்பு நூற்றுக் கணக்கான மதக்கலவரங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் அவை எதுவும் அரசாங்க அமைப்பே முன்னின்று வழிகாட்டி நடத்திய கொடுமைகள் அல்ல. காப்பாற்ற வேண்டிய அரசும் சிவில் சமூகமும் மதவெறியூட்டப்பட்டவர்களாக செயல்பட்டது என்பது இதுவரை இந்தியாவில் நடந்ததே இல்லை.

மோடி போய் காங்கிரஸ் முதலமைச்சரே வந்தாலும் அரசு இயந்திரம் ஏற்கனவே மதவெறியூட்டப்பட்டிருக்கிறது. அதிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவது அவசியம். மோடியை நீக்கினால் இன்னொரு மோடி வரலாம். மோடி நீக்கப்பட வேண்டும் என்பதைவிட முக்கியமானது மோடிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

சிவில் சமூகத்தில் மதவெறி அகற்றப்பட வேண்டும். அதற்கு கலாச்சாரத் துறையில் வேலை செய்ய வேண்டும். சங்பரிவார் அமைப்புகள் மதவெறியை ஊட்டுவதற்கு சுமார் 600க்கும் மேற்பட்ட கலாச்சார அமைப்புகளை தொடர்ந்து நடாத்தி வந்திருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும்.

**சமூகம் திட்டமிட்டு பிளவுபடுத்தப்பட்டது. முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்களில் இருந்து வேண்டுமென்றே இந்துக்கள் வெளியேறி வேறு இடங்களில் குடியேறினார்கள். இதேபோல இந்துக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தொடர்ந்து வசிக்கப் பயந்து முஸ்லிம்கள் வெளியேறினார்கள்.**

மதவாதத்திற்கு எதிராக வேறு எந்த அரசியல் கட்சியையும்விட இடதுசாரிகள் தொடர்ந்து வேலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். இடதுசாரிக் கட்சிகள் வலுவாக உள்ள மாநிலங்களில் மதவாதம் பெரிதாகி விடவில்லை என்பது உண்மைதான். ஆனால் மதவாதத்திற்கு மதவெறிக்கு எதிராக இடதுசாரிகள் அரசியல் ரீதியில் செயல்படுகிறார்களே தவிர கலாசாரத் துறையில் இயங்கவில்லை.

வடக்கே குஜராத்போல தெற்கே நடக்குமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. நடத்துவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. கேரளாவை சங்பரிவாரம் குறிவைத்திருக்கிறது. சிறிய மாநிலமான கேரளாவில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்தபடி அதிகமான ஆர்.எஸ்.எஸ். பட்டறைகள் (ஷாகா) சுமார் 7,500 நடத்தப்படுகின்றன.

தவிர அவர்கள் அரசு இயந்திரத்தை பயன்படுத்திக் கொள்வதில் சாமர்த்தியமானவர்கள். இந்தியாவில் மாநில அரசுகளைவிட மத்திய அரசுக்கே பலம், அதிகாரம் எல்லாம் அதிகம். மத்தியரசு 140,000 ஓராசிரியர் பள்ளிகளைத் தொடங்குகிறது. அதில் 90 சதவீத ஆசிரியர்கள் ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள்தான்.

இடதுசாரிகளோ மத்தியரசில் அதிகாரப் பங்குபெறும் வாய்ப்பு வரும்போதெல்லாம் அதை ஒதுக்கிவிடுகிறார்கள். பொதுவாக உலகம் முழுவதும் இடதுசாரிகளை அரசில் பங்கேற்க விட்டால் அவர்கள் அரசு இயந்திரத்தில் நிரந்தரமாக ஊடுருவி விடுவார்கள் என்று அச்சப்பட்டு இதர கட்சிகளெல்லாம் இடதுசாரிகளை அதிகாரத்துக்கு வரவிடாமல் தடுக்கவே முயற்சிப்பார்கள். இந்தியாவிலோ மற்ற கட்சிகளெல்லாம் இடதுசாரிக் கட்சிக்கு பிரதமர் பதவி கொடுக்க முன்வந்தால் இவர்கள் வேண்டாம் என்று ஒதுங்கி விட்டார்கள். அது ஒரு தவறு.

சங் பரிவாரங்கள் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு குஜராத்தில் சிவில் சமூகத்திலும் பிளவு ஏற்படுத்தினார்கள். அரசு இயந்திரத்திலும் மதவெறியை ஊட்டினார்கள்.

குஜராத்தில் நடந்த இந்த நிகழ்வு சங் பரிவாரத்தின் ஒரு பரிசோதனை முயற்சி என்றே வர்ணிக்கப்படுகிறது. இது பரிசோதனை அல்ல. முழு இந்தியாவுக்குமான செயல் திட்டத்தின் வரைபடம். புளூ பிரின்ட்

இதுபோல இனி நடக்காமல் இருக்க வேண்டுமானால், இது மாற்றப்பட வேண்டுமானால், மதச்சார்பற்ற சக்திகள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். பேரணிகள், ஊர்வலங்கள் நடத்தினால் போதாது. வேர் மட்டத்தில் ஒவ்வொருவரும் தான் வாழும் பகுதியில் தான் என்ன செய்ய முடியும் என்று யோசித்து இயங்க வேண்டும். அப்படி செயல்பட்டால் ஒழிய மாற்றம் ஏற்படாது.

**'சகிப்புத்தன்மை என்பது ஒரு கெட்ட வார்த்தை' என்ற தலைப்பில் 'தீம்தரிகிட' ஜூன் இதழில் வெளியான கட்டுரை, சமரசம் 16-30 ஜூன் இதழில் பிரசுரமானது. தலைப்பு மாற்றத்துடன் அதனை மீள்பிரசுரம் செய்கிறோம்.**


**உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

# ஏக இறைவனை நம்புதல் என்றால்......

- சிராஜுல் ஹஸன் -

இதழ் தயாரிப்புப் பணிகளில் மும்முரமாக மூழ்கியிருந்தேன்.
"தம்பி வரலாமா?" குரல் கேட்டு தலைநிமிர்ந்தேன்.
நெற்றி நிறைய திருநீறும் வாய் நிறைய புன்னகையுமாய் நடுத்தர வயதுடைய ஒருவர் நின்றிருந்தார்.
"வாருங்கள் ஐயா...! உட்காருங்கள்...!"
அறைக்குள் வந்து அமர்ந்தார்.
"சமரசம் பத்திரிகையை நான் விரும்பிப் படிப்பதுண்டு. குறிப்பாக நீங்க எழுதும் 'நெஞ்சோடு...' பகுதியைத் தவற விடுவதே இல்லை..." என்றார்.
"ரொம்ப நன்றீங்க ஐயா!"
"இறைவன் ஒருவன்தான்; அவனை மட்டுமே வணங்க வேண்டும் என அடிக்கடி எழுதுறீங்க...! என்னுடைய கொள்கையும் அதுதான் தம்பி!"
"சிந்திக்கத் தெரிந்தவர்கள் அனைவருமே அந்த முடிவுக்குத்தான் வருவார்கள்...!"
"ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம்!"
"எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேளுங்கள்!"
"இந்து மதமும் பரம்பொருள் ஒன்றுதான் என்றே கூறுகிறது. இஸ்லாமும் இறைவன் ஒருவனே என்கிறது. அப்படியானால் இரண்டுக்கும் இடையில் என்ன வேறுபாடு? அந்தப் பரம்பொருளை நம்பும் என்னைப் போன்றவர்களை இஸ்லாம் 'இணைவைப்பாளர்கள்' என்று ஏன் குறிப்பிடுகிறது?"
"அருமையான கேள்வி. இதற்கு விளக்கம் தரும் வகையில் நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா?"
"கேளுங்கள் தம்பி"
"பரம்பொருள் ஒன்றுதான் என நீங்கள் சொன்னாலும் வழிபாடுகளின்போது ஏதேனும் திருவுருவச் சிலையை முன்வைத்துத்தானே நீங்கள் பூஜைகள் செய்கிறீர்கள்?"

"ஆமாம்!"

"இதுதான் முதல் வேறுபாடு. இஸ்லாம் கூறும் ஏக இறைவன் காட்சிக்கும் வடிவத்துக்கும் அப்பாற்பட்டவன். குறிப்பிட்ட இடம், பொருள், உருவம் எல்லைகளுக்குள் அவனைக் கட்டுப்படுத்த முடியாது.

"அடுத்து நீங்கள் ஒரே பரம்பொருளை நம்புகிறீர்கள். ஆனால் அந்தப் பரம்பொருள்தான் பரிபாலிப்பவன், படைப்பவன், இயக்குபவன், அழிப்பவன், என்று நம்புகிறீர்களா? அதாவது ஆக்கல், காத்தல், அழித்தல் இந்த மூன்றும் அந்தப் பரம்பொருளிடமே இருப்பதாக கருதுகிறீர்களா?"

"இல்லை...! நாங்கள் அந்த மூன்றுக்கும் மூன்று தெய்வங்களை அல்லவா நம்புகிறோம்?"

"இது இரண்டாவது வேறுபாடு. உண்மையில் இந்த மூன்று ஆற்றல்களுக்கும் சொந்தக்காரன் ஏக இறைவன் மட்டுமே என இஸ்லாம் கூறுகிறது."

சரி, வானங்கள் பூமியின் ஆட்சி அதிகாரம் யாருக்கு உரியது எனக் கருதுகிறீர்கள்? சட்டமியற்றும் உரிமை யாருக்கு உண்டு எனச் சொல்ல முடியுமா?"

"எங்கள் சாமிகளில் எதுவும் சட்டம் இயற்றியிருப்பதாகத் தெரியவில்லையே!"

"இது மூன்றாவது வேறுபாடு. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் ஏக இறைவனுக்கு மட்டுமே உரியது. சட்டம் இயற்றும் உரிமையும் (Law Giver) அவனுக்கே சொந்தம் என இஸ்லாம் கூறுகிறது.

"அடுத்து இன்னின்ன செயல்கள் அனுமதிக்கப்பட்டவை (ஹலால்) என நிர்ணயிக்கும் அதிகாரம் யாருக்கு உரியது?"

"இந்த ஹலால் - ஹராம் கருத்தோட்டமே எங்களிடம் இல்லையே தம்பி"

"இது நான்காவது வேறுபாடு. எந்தவொரு செயலையும் குறித்து ஆணையிடுவதற்கோ, தடுப்பதற்கோ இறைவனைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது. ஒருவர் தடுப்பதினால் எதுவும் ஹராம் ஆகிவிடுவதில்லை. ஒருவர் அனுமதிப்பதினால் எதுவும் ஹலால் ஆகிவிடுவதில்லை. இது ஹலால், இது ஹராம் என்று சொல்லும் உரிமை படைப்பினங்களில் யாருக்கும் இல்லை படைத்தவனுக்கு மட்டும் உண்டு"

"ஆக பரம்பொருள் ஒன்று என வெறுமனே நம்பினால் போதாது...! இப்படி எல்லா வகையிலும் இறைவனுடைய தகுதிகளையும் உரிமைகளையும் ஒப்புக் கொள்ள வேண்டும், அப்படித்தானே?"

"சரியாகச் சொன்னீர்கள்...! மேலே சொன்ன அனைத்தும் கருணையுள்ள இறைவனுக்கு மட்டுமே உரியன என நம்ப வேண்டும். அவ்வாறு நம்பி அவனையே இறைவனாக, ஆட்சியாளனாக, அதிபதியாக ஏற்று அவனுடைய சட்டதிட்டங்களுக்கு மட்டுமே அடிபணிந்து வாழ வேண்டும். அப்படிச் செய்பவர்கள்தாம் மு..மின்கள் உண்மையான ஓர் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள். இவற்றில் ஏதேனும் ஒரு தகுதியோ அல்லது எல்லாத் தகுதிகளுமோ மற்றவர்களுக்கும் உண்டு என நம்புபவர்களை 'இணைவைப்பவர்கள்' என்று இஸ்லாம் கூறுகிறது. இந்த இணைவைப்பிலிருந்து விடுபட்டு ஏக இறைவனின் பக்கம் வாருங்கள் என இஸ்லாம் அழைக்கிறது."

"அருமையான விளக்கம்..! நீங்க சொன்னபடி அந்த ஏக இறைவனை மட்டுமே வழிபடும் நற்பேறு எனக்குக் கிடைக்குமா...?" கண்களில் நீர் தளும்ப, நா தழுதழுக்க அவர் கேட்டார்...!

நான் "இன்ஷா அல்லாஹ்..." என்றேன்.



**- அ. அஸ்மின் -**

குஜராத் படுகொலைகள், பாகிஸ்தானுக்கு எதிரான யுத்த முஸ்தீபுகள், காஷ்மீர் விவகாரம் என்பன சர்வதேச அரங்கில் இந்தியாவின் இந்துத் தீவிரவாதத்தை வெளிப்படுத்தப் போதுமான சான்றுகளாக அமைந்திருந்தன. அத்தோடு அரபு நாடுகளிலும் அது தாக்கத்தை செலுத்தத் தொடங்கியிருந்த வேளையில் தன்னை ஒரு மதச்சார்பற்றவனாகக் காட்டிக் கொள்வதற்கான ஏற்பாடாகவே ஜனாதிபதி பதவியை அப்துல் கலாம் என்ற முஸ்லிமுக்கு வழங்கியுள்ளது.

# அப்துல் கலாம்: இந்திய ராஜதந்திரத்தின் நியமனம்!

'அப்துல் கலாம் இந்தியக் குடியரசின் ஜனாதிபதியாக பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுத் தெரிவாகியுள்ளார்; இந்தியா தனது மதச் சார்பற்ற கொள்கையை இன்னுமொரு தடவை நிரூபணம் செய்து தனது தூய ஜனநாயகத்தை வெளிப்படுத்தியுள்ளது; முஸ்லிம் ஒருவர் இந்தியாவின் முதற்குடிமகனாய் தெரிவாகியிருப்பது ஆரோக்கியமான அறிகுறி' என்றெல்லாம் பலரும் பரவலாக கருத்துக்களை பரிமாறிக் கொள்கின்றனர்.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தில் 1931 ஒக்டோபர் 15ம் திகதி செய்னுலாப்தீன் மரிக்காயர்- மாஸிம் அஸ்மா அம்மையாருக்கு இறுதிப் புதல்வனாய்ப் பிறந்தவரே அப்துல் கலாம். விமானத் தொழில்நுட்ப விஞ்ஞானியாக கடமையாற்றி பின்னர் அணு விஞ்ஞானியாக உயர்ச்சி கண்டார். தேசத்தின் உயர் விருதுகளான பத்மபூசன், பாரத ரத்னா போன்றவற்றைப் பெற்றுள்ளார். 'ஏவுகணை தொழில்நுட்பத்தின் தந்தை' என வர்ணிக்கப்படும் கலாம் இன்று இந்திய தேசத்தின் முதல் மனிதராகவும் உயர்ந்திருக்கிறார்.

இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இவரது தெரிவானது இந்திய முஸ்லிம் சமூகத்தையோ சர்வதேச முஸ்லிம் சமூகத்தையோ தலை நிமிர வைத்து விடாது. அப்துல் கலாம் என்ற தனிமனிதன் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் ஒருபுறமிருக்க, இந்தியா தனது இராஜதந்திரத்தை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறது என்பதே உண்மை.

அப்துல் கலாம் என்ற முஸ்லிம் B.J.P, R.S.S. போன்ற இந்துத் தீவிரவாதிகளால் எப்படி ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட முடியும்? முஸ்லிம்களை பரமவைரியாகக் கருதும் வாஜ்பாய், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஜனாதிபதி வேட்பாளராக அப்துல் கலாமைப் பிரேரித்தவுடன் எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டுள்ளார். இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்சிகளும் தமது ஆதரவை அப்துல் கலாமிற்கு நல்கின.

உண்மையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 'ஜனாதிபதி' நாம நிர்வாகியே ஆவார். அவருக்கு இலங்கை, அமெரிக்க ஜனாதிபதிகளைப் போன்ற நிறைவேற்று அதிகாரமில்லை. ஐக்கிய இராச்சியத்தின் 'முடி'க்குரிய அந்தஸ்தே இவருக்குரியது. நான்கு வருடங்களுக்கொரு முறை ஜனாதிபதியைப் பிரதமர் நியமிப்பார். இவரது அனைத்துச் செயற்பாடுகளும் பிரதமரின் ஆலோசனைப்படியே இடம்பெறும். அத்தோடு இந்தியப் பாராளுமன்றத்தின் மேல், கீழ் சபைகளின் அங்கீகாரத்துடன் இவரது பதவியைப் பிரதமர் மீளப் பெற்றுக் கொள்ளவும் முடியும். அதனால் பெயரளவிலான கௌரவப் பதவியே இந்திய ஜனாதிபதி பதவியாகும். அதனை வைத்து எந்தச் சாதனையையும் எவராலும் செய்ய முடியாது. இவ்வாறான ஒரு பதவிக்கு ஒரு முஸ்லிமைத் தெரிவுசெய்திருப்பதினூடாக இந்தியா தனது ராஜதந்திரத்தை வெளிப்படுத்தியுள்ளது என்றோம். அதாவது அண்மையில் இந்தியா மேற்கொண்ட

இதனூடாக தேசிய ரீதியில் முஸ்லிம்களின் எதிர்ப்பை B.J.P திசை திருப்ப முயன்றுள்ளது. பொதுத் தேர்தல் மிக அண்மையில் இருப்பதுவும் இதற்குரிய காரணியே. அத்தோடு சர்வதேச அரங்கில் முஸ்லிம் உலகிலிருந்து எழும் கேள்விக்கணைகளுக்கும் இந்தியா பூட்டுப் போட்டுள்ளது.

பொதுவாக இந்திய ஜனாதிபதிப் பதவிக்கு கடுமையான போட்டி நிலவுவதில்லை. ஏனெனில் இந்திய அரசியலமைப்பில் சிறுபான்மைகளுக்கான காப்பீடாக அப்பதவியும் காணப்படுகிறது. எனவேதான் முன்னைய ஜனாதிபதியான கே.ஆர். நாராயணன் நியமனத்திலும் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகளும் தமது ஆதரவை நல்கின என்பது குறிப்பிடத்தக்கது. எனவே முஸ்லிம்கள் இவ்விடயத்தில் பெருமிதப் பட்டுக் கொள்ள எதுவும் கிடையாது.

மேலும் ஓர் அணுவிஞ்ஞானிக்கு இப்பதவியை அளித்ததன் மூலம் BJP தனது பிராந்திய மேலாதிக்கக் கொள்கைக்கு கௌரவம் அளித்துள்ளது எனலாம். அத்துடன் 'இஸ்லாம்' பற்றித்தனக்கு எதுவுமே தெரியாதது போல காட்டிக் கொண்டு சாமியார்கள் முன் மண்டியிட்டதன் மூலம் இஸ்லாத்தை இரண்டாம் தரமாக்கி முஸ்லிம்களுக்கோர் அவமானச் சின்னமாகவே காட்சியளிக்கிறார் அப்துல் கலாம்.

- நாச்சியூர் பர்வீன் -

> **இன்றைய பொசன் பண்டிகைகளில் பௌத்தர்களை விடவும் எமது இஸ்லாமிய சகோதரர்களே ஆர்வமாக பங்குகொள்கிறார்கள். சிங்களவர்களின் மத அனுஷ்டானங்களை அங்கீகரிக்கும் விதத்தில் எமது முஸ்லிம் தாய்மார்களும், இளைஞர்களும், யுவதிகளும் பௌத்த மக்களோடு இரண்டறக் கலந்து பொசன் பண்டிகைகளை கோலாகலமாக கொண்டாடுகின்ற அவலநிலை பொதுவாக அனுராதபுரத்தை அண்டி வாழும் முஸ்லிம் பிரதேசவாதிகளுக்குள் புற்றுநோயாய் படர்ந்திருக்கிறது**

கடந்த ஜூன் மாதம் சிங்கள பௌத்த மக்களுக்கு புனித மாதமாகும். பௌத்த மதம் இலங்கைக்கு அறிமுகமாகிய தினத்தை நினைவுகூருமுகமாக மிகுந்த கோலாகலமாக பொசன் பண்டிகை சிங்கள பௌத்த மக்களால் கொண்டாடப்பட்டது. பொதுவாக அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி ஆகிய பிரதேசங்களில் பொசன் பண்டிகை களைகட்டியிருக்கும். மதஅனுஷ்டானங்கள் நிறைந்திருக்கும்.

இந்த குறிப்பிட்ட கால எல்லையில் சிங்கள பௌத்த மக்கள் கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் குடும்ப சகிதம் ஈடுபடுவார்கள்.

# பொசன் பண்டிகைகளில் சீரழியும் முஸ்லிம்கள்!

இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கும் இவற்றை பார்த்து ரசிப்பதற்குமென இப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான மைல்களையும் தாண்டி பல இலட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டிருப்பர். ஆண்-பெண் பேதமின்றி அங்குமிங்கும் தோரணங்கள், விநோத நிகழ்வுகள் என்பவற்றைப் பார்க்க மக்கள் வெள்ளம் அலைமோதுவதுண்டு.

சனநெரிசல் அதிகமாக இருப்பதால் நெரிசலில் தாம் விரும்பியவாறு நடந்து கொள்ளலாம். ஆண், பெண் பேதங்களை மறந்தவர்களாக நான் முந்தி, நீ முந்தி என அலைமோதும் மக்கள் வெள்ளத்தில் எது நடந்தாலும் கண்டுகொள்ளப்படுவதில்லை. அத்தோடு பெரும்பாலும் இளசுகள் தமது இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்த பொசன் பண்டிகையை ஒரு தளமாக பாவித்துக் கொள்ளத் தவறுவதில்லை என்பது கடந்தகால அனுபவம்.

இங்கு கவலையையும் ஆத்திரத்தையும் ஊட்டும் விடயம்தான் குடும்ப சகிதம் எமது 'இஸ்லாமிய தாய்மார்' பொசன் பண்டிகைகளில் கலந்து சீரழிவதாகும்.

ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் தாய்மார்களின் கைகளில் பெரிதும் தங்கியிருக்கிறது. ஒரு பிள்ளையின் ஆரம்பப் பள்ளிக்கூடம் தாயின் மடிதான். இதனால்தான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாய்மாரை கண்ணியப்படுத்தி உயர்வாகப் பிரஸ்தாபித்துள்ளார்கள். அவர்களது ஒரு பொன்மொழியின் கருத்து பின்வருமாறு அமைந்திருக்கிறது.

*"எல்லாக் குழந்தைகளும் இஸ்லாத்திலேயே பிறக்கின்றன. அதன் தாய் தந்தையரே அதனை ஒரு நஸாராவாகவோ, ஒரு யஹூதியாகவோ, ஒரு நெருப்பு வணங்கியாகவோ வளர்க்கிறார்கள்"*

இந்த ஹதீஸிலிருந்து எமக்கு தெளிவுபடுத்தப்படுவது ஒரு பிள்ளையின், அக, புற செயற்பாடுகளுக்கு அடித்தளமிடுபவர்கள் பெற்றோர்களே என்பதாகும். இவற்றையெல்லாம் எமது முஸ்லிம் பெற்றோர்கள் கண்டுகொள்வதில்லை. ஹதீஸ்களை புறந்தள்ளியவர்களாக தம் மனோ இச்சைப் பிரகாரம் தானும் வாழ்ந்து தனது குடும்பத்தையும் வாழ பழக்கி விடுகின்றார்கள். பிறகெப்படி எமது சமூகத்திற்கு விடிவு கிடைப்பதும் ஏனைய சமூகங்களுக்கு நாம் முன்மாதிரியாக இருப்பதும்?

இன்றைய பொசன் பண்டிகைகளில் பௌத்தர்களை விடவும் எமது இஸ்லாமிய சகோதரர்களே ஆர்வமாக பங்குகொள்கிறார்கள். சிங்களவர்களின் மத அனுஷ்டானங்களை அங்கீகரிக்கும் விதத்தில் எமது முஸ்லிம் தாய்மார்களும், இளைஞர்களும், யுவதிகளும் பௌத்த மக்களோடு இரண்டறக் கலந்து பொசன் பண்டிகைகளை கோலாகலமாக கொண்டாடுகின்ற அவல நிலை பொதுவாக அனுராதபுரத்தை அண்டி வாழும் முஸ்லிம் பிரதேசவாதிகளுக்குள் புற்றுநோயாய் படர்ந்திருக்கிறது

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. அதற்கு எமது இலங்கை நாடும் விதிவிலக்கல்ல. எம்மீது முடுக்கிவிடப்பட்டிருக்கின்ற மனிதாபிமானமற்ற கொடூரங்களுக்கு ஒரு வகையில் நாமும் காரணகர்த்தாக்கள் என்பதை மறுக்க முடியாது.

அந்நிய கலாசாரத்திற்குள் ஆட்படுத்தப்பட்டு எமது சமூகத்தின் கௌரவத்தை சீரழிப்பதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு இரண்டு வகையான தீமைகள் உண்டாகின்றன என்பதை குடும்ப சகிதம் விசிட் அடிக்கும் தாய்மார்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

முதலாவது, லௌகீக ரீதியான பாதிப்பு. தூய்மையான இஸ்லாமிய மார்க்கத்தில் பிறந்த ஒரு பிள்ளையை மாற்றுமதத்தவர்களின் பண்டிகை, திருவிழா ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்லும்போது அங்கு நடக்கும் களியாட்டங்கள், கேலிக்கூத்துக்கள் என்பவற்றில் அப்பிள்ளை தன்னை இழந்து போகிறது. தொடர்ந்தும் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து இன்பம் நுகர வேண்டும் என்ற உள்ளுணர்வு தானாகவே அப்பிஞ்சு

பர்தா, ஹிஜாப், தொப்பி அணிந்தவர்களாக, தாடி வைத்தவர்களாக முக்கிய கடமையொன்றினை நிறைவேற்றப் போகும் சந்தோஷத்தில் புத்தாடை புனைந்து, புதுமணம் பூசி, தாய், தந்தை, பிள்ளைகள் என ஒட்டுமொத்தக் குடும்ப அங்கத்தவர்களும் பாய் தலையணை சகிதம் சென்று விடியவிடிய திருவிழாவில் ஆடிப்பாடி கூட்டத்தோடு கும்மாளம் அடித்து இஸ்லாத்தின் தூய்மைக்கும், நம்பகத் தன்மைக்கும் மாசு கற்பிக்கிறார்கள்

மனதில் பதிகிறது. இது இஸ்லாத்திலிருந்து அப்பிள்ளையின் சிந்தனையை கொஞ்சம், கொஞ்சமாக திசைதிருப்ப அடிப்படையாக அமைகிறது.

இரண்டாவது, ஆத்மீக ரீதியான விபரீதம். இஸ்லாத்தில் பிறந்த ஒரு குழந்தை இஸ்லாமிய மார்க்கத்தை விடவும் அன்னிய மார்க்கத்தின்மீது கண்மூடித்தனமான பற்று வைத்திருப்பதும், எம்மதமும் சம்மதம் என்ற நாத்திகக் கொள்கையை மனதில் நிலைநிறுத்திக் கொள்வதும் ஆகும். இந்த சூழ்நிலையில் அக்குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகுகூட இக்கொள்கையிலிருந்து விடுபட மாட்டாது. இவ்வாறானவர்களை இலகுவில் மதமாற்றம் செய்யவும் முடியும். (நஊது பில்லாஹி மின்ஹா) இஸ்லாத்தில் பூரண அறிவும் பரந்த சிந்தனையும் இல்லாத எத்தனையோ இளைஞர் யுவதிகள் அண்மைக் காலங்களில் மாற்று மத இளைஞர் யுவதிகளோடு குடும்பம் நடத்துவதையும் காண்கின்றோம்.

இதன்மூலம் இஸ்லாத்தில் பிறந்த ஒரு ஜீவன் ஹராமான வாழ்க்கை நடத்தி இறந்துபோக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுத்தப்படுகிறது. மறுமையில் அவர்கள் விமோசனம் பெறுவதென்பது அல்லாஹ்வின் அளவில்தான் இருக்கின்றது.

*எந்த ஒரு சமூகம் தன் தலைவிதியை தானாக மாற்றிக் கொள்ளாதவிடத்து அல்லாஹ்வும் அதனை மாற்ற மாட்டான்*

இதன் கருத்து எமக்கு தெளிவுபடுத்துவதெல்லாம், எமது சிந்தனை விருத்தி, மார்க்க அறிவு என்பவற்றை பயன்படுத்துவதன் மூலம் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவர்களாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வழிமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதாகும்.

ஆனால் நம்மவர்களின் நிலைப்பாடு ரொம்பவும் கீழ்த்தரமாகவும், இஸ்லாத்தின் பார்வையில் வெறுக்கத்தக்கதாகவும் காணப்படுகிறது. பர்தா, ஹிஜாப், தொப்பி அணிந்தவர்களாக, தாடி வைத்தவர்களாக முக்கிய கடமையொன்றினை நிறைவேற்றப் போகும் சந்தோஷத்தில் புத்தாடை புனைந்து, புதுமணம் பூசி, தாய், தந்தை, பிள்ளைகள் என ஒட்டுமொத்தக் குடும்ப அங்கத்தவர்களும் பாய் தலையணை சகிதம், பக்கத்து வீட்டவர்களையும் அழைத்துச் சென்று விடியவிடிய திருவிழாவில் ஆடிப்பாடி கூட்டத்தோடு கும்மாளம் அடித்து இஸ்லாத்தின் தூய்மைக்கும், நம்பகத் தன்மைக்கும் மாசு கற்பிக்கிறார்கள். இவர்கள் இனியாவது திருந்துவார்களா? அல்லாஹ்தான் இவர்களுக்கு நேரான வழியைக் காட்ட வேண்டும்.

தான் செய்யும் முரண்பாடுகளில் தமது பிள்ளைகளையும் பங்குதாரர் ஆக்கும் கேவலமானவர்கள் நிச்சயம் இறைவனிடத்தில் கேள்விக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

# ரப்பாணிய துளிகள்

## உள்ளங்களை இஸ்லாம் ஆளுமென்றால்...

இஸ்லாம் உலகை ஆள வேண்டும் என்றால் உள்ளங்களில் இஸ்லாம் வாழ வேண்டும். இஸ்லாத்தால் ஆளப்படும் உள்ளங்கள் இணையும் போதே இஸ்லாம் வாழும். இஸ்லாத்தால் ஆளப்படும் உள்ளம் இப்படித்தான் இருக்கும்:

- அந்த உள்ளத்திற்கும், அல்லாஹ்வுக்கும் மிகநெருங்கிய தொடர்பு இருக்கும். இஹ்ஸானிய உணர்வு அந்த உள்ளத்திலே மேலோங்கி இருக்கும். இஸ்லாமிய உணர்வால் அது தன்னை விலங்கிட்டுக் கொண்டிருக்கும்.
- இஸ்லாத்தால் ஆளப்படும் உள்ளத்திற்கு அல்-குர்ஆனின் வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால் அந்த உள்ளம் திடுக்கிடும். தன்நிலை மறந்துவிடும். தன்னை முற்று முழுதாக அந்த வசனத்திற்கு அடிமைப்படுத்திவிடும்.
- அல்லாஹ்வை வணங்குவதிலேயே அந்த உள்ளம் அமைதியடையும். அல்லாஹ்வை இபாதத் செய்வதில் அந்த உள்ளத்திற்கு கண்குளிர்ச்சி ஏற்படும். இபாதத்களிலே ஆசையும், எதிர்பார்ப்பும் இருக்கும்.
- இஸ்லாத்தால் ஆளப்படுகின்ற உள்ளம் எப்போதும் நபிமார்கள், ஸஹாபிகள், எமது முன்னோர்கள் மற்றும் இஸ்லாத்துக்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவர் மீதும் அன்பும், பாசமும் கொண்டிருக்கும். அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்கக் கூடிய உள்ளங்களாக இருக்கும். இன்னும் அவர்களைப் பற்றிய வெறுப்போ, குரோதமோ இந்த உள்ளங்களிலே ஏற்பட மாட்டாது.
- அந்த உள்ளம் பாவச் செயல்களிலே மோகம் கொள்ளாது. ஏதேனும் பாவச் செயல்களைச் செய்தாலும் உடனே அல்லாஹ்வின்பால் மீண்டு பாவ மன்னிப்பை வேண்டிக் கொள்ளும்.
- குறுகிய இலட்சியங்களை விட்டும் அந்த உள்ளம் விசாலமான ஓர் இலட்சியத்தை வேண்டி நிற்கும். அந்த உள்ளத்தின் தீராத ஆசையும், தாகமும் அல்லாஹ்வின் திருப்தியும், சுவனமுமாகிய அந்த இலட்சியம்தான்.

இஸ்லாத்தால் ஆளப்படும் உள்ளமாக எமது உள்ளங்களும் இருக்கின்றனவா என்று ஒருமுறை உரசிப்பார்ப்போம்.

**கோத்ரா ரயில் எரிப்பு :** நன்றி : ஒற்றுமை (ஜூலை 16–31, 2002)

# யார் புரிந்தார் இந்தக் கொடுமையை?

இந்தியாவை மட்டுமல்லாது உலகையே உலுக்கிய 2000க்கு மேற்பட்ட முஸ்லிம்களின் உயிர்கள் இழப்பதற்கு காரணமாக இருந்த கோத்ரா ரயில் எரிப்பு நடந்தது எப்படி என்பது குறித்த திடுக்கிடும் தகவலை அஹமதாபாத்தில் உள்ள தடயவியல் ஆராய்ச்சி ஆய்வகம் (Forensic Research Laboratory) அளித்துள்ளது.

பெப்ரவரி 27 அயோத்தியில் இருந்து கரசேவகர்களை ஏற்றிக் கொண்டு வந்த சபர்மதி எக்ஸ்பிரஸ், கோத்ரா ரயில் நிலையத்தை விட்டு கடந்த சில நிமிடங்களில் நிறுத்தப்பட்டது. இந்த ரயிலின் எஸ்-6 பெட்டி அப்போது தீக்கிரையாகி அதில் பயணம் செய்தவர்களில் சுமார் 50 பேர்களின் உயிரை வாங்கியது. ரயில் எரிப்புத் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு இதுவரை 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ரயில் எரிப்பு தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக தடயவியல் ஆய்வாளர்கள் ரயில் பெட்டியை யார் எரித்திருக்கக் கூடும் என்று புலனாய்வு செய்தார்கள். குஜராத் மாநிலத்தின் தலைநகரான அஹ்மதாபாத்தில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்தின் உதவி இயக்குனர் டாக்டர் எம்.எஸ். தாஹியா மற்றும் அதன் அறிவியல் அலுவலர் எல்.என். ஜோஷி ஆகியோர் கோத்ராவிற்கு நேரடியாக வருகை தந்து பல பரிசோதனைகளை ரயில் எரிக்கப்பட்ட இடத்தில் நடத்தினர். இதற்காக ஒரு ரயில் பெட்டியையும் அந்த இடத்திற்கு அவர்கள் வரவழைத்தனர். பல்வேறு கோணங்களில், பல்வேறு முறைகளைப் பின்பற்றி சமர்பதி எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டி எவ்வாறு எரிக்கப்பட்டிருக்கும் என்பதை அவர்கள் ஆய்வு செய்தனர். இதன் பிறகு தங்கள் ஆய்வு முடிவுகளை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வறிக்கை, ரயில் எரிப்பில் தொடர்புடையவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முஸ்லிம்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டு, கோத்ரா ரயில்வே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரயில் எரிப்புச் சம்பவம் குறித்து இது வரை அரசுத் தரப்பில் கூறப்பட்டு வந்த தகவல்களைப் பொய்ப்பிக்கும் வகையில் தடயவியல ஆய்வக அறிக்கை அமைந்துள்ளது. கோத்ரா ரயில் நிலையத்திற்கு சற்று வெளியே பாதியா சிக்னல் அருகே சமர்பதி எக்பிரஸை நிறுத்திய கும்பல்தான் வெளியில் இருந்து எரிபொருளை வீசி ரயில் பெட்டிக்குத் தீவைத்தது என்று குஜ்ராத் அரசு வாதிட்டு வந்தது. ஆனால் பெட்டிக்கு வெளியில் இருந்து எரிபொருளை வீசி தீவைக்கும் வாய்ப்பு இல்லை என்று தடயவியல் ஆய்வக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் எரிக்கப்பட்ட எஸ்-6 பெட்டியின் ஜன்னல் தரையிலிருந்து 7 அடி உயரத்தில் இருந்தது. எனவே வாளி அல்லது கேன் மூலமாக பெற்றோல் போன்ற எரிபொருளை ரயில் பெட்டிக்குள் வாரிஇறைப்பது கடினமானது என தடயவியல் அறிக்கை குறிப்பிடுகிறது. ரயில் பெட்டி எரிக்கப்பட்ட இடத்திலிருந்து 14 அடி தூரத்தில் 3 அடி உயரமுள்ள ஜல்லியின் மீது நின்றுகொண்டு, தடயவியல் ஆய்வாளர்கள் பரிசோதனைக்காக கொண்டுவரப்பட்ட ரயில் பெட்டிக்குள் தண்ணீர் ஊற்ற முயன்றார்கள். ஆனால் இப்படி வீசப்பட்ட தண்ணீரில் 10 முதல் 15 சதவீத தண்ணீர் மட்டுமே பெட்டிக்குள் சென்றது. எஞ்சியவை தண்டவாளத்திலேயே விழுந்தன. இந்த பரிசோதனையின் அடிப்படையில் தடயவியல் ஆய்வாளர்கள் பின்வரும் முடிவை அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்:

இப்படிப்பட்ட சூழலில் (வெளியிலிருந்து எரிபொருள் வீசப்பட்டிருந்தால்) எஸ்-6 பெட்டி வெளியிலிருந்து தீப்பிடித்திருக்கும். தண்டவாளத்திலும் எரிபொருள் கொட்டிக் கிடக்கும். நிலையில் பெட்டியின் அடிப்பாகத்தையும் நெருப்பு சூழ்ந்திருக்கும். ஆனால் தண்டவாளங்களையும், எஸ்-6 பெட்டியின் வெளிப்புறத்தையும் பரிசோதித்துப் பார்க்கும்போது ஜன்னலுக்குக் கீழுள்ள பகுதியில் நெருப்பினால் பாதிக்கப்பட்ட தடயம் எதனையும் காணமுடியவில்லை. பெட்டிக்கு வெளியிலிருந்து எரிபொருள் வீசப்படவில்லை என்பதை இது உறுதி செய்கிறது.

தடயவியல் ஆய்வாளர்கள் ரயில் பெட்டிக்குள் நின்றுகொண்டு 60 லீட்டர் தண்ணீரை ஊற்றினார்கள். தண்ணீர் திறந்து வைக்கப்பட்ட கதவு வழியாக வெளியேறவோ அல்லது கழிவறையை நோக்கி ஓடவோ இல்லை என்பதையும் கண்டனர். இறுதியாக அவர்கள் தெரிவித்துள்ள முடிவு இதுதான்.

பெப்ரவரி 27 அன்று நடந்ததுபோல் ரயில் பெட்டியை எரிக்க வேண்டுமெனில், இப்பெட்டியில் 72ம் எண் இருக்கை அருகே நின்று பெரிய கேன் மூலம் 60 லீட்டர் எரிபொருள் ஊற்றப்பட்டிருக்க வேண்டும்.


ரயில் தண்டவாளத்தின் தென்புறத்திலிருந்து எரிக்கப்பட்ட பெட்டி மீது பலமான கல்வீச்சு நடந்துள்ளதை இந்த அறிக்கை உறுதிசெய்கிறது. பெட்டியின் ஒரு பக்கத்திலுள்ள கண்ணாடிகள் கல்வீச்சினால் நொறுக்கப்பட்டிருந்தன. வடபுறத்தில் உள்ள கண்ணாடிகள் நெருப்பினால் உருகிப் போயிருந்தன.

முதலில் வந்த தகவல்கள் எரிக்கப்பட்ட பெட்டியின் அனைத்துக் கதவுகளும் உட்பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தன என்று கூறின. ஆனால் சம்பவம் நடைபெற்றபோது மூன்று கதவுகள் திறந்திருந்துள்ளன. ஆனால் ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. வெளியிலிருந்து ஜன்னல் கம்பிகளை வளைக்க எவ்வித முயற்சியும் செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் இல்லை. ஆனால் உள்பக்கத்தில் இருந்து அவற்றை உடைப்பதற்கான முயற்சி நடைபெற்றுள்ளது. அல்லது அவை நெருப்பில் உருகியுள்ளன. ரயில் பெட்டியின் உள்ளே தீ பரவிய விதம் - தரையின் மீது அது ஏற்படுத்திய பாதிப்பு இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும போது நெருப்பு வேகமாகப் பரவி, பெட்டியில் 80 சதவீதத்தை அழித்துள்ளது தெரிய வருகிறது என்று இந்த அறிக்கை கூறுகிறது.

ஆக தடய அறிக்கை மிகத் தெளிவாக, ரயிலை மறித்து, அதன் மீது கற்களை வீசிய கும்பல்களினால் வெளியிலிருந்து பெற்றோல் ஊற்றப்பட்டு எஸ்-6 எரிக்கப்பட்டது என்ற வாதத்தைத் தவிடு பொடியாக்கியுள்ளது.

எனினும், உளளூர் முஸ்லிம்கள்தான் ரயிலுக்கு வெளியில் நின்று எரிபொருளை பெட்டிக்குள் வீசினார்கள் என்ற தங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று விஸ்வ ஹிந்து பரிசத் அமைப்பினர் கூறியுள்ளனர். பெருமளவில் கல்வீச்சு நடைபெற்றிருப்பதால் பெட்டியின் ஜன்னல்களும், கதவுகளும் அடைக்கப்பட்டிருந்ததாகவும், தண்ணீர் குழாய்கள் மூலம் எரிபொருளை சிலர் ரயில் பெட்டிக்குள் செலுத்தி தீவைத்ததாகவும் அவர்கள் கூறினார்கள். தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிக்கை தங்கள் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# புனித க.்.பதுல்லாஹ்வின் திரையும், திறவுகோலும்



ஒரு வருடத்தில் இரு தடவை புனித க.்.பதுல்லாஹ் கழுவி சுத்தம் செய்யப்படுகிறது. ரமழான் மாதம் முதல் தடவையும், ஹஜ் மாத ஆரம்பத்தின்போது இரண்டாவது தடவையுமாக சஊதி அரசர், அமைச்சர்கள், மக்கா நகர ஆளுநர் அல்லது அரச பிரதிநிதிகளில் ஒருவர் தலைமை ஏற்று பாரம்பரிய முறைப்படி வருடா வருடம் க.்.பாவை கழுவி சுத்தம் செய்து கண்ணியப்படுத்தி வருவது வழக்கம்.

க.்.பாவின் சுவரையும் நிலத்தையும் புனித ஸம்ஸம் நீருடன் பன்னீர் கலந்து சுமார் ஒருமணி நேரம் கழுவும் வைபவத்தை அமைச்சர்களும், வெளியுறவுத் தூதுவர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்றும் உடனிருந்தும் கண்டுகளிப்பர். அடுத்துவரும் தினத்தில் 'ஊத்' நறுமணப் புகையிட்டபின் புதிய கறுப்பு வர்ண 'கிஸ்வா' துணியினால் க.்.பா போர்த்தி அலங்கரிக்கப்படும். 450 கிலோ கிராம் அசல் பட்டு நூலினால் நெய்யப்பட்ட இந்த ஜரிகை அசல் பட்டுத் துணியின் மெறுமதி 17 மில்லியன் சவூதி ரியாலாகும். இதைத் தயாரிப்பதற்கெனவே 1926ம் ஆண்டு தொடக்கம் மக்காவில் ஒரு நெசவாலை இயங்கி வருகிறது. நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ள அங்கே அரபு வரைகலை அறிவு, சித்திரத் தையல் கலையில் ஆற்றல்மிக்க நூற்றுக்கு அதிகமான சவூதி இளைஞர்கள் இப்போது பணியாற்றி வருகிறார்கள்.

க.்.பாவின் நாலு சுவரிலும் சுற்றி மறைக்கப்பட்டுள்ள 'கிஸ்வா' துணியின் உயரம் 14மீற்றர். கதவில் போடப்பட்டுள்ள துணியின் உயரம் 6.5 மீற்றர் அகலம் 3.5 மீற்றரும் கொண்டதாகும். கிஸ்வாவின் உட்பகுதியில் அல்லாஹ்வின் அழகிய நாமமும், தௌஹீத் கலிமாவும் திருக்குர்ஆன் வசனங்களும் பதிக்கப்பட்டு தங்கம் பூசிய வெள்ளி நூல் இழையினால் அரபு எழுத்தணிக்கலை அழகுடன் வரிசையாக பின்னித் தைக்கப்பட்டுள்ளன.

புதிய கிஸ்வாவினால் க.்.பா அலங்கரிக்கப்பட்ட பின் அப்புறப்படுத்தப்பட்ட பழைய கிஸ்வா சிறு பிரேம் அளவு துண்டுகளாகக் கத்தரிக்கப்பட்டு உலக முஸ்லிம் நாடுகளின் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் இஸ்லாமிய பண்பாட்டு மையங்களுக்கும் வருடா வருடம் சவூதி அரசின் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

புனித க.்.பாவின் கதவுக்கு சுமார் 40 செ.மி. அளவில் ஒரு திறவுகோல் உள்ளது. அது நபி (ﷺ) அவர்களின் காலத்திற்கு முன்னால் ஞாபகத்திற்கு எட்டாத சுமார் 3000ம் ஆண்டுகளாக அல்-ஷாய்பி குடும்பத்தாரின் பொறுப்பிலேயே வைக்கப்பட்டுள்ளது.

ஹிஜ்ரி 8ஆம் ஆண்டில் மக்க மாநகரின் ஆட்சி நபிகளாரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும் அலி இப்னு அபீ தாலிப் (رضي) அவர்கள் அல் ஷாய்பியிடமிருந்து க.்.பாவின் திறப்பைக் கைப்பற்றினார்கள். அப்போது திருக்குர்ஆனின் வசனமான,

**"(விசுவாசிகளே! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரரிடம் நீங்கள் ஒப்படைத்து விடுமாறும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால், (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான். நிச்சயமாக அல்லாஹ் எதனை உங்களுக்கு உபதேசிக்கிறானோ அது மிக்க நல்லதாகும். நிச்சயமாக அல்லாஹ் அதனை செவியேற்கிறவனாக, பாக்கியவானாக இருக்கிறான்"**

**(ஸூரா அன்னிஸா : 58)**

அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டதாக சில ரிவாயத்துகள் குறிப்பிடுகின்றன. உடனே நபிகள் நாயம் (ﷺ) அவர்கள் தல்ஹா (ﷺ) அவர்களிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்து இவ்வாறு கூறினார்கள்:

**"நீண்டகாலமாக (மக்காவில்) வாழ்ந்து வரும் பழங்குடிப் பெருமக்களே! நீங்கள் இதை வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடமிருந்து அநீதியான முறையில் இந்தத் திறவு கோலை எடுக்கலாகாது"**

அன்று தொடக்கம் இன்றுவரை அல்ஷாய்பி குடும்பத்தாரிடமிருந்து க.்.பதுல்லாஹ்வின் திறவுகோலை முஹம்மத் (ﷺ) அவர்களை மீறிப் பெறுவதற்கு யாருமே துணியவில்லை. தற்சமயம் அந்தக் குடும்பத்தின் மிக மூத்த அங்கத்தவரான ஷெய்க் அப்துல் அஸீஸ் அல்-ஷாய்பி அதைத் தன் பொறுப்பில் வைத்திருப்பதற்கு சவூதி அரசின் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

க.்.பதுல்லாஹ்வின் உள்அமைப்பு எப்படி இருக்கும் என்கின்ற கேள்விக்கு ஷெய்க் அப்துல் அஸீஸ் தரும் விளக்கம்:

'அங்கே அசாதாரணமானதாகவோ, ரகசியமானதாகவோ எதுவும் இல்லை. மூன்று தூண்களைக் கொண்ட ஒரு தனி அறையுள்ளது. அதில் பண்டைக்காலத்துப் பொருட்கள் சில வைக்கப்பட்டிருக்கும். மேற்கூரைக்கு செல்லக்கூடிய ஒரு கதவு உள்ளது. *'செய்த குற்றங்களுக்காக வருந்தும் (இடம்) கதவு'* என்பது அதன் பெயர். இவற்றைத் தவிர வேறு புராதன கையெழுத்துப் பிரதிகளோ, இனவாரியான கவிதைகளோ அங்கே இப்போது காணப்படுவதில்லை. அப்படிக் கூறப்படுவதெல்லாம் உதுமானியர் காலத்தில் இட்டுக்கட்டப்பட்ட வதந்திகளாகும். பழங்காலத்தில் அங்கே வைக்கப்பட்டிருந்த எல்லாவிதமான புராதன பொருட்களும் துருக்கியிலுள்ள உதுமானிய அருங்காட்சியகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. ஒரு பெட்டி மட்டும் உள்ளது. அதில் புனித க.்.பாவின் உள் சுவர்களைக் கழுவுவதற்காக ஸம்ஸம் நீரும் பன்னீரும் வைக்கப்படும்.

காலம் காலமாக க.்.பாவின் திறவு கோலைப் பொறுப்பேற்றுவரும் அல்-ஷாய்பு குடும்பத்திலிருந்து சவூதி அரசு ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பகாலம் முதல், முதலாவதாக ஷைக் அமீன், அடுத்து ஷைக் தாஹா, அசீம் தல்ஹா, ஆகியோர் வரிசையாக அப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார்கள். தற்போது க.்.பாவின் திறவுகோல் ஷெய்க் அப்துல் அஸீஸ் அல்-ஷாய்பியின் பொறுப்பில் உள்ளது. அன்று க.்.பாவின் திரையையும் அல்-ஷாய்பி குடும்பத்தினரே தயாரித்து வழங்கினர். இன்று சவூதி அரசே அப்பணியை மேற்கொண்டு சிறப்புடன் செய்துவருகிறது.

தகவல் மூலம்:

1. அல்-இக்திஸாதியாஹ்- (சவூதி அரபு நாளிதழ்)
2. அரப் நியூஸ்- ஆங்கில நாளிதழ்
3. WWW.AskWajidi.com

**— ஹுஸைன் ஷெரீப் —**



# ‘சாதனை புரிவோம்’ என்று...

## சோதனையாக்கிக் கொள்ளாதீர்கள்!

அல்லாஹ் தஆலாவின் அருளைக் கொண்டு எதிர்வரும் சோதனைகளை எவ்வாறு எதிர்நோக்கி அவன்பால் இரந்து நின்று, அவனது உதவி கொண்டு எப்படி முறியடித்து வெற்றி கொள்ளலாம் என சென்ற இதழில் பார்த்தோம். இத்திட்டத்தின் கடைசிப் படியாக சமூக சேவையில் ஈடுபடலாம் எனக் குறிப்பிட்டிருந்தேன். ஆயினும் இஸ்லாமிய அடிப்படையில் சமூக சேவை செய்தல் என்பது கத்தி மேல் நடப்பது போன்ற விடயம். சரியான வழிமுறை தெரிந்தால் யாரொருவரும் இவ்வித்தையில் வெற்றி பெறலாம்.

சமூக சேவையின் அடிப்படை ஷரீஆ பற்றிய அறிவாக இருக்க வேண்டும். எங்கெங்கு ஷரீஆ அறிவு இல்லையோ அங்கு வழிதவறிப்போக வழியுண்டு. இதனால்தான் எத்தனையோ பேர் சமூக சேவை செய்கின்றேன் பேர்வழி என்று கிளம்பி நரகத்தின் வாயிலில் போய் நிற்கின்றனர். *“நரகத்தின் படிக்கட்டுகள் நல்லெண்ணங்களால் அமைக்கப்பட்டுள்ளன”* என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு.

ஷரீஆ அறிவின்றி சமூகசேவை செய்யக் கிளம்பும் யாரும் இந்தப் பாதாளத்தில் விழுந்துவிட முடியும். எனவே, எந்தவொரு சமூக சேவையையும் செய்யும்முன் மூன்று விடயங்களைக் கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

**ஒன்று,** அதைச் செய்ய விழையும் நிய்யத்து அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். அன்றி பேருக்காக, புகழுக்காக அல்லது பொழுது போக்குக்காக இருக்குமேயானால் அது எம்மை அழிவின் பாதையில் அழைத்துச் சென்றுவிடும். ஒரு முஸ்லிமின் சேவை தன்னை அழித்துக் கொண்டு மற்றோருக்கு ஒளிதரும் மெழுகுவர்த்தியாக இருக்கக்கூடாது. தானும் ஒளிபெற்று மற்றோருக்கும் என்றென்றும் ஒளி கொடுக்கும் சூரியனாக இருக்க வேண்டும். எமது ஒளியின் ஒரு கீற்று அல்லாஹ்வுக்காக எனும் நிய்யத்து; அதன் எண்ணெய் இஸ்லாமிய அறிவு.

**இரண்டாவதாக,** நாம் சேவை செய்யும் முறை குர்ஆன் ஸுன்னாவுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். என்று எம் சேவை இவற்றுக்கு அப்பாற்பட்டுவிடுமோ அவையெல்லாம் வீணாய்ப் போனதாகவே ஆகிவிடும்.

**மூன்றாவதாக,** நாம் என்ன செய்ய விழைகிறோம் என்ற விடயம் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். வெறுமனே ஏதோ என்னவோ எம்மாலானதைச் செய்தோம் என்றில்லாமல் திட்டமிடப்பட்டு, சிறிய விடயமாக இருப்பினும் செவ்வனே செய்வதற்குரிய முறைகள் முறையாகக் கருத்தில் கொள்ளப்பட்டு இச்சேவைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

சமூக சேவை என்பது பணத்தில் தங்கியுள்ளதென்பதால் பணத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுச் செய்யப்படும் சேவைகள் பல எதிர்பார்த்த வெற்றியைத் தருவதில்லை. மாறாக நம்மாலியன்றவரை நமது உழைப்பு, வேறு திறன்கள் இவற்றைக் கொண்டு எத்தனையோ சாதனைகளை சாதிக்க முடியும்.

சமூக சேவைகளில் மிக முக்கியமானது, மிக அவசியமானது, மிகுந்த மனமகிழ்ச்சி தரக்கூடியது குர்ஆன் கற்பிப்பதாகும்.

**“மனிதர்களில் மிகச் சிறந்தோர் குர்ஆனைக் கற்று மற்றோருக்கு அதனைக் கற்பிப்பவரே”** என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். குர்ஆன் கற்பிப்பதை மூன்று வகையாகக் கூறலாம்.

1. குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்தல்
2. குர்ஆனை ஓதும்போது விளங்கிக் கொள்வதற்காக அரபுமொழியைக் கற்றுக் கொடுத்தல்.
3. குர்ஆன் விளக்கம் (தப்ஸீர்), ஹதீஸ் இவற்றைக் கற்றுக் கொடுத்தல்.

இதில் முதலாம் விதத்தில் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுப்பதை யாரும் செய்யலாம். இதற்கு விசேட பயிற்சிகள் அல்லது திறமைகள் அவசியமில்லை. எனினும் கற்றுக் கொடுப்பவர் நிச்சயமாக தஜ்வீத் முறையில் கற்றுக் கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரியாதவிடத்து அதைக் கற்றுக் கொள்வது அப்படியொன்றும் கஷ்டமான விடயமல்ல. ‘‘அல்முஸ்லிமாத்’’ தில் ஒரே நாளில் தஜ்வீத் சட்டங்களைக் கற்றுக் கொடுக்க பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன. விரும்பியவர்கள் அல்முஸ்லிமாத்துடன் தொடர்பு கொள்ளலாம். அல்லது அந்தந்த ஊர்களில் மௌலவிகள் மௌலவியாக்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுப்பதில் உலகெங்கும் தற்போது ‘இக்ரஃ’ எனும் ஒரு நவீன முறை கையாளப்படுகிறது. இலங்கைக்கும் அண்மையில் இந்த முறை அல்முஸ்லிமாத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தனை காலம் வெறுமனே பாடமாக்குவதும் பாடம் கொடுப்பதுமாக மிகச் சோம்பலான முறையில் குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. இதனால்தான் சிலர் பாடசாலையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் இன்னோரன்ன மொழிகளை ஒரே வருடத்தில் பேச எழுத, வாசிக்க, விளங்கிக் கொள்ளத் திறன் பெறும் சிறார்கள் குர்ஆனை, அறபு மொழியை வெறுமனே வாசிக்கக் கற்றுக் கொள்வதற்காக 4 - 5 வருடங்களை எடுக்கிறார்கள்.

இம்முறையில் மற்றுமொரு விசேஷம் உண்டு. எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னரே இவற்றுக்கு ‘ஹரகத்’ வைத்து படித்துக் கொடுக்கப்படுகிறது. மற்ற மொழிகளிலும் Phonotic Method எனும் இம்முறை கையாளப்படுகிறது.

மற்றும் நிறையப் பயிற்சிகள் கொடுப்பதன் மூலமும் பெற்றோரின்



பங்களிப்பு மூலமும் குழந்தைகளின் திறமைக்கேற்றவாறு ஊக்கப்படுத்தக்கூடிய புள்ளிகளைக் கொடுப்பதன் மூலமும் குர்ஆன் பாடசாலைகள் ஒரு சந்தோஷம் மிக்க ஆர்வமூட்டக்கூடிய சூழலாக மாற்றப்படுகின்றன. இதற்கென விஷேட பயிற்சிப் புத்தகங்கள் அல்முஸ்லிமாத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இம்முறையை விரும்பியே இங்கு வந்து கற்றுக் கொண்டு செல்ல பயிற்சிகள் மாதந்தோறும் நடைபெறவுள்ளன. இன்ஷாஅல்லாஹ்

எனவே, சகோதரிகளே! சேவை செய்ய விரும்புகிறீர்களா? குர்ஆனைச் சிறந்த முறையில் கற்றுக் கொண்டு இன்று வளர்ந்துவரும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். பாடசாலைகளை உருவாக்கித்தான் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில்லை. உங்கள் சிறிய சகோதர சகோதரிகள், உறவினர்கள், அண்டை அயலவர்கள் இவர்களுக்குக் கற்றுக் கொடுக்க முன்வாருங்கள். பணத்தைப் பற்றி வருமானத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நாம் செய்யும் எந்தவொரு நல்ல காரியத்துக்கும் அல்லாஹ்விடம் நற்கூலியுண்டு. அதிலும் குர்ஆன் சொல்லிக் கொடுப்பதற்கு அதிகமதிகமான நன்மைகள் நிச்சயம்.

## Dr. மரீனா தாஹா ரிபாய்

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கற்றுக் கொடுக்கும் குழந்தைகள் குர்ஆன் ஓதும்போதெல்லாம் அதன் ஒவ்வோர் எழுத்துக்கும் உங்களுக்கு ஸதகதுல் ஜாரியாவாக நன்மைகள் எழுதப்படும் என்பதையும், மரணத்தின் பின்னும் நீண்டகாலம் பலன்தரக் கூடிய ஒரு நல்லமல் இது என்பதையும் கருத்தில் கொண்டு இதில் ஈடுபடுங்கள்.

இதற்கு ஓர் இடம், கட்டிடம், பாடசாலை என்பதெல்லாம் அவசியமில்லை. உங்கள் வீட்டில் ஒரு சிறிய இடத்தில் தொடங்கலாம். முடிந்தால் பாடசாலைகளில் மாலை நேரத்தில் நடத்தலாம். ஒருவர் தனியாகச் செய்வதைவிட உங்கள் கிராமத்தில் குடியிருப்பிலுள்ள 2-3 யுவதிகள் சேர்ந்து செய்தால் இதன் சுவையும் மெருகும் பன்மடங்காகும்.

இன்று பெரிதாகத் தெரியும் கவலைகள் குழந்தைகளின் சிரிப்பில், குர்ஆனின் சுவையில் கதிரவன் கண்டு மறையும் பனிபோல மறையும் அதிசயத்தை சுவைத்துப் பாருங்கள். இந்தச் சின்ன விடயம் இவ்வளவு மகிழ்ச்சி தரக்கூடியதா என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். நல்லமல் புரிவோருக்கு அல்லாஹ்வின் துணை என்றும் உண்டு. உங்களது பிரச்சினைகள் தானாகத் தீர்ந்துவிடும் புதினத்தை நீங்கள் அன்றாடம் காண்பீர்கள்.

ஒரு பெண் அடிப்படையில் செலவின்றி செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான சமூக சேவைகளில் இது ஒரு துளி. மற்றவை தொடரும், இன்ஷா அல்லாஹ்

## பாலர் கல்வியை இஸ்லாமியமயமாக்கல்- கருத்தரங்கும் நூல் வெளியீடும்

ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் தனது கல்வி வழிகாட்டல் செயற்திட்டத்தின்கீழ் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஒருநாள் கருத்தரங்கு ஒன்றினை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஆகஸ்ட் 22ம் திகதி காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கொழும்பில் நடத்த ஒழுங்கு செய்துள்ளது. மேற்படி கருத்தரங்கில்,

- பாலர் கல்வி பற்றிய கோட்பாடு
- பாலர் பாடசாலை குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சி
- பாலர் கல்வியை இஸ்லாமியமயமாக்கல்

ஆகிய தலைப்புக்களிலான விரிவுரைகளும் செயல் அமர்வுகளும் துறைசார் அறிஞர்களால் நடாத்தப்படும்.

கருத்தரங்கின் மாலைநேர அமர்வின்போது அமெரிக்க இக்ர:. கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த குழந்தை வளர்ப்பியல் நிபுணர் கலாநிதி தஸ்னீமா காஸி அவர்களால் எழுதப்பட்ட 'இஸ்லாமிய பாலர் கல்வித் திட்டம்' எனும் நூல் வெளியிடப்படும்.

எனவே, மேற்படி கருத்தரங்கிலும் நூல் வெளியீட்டிலும் கலந்துகொள்ள விரும்பும் பாலர் பாடசாலை ஆசிரியைகள் தங்களது விண்ணப்பப்படிவத்தை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்:

Serendib Institute of Research and Development
P O Box 760, Colombo.
Tel/Fx: 01-675534

## த:.வதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப் பரீட்சை -2002

மேற்படி போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31.08.2002 அன்று அகில இலங்கை ரீதியல் நடைபெறும், இன்ஷா அல்லாஹ்.

அதிகமானவர்கள் விண்ணப்பித்த பாடசாலைகளில் மேலதிக பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். பாடசாலைகள் மூலம் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு அவர்களது பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்தவர்களுக்கு அவர்களது சொந்த முகவரிக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

**த:.வதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா பகுதி**
**77, தெமடகொட வீதி,**
**கொழும்பு 09**
**தொலைபேசி : 01-687091**



# திருமண ஒப்பந்தங்களும் வாக்குமீறல்களும்

– செல்வி பாயிஸா ஜிப்ரி பேருவலை –

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம். அந்த வகையில் அது தனி மனித வாழ்க்கை முதல் சமூக வாழ்க்கைக்கான சகல வழிகாட்டல்களையும் வழங்கி மனித வாழ்வை நெறிப்படுத்துகிறது. மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமான திருமண விடயத்திலும் சீரிய வழிகாட்டல்களைத் தரத் தவறவில்லை.

ஆனாலும் நமது சமூகத்தில் திருமணம் என்ற தோரணையில் இஸ்லாமிய விதிமுறைகளுக்கு மாற்றமாக கைக்கூலி என்ற விடயம் பெண்கள் சமூகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் அதேவேளை வாக்களிப்பதும் பின்னர் சர்வசாதாரணமாக அதனை முறித்து எல்லோர் முகத்திலும் கரிபூசுவதும் அதிகரித்து வருகிறது.

சீதனத்துடனோ அல்லது சீதனம் எதுவும் பெறாமலோ ஒரு பெண்ணை மணம் முடிப்பதாக வாக்களித்துவிட்டு பின்னர் சில்லறைப் பிரச்சினைகளுக்காகவும் நொண்டிச் சாட்டுகளைக் கூறி அந்த ஒப்பந்தத்தில் இருந்து வாபஸ் பெறுகின்ற இளைஞர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நன்றாக இஸ்லாத்தை அறிந்து அதனை த.'.வா செய்வதில் ஈடுபடும் சில 'தாஇ' இளைஞர்களும் இதற்கு விதிவிலக்கானவர்களாக இல்லை என்பது அதிர்ச்சி தரும் வேதனையாகும். இன்று பல கன்னிப் பெண்களின் வாழ்க்கையில் இத்தகைய நிகழ்வுகள் இடியாக இறங்கி அவர்களைப் பாதித்திருக்கின்றன.

திருமணத்திற்கு பின்பு மேற்கொள்ளப்படும் திருமண இரத்து (தலாக்) பற்றி எச்சரிக்கை செய்கின்ற இஸ்லாம் இவ்வாறான வாக்குமீறல்கள் பற்றியும் எச்சரிக்கை செய்யத் தவறவில்லை.

**"ஒப்பந்தத்தை பரிபூரணமாக நிறை வேற்றுங்கள். நிச்சயமாக ஒப்பந்தம் (அல்லாஹ்வின் சமூகத்தில் கேள்வி கேட்கப்படக்கூடியதாக இருக்கிறது"**
**(அல்குர்ஆன் 17:34)**

**"நம்பிக்கையாளர்களே! ஒப்பந்தங் களை பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்"**
**(அல்குர்ஆன் 5:1)**

ஒரு பெண்ணை மார்க்கம், அழகு, சொத்து, குடும்ப கௌரவம் ஆகியவற்றிற்காக திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் தனது வாழ்க்கைத் துணைவியை மார்க்கத்திற்காக (இஸ்லாத்திற்காக) மணந்து கொள்பவர் நிச்சயமாக அல்லாஹ்வின் அருளைப் பெற்றவராவார்.

இஸ்லாம் ஒரு ஆண் எவ்வாறு ஒரு பெண்ணை தன்னுடைய வாழ்க்கைத் துணையாக தெரிவுசெய்து கொள்ளலாம் என்று காட்டித் தருகின்றது. இது இவ்வாறு இருக்க இன்றைய இளைஞர்கள் திருமணம் என்பதை ஒரு கேளிக்கை விநோத நிகழ்ச்சியாக நினைத்துக் கொண்டு தான் நினைத்தபடி பெண் வீட்டினரிடம் சம்மதம் பேசுவதும், பின்னர் தாம் நினைத்தபடி சம்மதத்தை முறித்துக் கொள்வதுமாக பெண்களை ஏதோ ஒரு கேலிப் பொருளாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பெண்களுக்கு ஏற்படும் அவமானம், ஏமாற்றம், விரக்தி, மன அழுத்தம் என்பவற்றை இந்த ஆண்கள் உணர்வதில்லை.

''உங்கள் பெண்ணை ஒரு வருடத்துக்குப் பிறகு அல்லது இரண்டு வருடத்துக்குப் பிறகு மணம் முடித்துக் கொள்கிறேன்" என்று பெண் கேட்டுச் செல்கின்றனர். அதற்குடன்பட்ட பெண்ணின் பெற்றோரும் பெண்ணிற்கு நல்லதோர் வாழ்க்கை அமையப் போகிறது என்று எண்ணி சம்மதத்தை தெரிவிக்கவே மாப்பிள்ளை வீட்டினர் ஊர் அறிய சம்பிரதாயங்கள், விருந்துகள் மூலம் அதனை பிரபலப்படுத்தியும் விடுகின்றனர்.

அப்பெண் சந்தோஷத்தில் ஆழ்கிறாள். தனக்கு நல்லதொரு வாழ்க்கை அமையப் போகிறது என்ற மனப்பூரிப்பில் பல கற்பனைகளையும் வளர்த்துக் கொள்கிறாள். காலக்கதியில் சம்மதம் பேசப்பட்ட பெண்ணினதோ அல்லது பெண்ணின் குடும்பத்தினதோ ஏதாவது ஒரு சிறிய தவறையேனும் கண்டு மணமகனின் மனம் மாறிவிடுகிறது. பின்னர் சம்மதம் பேசப்பட்ட பெண்ணின் பெற்றோரிடம் ''உங்கள் மகளுக்கு வேறொருவரை மணம் முடித்து வையுங்கள்" என்று முகத்திலடித்தாற்போல் கூறி ஒப்பந்தத்தை முறித்து விடுகின்றனர். பாவம்! அவமானம் தாங்க முடியாமல் அவள் கதறியழுகிறாள். பெண்ணைப் பெற்றவர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். தங்களுடைய மகளுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அவாவில் வேறு மணமகன் தேடும் பணியில் இறங்குகின்றனர். ஆனால் அந்தப் பெண் ''எனக்கு வேறு திருமணம் தேவையில்லை" என்று அடம்பிடிக்கிறாள். அவள் விரும்பியோ விரும்பாமலோ பெற்றோர்கள் வேறு திருமணம் பேசுகின்றனர். இனி பேசப்படும் மணமகன் வீட்டினர் அப்பெண்ணின் முன்னைய திருமணம் முறிந்தது பற்றிக் கேள்விப்பட்டு அதற்கு காரணம் அறிய ஆய்வு நடத்துகின்றனர். இறுதியல் அந்தப் பெண்ணை சமூகம் சந்தேகக் கண்ணோடும், இரண்டாம் தரமாகவும் பார்க்கத் தொடங்குகிறது. அப்பெண் பெருமூச்சு விட்டுவிட்டே வருடக்கணக்கில் முடங்கிக் கிடக்கிறாள். பெண்ணைப் பெற்றவர்களின் பாடு பெரும்பாடு.

சகோதரர்களே சிந்தியுங்கள்! சமூகத்தைக் கட்டிக்காக்க வேண்டிய இளைஞர் சமூகம் பெண்களின் வாழ்க்கைக்கு குழிபறிப்பவர்களாக ஆகிவிடக் காரணம் அவர்களின் பலவீனமே. இது சாதாரண விடயமல்ல. இவ்வாறு திருமண ஒப்பந்தங்களை முறிக்கும் சகோதரர்களுக்கு நபி (ﷺ) அவர்களுடைய பின்வரும் நபிமொழியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதனை ஹஸ்ரத் அபூ ஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்:



"நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று. (ஒன்று,) அவன் பேசினால் பொய்யையே பேசுவான். (இரண்டு,) அவன் வாக்குறுதியளித்தால் மாறு செய்வான். (மூன்று,) நம்பினால் மோசடி செய்வான்" (புகாரி, முஸ்லிம்)

முஸ்லிமின் அறிவிப்பில், "அவன் நோன்பு நோற்று, தொழுது, தன்னை முஸ்லிம் என எண்ணிக் கொண்டாலும் சரியே (அவன் முனாபிக்தான்)" என்ற வாசகமும் மேற்கண்ட ஹதீஸுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

வாக்குமீறல் என்பது ஒரு முனாபிக்குடைய பண்பாக இருக்கிறது. அது முஸ்லிமின் பண்பாக இருக்கக் கூடாது. எனவே முனாபிக்குகளின் பட்டியலில் நம்மையும் ஆக்கிக் கொள்ளாமல் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றி சமூகத்தில் நன்மக்களாக திகழ இறைவன் அருள்புரியட்டும்.

சீதனத்தை ஒழிப்பதற்காக கூக்குரலிடும் தாஇகள் இவ்விடயத்திலும் தங்கள் கவனத்தை செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். எமது சமூகத்தின் இளைஞர்களை பெண்களின் துயர் துடைக்கும் தியாகிகளாக ஆக்கியருள வல்லவன் துணைபுரியட்டும்.


**எதிர்பாருங்கள்!**

**எங்கள் தேசம்**

**ஒகஸ்ட் - செப்டெம்பர் இதழ்**

ஒகஸ்ட் 15ம் திகதி

**உங்கள் அல்ஹஸனாத் முகவர்களிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.**


# பெண்கள் உலகம்

## அஸர்பைஜான் பெண்கள் கடவுச்சீட்டு பெறுவதை நிறுத்தப் போகிறார்கள்.

பெண்கள் ஹிஜாப் அணிந்து எடுக்கப்படும் போட்டோக்களைக் கொண்ட கடவுச்சீட்டுகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்ற அஸர்பைஜான் விஸா திணைக்களத்தின் முடிவினால் முஸ்லிம் பெண்கள் தமது கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள மறுப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹிஜாப் அணிந்து எடுக்கப்பட்ட போட்டோக்களைக் கொண்ட கடவுச் சீட்டுகளை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் முடிவினை மாற்றிக்கொள்ளுமாறு விஸா திணைக்களத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை திணைக்களம் நிராகரித்ததைத் தொடர்ந்து அஸர்பைஜான் பெண்கள் கடவுச்சீட்டு பெறுவதை நிறுத்திவிடுவார்கள் என தாம் நம்புவதாக சமயக் கடமைகளின் சுதந்திரத் தைப் பாதுகாக்கும் அமையம் தெரிவித்துள்ளது. அஸர்பைஜான் விஸா திணைக்களத்தின் முடிவு தொடர்பாக தமது முறைப்பாடுகளைத் தெரிவித்த பல பெண்கள், பெண்கள் ஹிஜாப் அணியாமல் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற விஸா திணைக்களத்தின் முடிவு தமது மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும், பெண்களின் சுயகௌரவத்துக்கு மாசு கற்பிப்பதாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். விஸா திணைக்களத்தின் தீர்மானம் அஸர்பைஜான் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு மாற்றமானது மட்டுமன்றி, அஸர்பைஜான் அரசு மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கும் மாற்றமானது என சமயக் கடமைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அமையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெண்ணுக்கு குழந்தையை எடுத்துச்செல்ல அனுமதி மறுப்பு

Saos Dakota மாநிலத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமைக்காக, அவளது குழந்தையை வளர்ப்பதற்கு அமெரிக்க நீதிமன்றமொன்று தடைவிதித்துள்ளது. எகிப்தியர் ஒருவரைத் திருமணம் செய்துள்ள இவர் தனது குழந்தையுடன் எகிப்துக்கு செல்ல கடவுச்சீட்டைப் பெற்றுத்தருமாறு Saos Dakota மாநில நீதிமன்றத்தில் மனுவொன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இந்நிலையில், இப்பெண்ணின் தந்தை தனது மகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, இஸ்லாமிய உடைகளை அணிந்து வருவதற்கு எதிராக Saos Dakota மாநில நீதிமன்றமொன்றில் வழக்குப்பதிவு செய்ததைத் தொடர்ந்து, நீதிமன்றம் குழந்தையை அவளுடன் எடுத்துச்செல்லக் கூடாது என தடைவிதித்துள்ளதுடன், குழந்தையை வளர்க்கும் பொறுப்பை குழந்தையின் தாயின் பெற்றோரிடம் தற்காலிகமாக கொடுப்பதற்கு முடிவு செய்துள்ளது. தாயிடமிருந்து பிள்ளையைப் பிரிக்கும் நீதிமன்றத்தின் நடவடிக்கை தொடர்பாக அமெரிக்க முஸ்லிம்கள் மற்றும் அரபுக்களின் உரிமைகளுக்காக செயல்படும் Council for American Islamic Relations (CAIR) நிறுவனம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது. இஸ்லாத்துக்கு எதிராக பழிவாங்கும் எண்ணத்துடன் நீதிமன்றம் செயல்படுவதையிட்டு CAIR தனது விசனத்தைத் தெரிவித்துள்ளதுடன் குழந்தையின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு குழந்தையை தாயிடம் ஒப்படைக்குமாறும் அது நீதிமன்றத்தைக் கேட்டுள்ளது.



# வானொலியும் முஸ்லிம் பெண்களும்

**இஸ்ஸதுல் கரீமா அனாஸ் – நேகம்பஹ**

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு வானொலி, தொலைக்காட்சி என்பனவும் துரித வளர்ச்சியடைந்துள்ளன. குறிப்பாக வானொலியில் போட்டி போட்டுக் கொண்டு புதிது புதிதாக அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்பெல்லாம் முஸ்லிம் சேவை கேட்கவென வானொலியைச் சூழ குடும்பத்துடன் அமரும் நிலை அநேக இடங்களில் காணப்பட்டது. அப்போது இரவில் மட்டுமே முஸ்லிம் சேவை ஒலிபரப்பப்பட்டது. பிறகு காலையிலும் இரவிலுமாக இருந்த முஸ்லிம் நிகழ்ச்சிக்கு இப்போது மீண்டும் நேரம் குறைக்கப்பட்டு விட்டது. இவற்றுள் நல்ல பல அம்சங்கள் ஒலிபரப்பப்பட்டு முஸ்லிம்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்று வருகின்ற அதே வேளை எமது இஸ்லாமிய சகோதரிகள் F.M. களின் போதையில் மூழ்கிக் கொண்டிருப்பது கவலையைத் தருகிறது.

இப்போதெல்லாம் வானொலி நிலையங்கள் அதிகமாக தொலைபேசியினூடு தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சிகளையே ஒலிபரப்பிக் கொண்டிருக்கின்றன. எமது பெண்களின் பொன்னான நேரத்தை வீணாக்கவென்றே இது தோன்றியுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது. நல்ல முஸ்லிம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்போது எமது முஸ்லிம் மாதர்கள் பாடல்களை விரும்பிக் கேட்டு தொலைபேசியை சுழற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இளம் பெண்கள் கட்டுப்பாடு, ஒழுக்கம், அடக்கம் ஊட்டப்பட்டு இஸ்லாமிய சூழலில் வளர்க்கப்பட்டால் இந்நிலை ஏற்படாது. இஸ்லாமிய நிகழ்ச்சிகளைக் கண்குளிரப் பார்ப்பதற்கும், காது குளிரக் கேட்பதற்கும் ஏற்ற மனோநிலையை பெற்றுக் கொடுப்பது தாய் தந்தையரது கடமை. மாறாக தன் இஷ்டப்படி அந்நிய கலாசாரத்தில் மூழ்கி இஸ்லாத்தை மறந்து செயற்படுவதை பெற்றோர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

தொலைபேசி நிகழ்ச்சிகளில் ஒரு பாடலைக் கேட்பதற்கு எவ்வளவோ நேரம் தொலைபேசியை திருகித்திருகி வாயிற்கருகேயும் காதிற்கருகேயும் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தொலைபேசிக் கட்டணமும், நேரமும் வீணாகிறது.

சில சமயங்களில் அறிவிப்பாளர் குறித்த நேயரிடம் அநாவசியமான கேள்விகளைக் கேட்டு, கேலிப் பேச்சுக்கு ஆளாகி அவமானப்பட வேண்டியிருக்கிறது. சிலவேளை அதிகம் பேசவிடாமல் அவசரமாக 'கட்' பண்ணி விடுவார்கள். இவ்வேளையில் குறித்த நேயர் அவமதிப்புக்குள்ளாகின்றார். இந்த அவலத்தை அந்த நேயர் மட்டுமன்றி அவரது குடும்பம் உட்பட முழு நாடும் கேட்டு சிரிக்கவும் அனுதாபப்படவும் செய்கிறது.

அறிவிப்பாளர், ''யாருக்காக பாடல் கேட்க விரும்புகிறீர்கள்?'' என்றால், ''எனது பெற்றோருக்காகவும், இன்ன மச்சானுக்காக, இந்த மதினிக்காக.... '' என்று எங்கோ இருக்கின்ற, (சிலவேளை அவர் இதனை விரும்பாமலும் இருக்கக் கூடும்) இஸ்லாம் ஏற்படுத்தி வைத்துள்ள உறவுகளையும் சந்திக்கு இழுக்கிறார்கள். இது என்ன அநியாயம்!

சில பெற்றோர் தனது மூன்று வயது முதல் பாடசாலையில் கல்வி கற்கும் எட்டு, ஒன்பது, பத்தாம் ஆண்டு பிள்ளைகளையும் டெலிபோன் எடுத்து பாடல் கேட்கத் தூண்டுகிறார்கள். மன தைரியத்தை வளர்த்து, கூச்சசுபாவத்தை இல்லாமற் செய்கிறார்களாம். வெட்கக்கேடு!

சகோதரிகளே! இந்நிலை மாறவேண்டும். வானொலியிலோ தொலைக்காட்சியிலோ ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் பெற்றோரும் குடும்பமும் இருந்து ஒரேவேளையில் பார்க்கக் கூடியவை அல்ல. மாறாக, தீய எண்ணங்களை மனதில் உருவாக்கி, உள் உணர்ச்சிகளைத் தூண்டி நடத்தையில் தீய மாற்றங்களை உண்டுபண்ணக் கூடியவையாகவே அவை அமைந்துள்ளன.

இஸ்லாம் இசையை வெறுக்கிறது. அது அனுமதிக்காத ஒன்றில் ஈடுபடுவது பாவமான காரியமாகும். பாடல் கேட்பதற்காக ஒதுக்கும் நேரத்தை பெற்றோருக்காக துஆ செய்வதிலும், முஸ்லிம் நிகழ்ச்சிகளைக் கேட்பதிலும், திக்ர், ஸலவாத் செய்வதிலும் ஈடுபடலாம்.

பிள்ளைகளை ஒழுக்கமுடையவர்களாகவும் இம்மை மறுமைக்கு பொருந்தக்கூடியவர்களாகவும் வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஒரு பிள்ளையை அவனது குடும்பச் சூழலே நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றும். இதில் பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானது. பிள்ளைகள் வழிகேட்டில் செல்ல பெற்றோர்கள் உடந்தையாக இருக்கக் கூடாது. பிள்ளைகள் தங்கள் மனோஇச்சைப்படி வாழ இடமளிக்கக் கூடாது.

**''ஒரு பெற்றோர் தனது பிள்ளைக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் தவிர வேறு சிறந்த எதனையும் கொடுக்க முடியாது''** என நபியவர்கள் கூறியுள்ளார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

மனிதன் பலவீனமானவன். பாவம் செய்யக் கூடியவன். ஆனால் நமது இளம் மங்கையர் சமுதாயத்தை இளமையிலேயே திருத்தி நல்ல ஒழுக்கமுள்ள சமூகமாக மாற்ற வேண்டும். அல்குர்ஆன் கூறுகிறது.

**''திண்ணமாக மனித மனம் தீயவற்றை அதிகமாக தூண்டிவிடக் கூடியதாகும்'' (12:53)**

எனவே, மனித மனமானது தீயவற்றை எண்ணத்தூண்டும், செய்யத்தூண்டும். நாம் மனதிற்கு அடிபணியக்கூடாது. மனதை எமக்கு அடிபணியும்படி வைத்துக் கொள்ள வேண்டும். மனம்போன போக்கில் போகும் போதுதான் பாவமான காரியங்களில் ஈடுபட நேருகிறது. நாமே நம்மை பாவமான காரியங்களில் ஈடுபடுத்தக்கூடாது. அடக்கம், ஒழுக்கம், பயபக்தி, இறையச்சம் (தக்வா) உடையவர்களாக வாழப் பழக வேண்டும்.

பெற்றோர் இஸ்லாமிய சூழலை குடும்பத்தில் ஏற்படுத்துவதற்கு பொறுப்பானவர்கள். பிள்ளைகளை இஸ்லாமிய முறைப்படி வளர்ப்பதற்கு அதற்கேற்ற சூழல் இன்றியமையாதது. இந்த நல்ல சூழலை மாசுபடுத்த வானொலியும், தொலைக்காட்சியும் வீட்டுக்குள் வந்து விட்டன.

இவ்வுலகம் வீண் விளையாட்டும் வேடிக்கையும் உடையது. மறுமையே நிலையானது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். குர்ஆன், ஹதீஸ், படிப்பினை தரக்கூடிய நூல்கள் நல்ல சிந்தனைகள் என்பவற்றை கற்பதில் ஈடுபட்டு குறுகிய இவ்வுலக வாழ்க்கையை மறுமைக்காக தயார்படுத்தும் இடமாக மாற்றி செயற்படுவோமாக.

# இலக்கியவனம் அஸ்

## வசந்தம் பிறக்கட்டும்

மனிதா!
பயங்கரவாதமெனும் பேரில்
இன்று இடிக்கப்பட
காத்திருப்பது மனிதர்களல்ல
ஆயிரம் ஜிஹாதுகளின்
மத்தியில் வளந்த தீனின் வீடு...

பகலவன் முதல் பாரில் அத்தனையும்
கண்ணீர் வடித்தபோதும்
கொடுமையை இரசித்து நிற்கும்
மரம் போன்றவனே!
நீ வல்லவன்தான் பூமியில்....
ஆனால் ஏகனின் முன்னில்...?

பாதிநேரம் கழுத்தறுக்கும்
மின்சாரம் போல்ல - ஈமானில்
இணைந்த எமது ஒற்றுமைக் கீதம்
இடையில் தடைப்பட்டுவிட

கலங்கரை விளக்கமாய்
ஒளிகாட்டுவது முஃமினென
அறியத்தான் இந்த இரத்த
துள நீராட்டலோ....

பறிகொடுத்த ஜீவன்களை
பெற முடியாது நெருப்பை தினமும்
சுமந்து வாழும் பெற்றோரின்
நிலையை நீ அறிய
உனக்கு இதயமென்ற ஒன்றை,
உறவென்ற பாலத்தை,
இறைவன் தரவில்லையோ...

உலகம் உன்னைப் பேசவேண்டும்
என்று ஆசைதான் - ஆனால்
இதை இப்படியா அடைவது!
ஜென்மமே!

சுவனம் சென்ற
ஜீவன்களுக்கல்லாது விடினும்
உயிர்வாழும் ஜீவன்களுக்காகவேனும்
எங்கள் உரிமைப் போராட்டத்தை
எழுப்புவோம்....

எம் உள்ளக் குமுறல்களின் முன்னால்
அவர்களது ஆயுத முனைகள்
தூசென்பதை
உலகிற்கும் எடுத்துரைத்து
வசந்தம் பெறுவோமே இவ்வுலகில்
ஒரு முறை தீனுக்காக

கவிதா சுந்தரலிங்கம்
பதின்கஸ்கொடுவ

## சீ...தனவான்கள்..!

ஏனப்பா உன் ஆண்மையை
விலை பேசுகிறாய்!
ஏற்றமென்றே கொடிய
சீ...தனம் கேட்கிறாய்!
சொந்த காலில் நிற்க வீரம்
இல்லையா...?
சொல்லு உனக்கு
மானம், வெட்கம் இல்லையா..?

பாசாங்கு பண்ணி
பச்சை நோட்டு கேட்கிறாயே..!
பாவம் பாவையர்
பணத்துக்கு எங்கு போவர்...?
பாதை இறங்கி காசுதேடி செல்லுமிடத்து...
பாழாய்ப் போகாதா
பூக்கும் பூவையர் வாழ்வு...!

அந்நியர் கலாசாரத்தில்
உனக்கேன் மோகம்...!
அந்தோ.. அவதியுறும் கன்னியர்
கண்களில் சோகம்...!
அறியாதவன் போல் கைக்கூலி
கேட்பது மோசம்...!
அதன் பின் முஸ்லிமாய்
நடிப்பதெல்லாம் வெறும் வேஷம்...!

மஹரென்று ஆயிரத்தொன்று
எண்ணி வைத்தாய்...!
மறுகரத்தால்
பல இலட்சங்கள் வாங்குகிறாய்...!
மறந்து விட்டாய் - மாநபியின்
மகத்தான வழிகாட்டல்...!
மனந்தொட்டுக் கேளு
நீயும் மனிதனா...?

உள்ளத்தை மஹராக
அள்ளிக் கொடுங்கள் - உத்தம
நபிகளாரின் உன்னத வாழ்க்கையது...!
உள்ளதை சீ...தனமாக
அள்ளித் தாருங்கள்..
உண்டி வளர்க்கும்
சோம்பேறிகளின் தேவையிது..!

பெண்ணுரிமை பற்றிப்
பேசியது இஸ்லாம்...!
பெண்ணிடம் கைக்கூலி வேண்டிப்
பேசுகிறாய் நீ...!
பெற்றுக் கொடுத்து....
துணையாய் இருக்க வந்தவளிடம்...!
பெற்றுக் கொள்ள
கைநீட்டி நிற்பது நியாயமா...?

ரிஸ்வான் முஹம்மத்- மஹவத்த

## சிதைவுகளே...!

அன்று
பலஸ்தீன் வெற்றி கொள்ளப்பட்டதும்
பாரசீகமே
பைத்தியம் பிடித்தாற் போலானது
அரபுலகம்
விழாக் கோலம் பூண்டது

இன்று
சிதைந்து போகும் பலஸ்தீனை
வேடிக்கை பார்க்குது
மேற்குலகு
விழித்து நிற்கிறது அரபுலகு

ஒன்றுமறியா முஃமின்களின்
உயிர்களோடு
மண்ணான சிதைவுகளே
உங்கள் வேதனைக் குரல்கள்
இடியோசையாய் விழுந்து
முஸ்லிம் உலகம் விழிக்காதா?

பிஞ்சுக் கரங்களில்
ஆயுதம் தூக்கி
பால்மணத்துடன்
பூமிக்குள் சென்ற
சிறிசுகளின் சிதைவுகளே...!
கலிமாவுடன்,
'பலஸ்தீன் எங்கள் தேசம்'
கூறிக் கொண்டே...
வீழ்ந்து பலியான - உங்கள்
சோகக்கதை கூறுங்கள்

உங்கள் உயிர்குடித்த
ரவை செய்ய
காசு கொடுக்கும்
முஸ்லிம்களுக்குக் கேட்கட்டும்

மௌத்து மறந்து
மறுமை மறந்து
உடன்பிறப்பு மறந்து
முஸ்லிம் சமூகம்
ஆழ்ந்த உறக்கத்தில்....

சிதைவுகள் பேசி
சிங்கங்கள் விழித்தெழுந்த கதை
வரலாற்றில் பதியப்பட்டும்

சிதைவுகளே...!
உங்கள் சோகத்தை
உரத்துச் சொல்லுங்கள்

- ராபீல் -

## கவிதை நெய்தல் 28- முடிவுகள்

### முதலிடம் பெற்ற கவிதை




**- கண்ணீர் மொழி -**

**எங்கள் சுமைகளை**
**வரலாறு இறக்கும்**
**எங்கள் நோவுகளில்**
**பலஸ்தீன் மருந்தாகும்**
**எங்கள் திருடப்பட்ட கோவணத்தை**
**திரும்பப் பெறும் நாள் வரும்**
**உருள்கின்ற உன் கண்ணீரிலும்- இவை**
**திரண்டு கிடக்கின்றன இளையவனே!**

*எம். ரிஹானா, சப்ரகமுவ வளாகம்*

## கவிதை நெய்தல் 29



**இறுதித் திகதி 22.08.2002**

**- போராளி -**

பள்ளிப் பருவத்தை
பண்ணையில் கழிக்கும்
நானும் ஒரு போராளியே!

யெஹிதா சாஹிப், சிலாபம்

**- நாளைய விடியலுக்காய் -**

சுமைகள் என்றும்
சுகமானவை அல்ல
என்றாலும் மகனே!
கூனிப் போகாது
தலைநிமிர்ந்து
சுமந்து செல்
இந்த உம்மத்தின்
நாளைய விடியலுக்காய்!

ஷாறா – தர்கா நகர்

**- கேள்விக்குறி -**

சமாதானமும் கேள்விக்குறி
பாதையும் கேள்விக்குறி
எதிகாலமும்....?

பஸ்மியா, அக்கரைப்பற்று

**- யுனிசெப் நோக்கி -**

உறவுகளைப் பிரிந்து
முதுகில் மூட்டையுடன்
போவதெங்கே?
அகதி முகாமுக்கா?
யுனிசெப் நோக்கியா?

ஜே.ஏ.எம் நளீப், மாகோல

**- சுமை -**

சுமை தூக்கி
பணியுது தோள்
நாளை வாளேந்தி
நிமிர்ந்திடவே!

ரிஸ்னா பரகத், மாவுனல்லை

**- ஜாக்கிரதை தம்பி! -**

அமெரிக்கனின் கண்ணில்
மாட்டிக் கொள்ளாதே!
ஒஸாமாவுக்கு
ஆயுதம் விநியோகித்ததாக
நீயும் கைதாகலாம்!

கிரிங்கதெனிய ரூமி ஜெலீல்

**- கட்டளை...? -**

ஆப்கான் சிறுவனே!
உன் வீட்டின் சிதைவுகளை
நீயே சுமந்து செல்கிறாயோ?
அமெரிக்கனின்
கட்டளையா இது?

சிம்லா ஹஸன் – கஹடோவிட

**- சுமை -**

உங்கள் உள்ளங்களென்ன
பாறாங்கற்களா?
எமது வாழ்க்கைச் சுமை
உங்களுக்கு
சுமையாக இல்லையா?

ரிஸ்வானா பானு – பதுளை

**- தயாராகுவோமா? -**

எல்லோரும் எதிர்பார்க்கும்
'பட்டினி– 2005' ஐ நினைத்து
இப்போதே சேமிக்கிறாயா?

நுஸைரா, நாம்புளுவ

**- இலட்சியம் -**

பாலகனே!
சுமையோடு தனிமையில்
கயவனைத் தேடி பாலையில்
சுழன்றிடும் கண்களில்
பளிச்சிடும் உன் இலட்சியம்!

மும்தாஜ், தெல்தொட்டை

**- இதுவே போதும் -**

துருக்கியிலும்
ஸ்பெயினிலுமிருந்து
சில மண்மூடைகள்
சேமிக்கிறேன்...
நாளைய நம் சந்ததிக்கு
இம்மண்ணிலிருந்தாவது
இப்பூமியில் வாழ்ந்த –
இஸ்லாத்தைக் காட்ட!

நிஸாம்டீன், மாதம்பை

**- எரித்தல் -**

எரிக்கின்றான் யூதன்
விறகின்றி
எரிகிறது நெஞ்சம்
புகையின்றி
தூங்குகிறான் யூதன்
சுகக் கனவுகளுடன்
எரித்திடு சிறுவனே
யூதக் கனவுகளை

நிஸாம்தீன், கனேவல்பொல

**-விதியின் பாதையில்-**

தந்தையின் முதுகில்
யானைச் சவாரி...
தாயின் முதுகில்
உப்பு மூட்டை...
கானல் தவிப்புடன்
வறுமைச் சுமை
தன் முதுகில்

ரிஹானா ஜுனைட், பேருவெல

**- பரிசு-**

உன் நாட்டையும்
உரிமையையும் இழந்ததற்கு
யுனிசெப் பெற்றுத் தந்த
பரிசா இது?

ரிழ்வானா ராஸிக், புத்தளம்

**- வலிமை -**

என்ன பார்க்கிறாய்?
தோள்கொடுக்க
தோழன் இல்லையென்றா?
குழிபறிக்கும் தோழனை விட
வலிமையானது – உன்
தோள்களல்லவா?

மஹ்தியா அமீன், புத்தளம்

**- கடமை யாருக்கு? -**

பலஸ்தீனப் பாலகனே!
தோள்மீது கல்சுமந்து
தள்ளாடிச் செல்வதேன்?
ஓ உன்னிலத்தைக் காப்பது
உன் மீது கடமையன்றோ!

ரிஸ்வானா, காத்தான்குடி

**- தீண்டாது -**

விறகைச் சேமி
பசி உன்னைத் தீண்டாது
நன்மையைச் சேமி
நரகம் உன்னைத் தீண்டாது

ரிஷாத் – மாதம்பை

**- திணிப்பு -**

தூக்காதே தூக்காதே
விறகைக் கூட தூக்காதே
பின்னால் தூரதர்ஷன்
நீ தூக்கியது
துப்பாக்கி என்று விடும்

றுஷ்தி ஹஸன், கொடுவகெதர

**தயவுசெய்து 'கவிதை நெய்தல்' களை தபாலட்டையில் அனுப்பி வையுங்கள்.**



# குழந்தைப் பாக்கியம்

டொக்டர் M.L.M. றயீஸ் M.B.B.S. (SL), D.C.H (Colombo)
லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு

நோயற்ற வாழ்க்கை அல்லாஹ் நமக்களித்த பெரிய நிஃமத் என்பதை நம்மில் பலர் நோய் வந்தபின்புதான் உணர்கின்றனர். இந்த உலகில் மனித வாழ்க்கை சீராக அமைய வேண்டும் என்பதற்காக அல்லாஹ் எத்தனையோ அற்புதமான ஏற்பாடுகளை அமைத்திருக்கிறான். இந்த ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே அற்புதமாய் இருக்கும் அதேவேளை அவை அனைத்தும் சேர்ந்து சமநிலையில் இயங்கும் அமைப்பும் அற்புதமானதே.

**"எல்லா ஆத்மாக்களும் மரணத்தை அனுபவித்தே தீரும்"** என்று சொல்லும் அல்லாஹ், தொடர்ந்தும் குழந்தைகளைப் பிறக்கவைப்பதன் மூலம் மனித இனம் அழிந்துவிடாமல் பாதுகாப்பதும் ஓர் அற்புதமே!

திருமணம் செய்துகொள்ளும் 90% தம்பதியினருக்கு குழந்தைகளை அல்லாஹ் கொடுக்கிறான். சிலருக்கு அதிகமாக ஆண் குழந்தைகளையும், சிலருக்கு அதிகமான பெண் குழந்தைகளையும் கொடுக்கும் அல்லாஹ், இன்னும் சிலருக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாமலே செய்துவிடுகிறான். இவ்வாறு மனிதர்களுக்கு ஏன் வித்தியாசமாக கொடுக்கிறான், ஏன் சிலருக்கு கொடுக்கவில்லை என்பதை அல்லாஹ் மாத்திரமே நன்கு அறிந்தவனாக இருக்கிறான்.

**"...அவன் விரும்பியதைச் சிருஷ்டிக்கிறான். அவன் விரும்பியவர்களுக்கு பெண் சந்ததியைக் கொடுக்கிறான். விரும்பியவர்களுக்கு ஆண் சந்ததியைக் கொடுக்கிறான். அல்லது ஆணையும், பெண்ணையும் கலந்தே கொடுக்கிறான். அவன் விரும்பியவர்களை மலடாகவும் ஆக்கி விடுகிறான்..."**

**(ஸூரதுஷ் ஷூரா :49-50)**

இவ்வாறு குழந்தைப் பாக்கியத்தை ஏன் சில தம்பதிகள் பெறாமல் இருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. எப்படியோ குர்ஆன் தெளிவாக சொல்லுவதுபோல் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் ஏறக்குறைய 10% மானோருக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாதிருப்பதை நாம் சமுகத்தில் காண்கிறோம்.

அல்லாஹ்விடம் இருந்து பெரும் பாக்கியங்களைப் பெற்ற மனிதர்களெல்லாம் அதன் பெறுமதியை அறிவதில்லை. இவற்றில் ஒன்றுதான் குழந்தைப் பாக்கியமும். குழந்தைகளுடன் வாழும் 90 சதவீதமான தம்பதியினர், தாம் பெற்ற குழந்தைகள் அல்லாஹ் தமக்களித்த பெரும் பாக்கியம் என்பதை உணர்வதில்லை. இலவசமாகக் கிடைத்த பொருளின் பெறுமதியை உணரத் தவறுவது மனிதனின் இயல்பு.

அண்மையில் ஒரு தம்பதியைச் சந்திக்க நேர்ந்தது. திருமணம் செய்து நான்கு வருடங்களாகியும் இன்னும் குழந்தை பெறாமல் இருப்பது அவர்களை வேதனையின் விளிம்பிற்கே கொண்டு வந்து வைத்திருப்பதாக சொன்னார் அந்தக் கணவர். கையில் ஒரு 'பைலுடன்' (File) அமர்ந்திருந்த அவர்களிடம் சில அடிப்படையான தகவல்களைப் பெற்றுக் கொண்டபின் அவர்கள் கொண்டு வந்த 'பைலை' புரட்ட ஆரம்பித்தேன். செய்யக்கூடிய, செய்யவேண்டிய எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட்டு அவற்றின் 'றிப்போட்' இருந்தது. கணவரிலும் மனைவியிலும் செய்யப்பட்ட எல்லா பரிசோனைகளும் சரியாகத்தான் இருந்தன. பல வைத்தியர்களை சந்தித்ததற்கான அடையாளங்களும், பலமுறை பரிசோதனை செய்ததற்கான தடயங்களும் அந்த 'பைலில்' காணக் கிடைத்தது. இவ்வாறு கடந்த நான்கு வருடங்களாக இடைவிடாத முயற்சி, பலவிதமான பரிசோதனைகள், பல இலட்சங்கள் செலவு... இவ்வளவு செய்தும் இன்னும் அவர்களின் மனக்கவலைக்கு தீர்வு கிடைக்கவில்லை. *'உலகத்தில் எனக்கு எதுவும் தேவையில்லை. உலகத்தில் ஒரு குழந்தை இருந்தால் போதும்'* என்பதையே அந்தக் கணவரின் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வந்த வார்த்தைகள் எனக்கு உணர்த்தின.

பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறும் முயற்சியில் ஈடுபட்டதாக அவர் சொன்னார். ஒருமுறை முயற்சிப்பதற்கு 4 இலட்சம் ரூபாய்கள் செலவாகும் இந்த முறையிலும்கூட பல தடவைகள் முயற்சித்ததாக அவர் கொன்னார். *'எனக்குப் பணம் பிரச்சினை இல்லை. நான் சேர்த்திருக்கும் பல மில்லியன் பெறுமதியான சொத்துக்களை எல்லாம் விற்றுக்கூட செலவுசெய்ய தயாராக இருக்கிறேன். எப்படியாவது ஒரு குழந்தையை பெற்றுக்கொள்ள வேண்டும்'* என்று அந்தக் கணவர் என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார்.

குழந்தைப் பாக்கியம் பெறாத தம்பதியினரின் மனோநிலை இவ்வாறுதான் இருக்கிறது. இவ்வாறான நிலை ஏன் ஏற்படுகிறது? இதற்கு என்ன தீர்வு என்பதற்கு தெளிவான பதிலை மருத்துவர்களால் வழங்க முடியாது என்பதுதான் யதார்த்தம். இருந்தபோதும்கூட மருத்துவ உலகம் இது சம்பந்தமாக அறிந்து வைத்துள்ள விடயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ளும் அதேவேளை, ஒரு முஃமின் என்ற வகையில் இவ்வாறான பிரச்சினைக்கு ஒரு இஸ்லாமிய சகோதரர் எவ்வாறு தீர்வு கண்டார் என்ற அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலில் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருப்பதற்கு கணவனில் இருக்கக்கூடிய சில குறைகள் காரணமாய் அமைய முடியும். இவற்றில் மிக முக்கியமானது ஆணிலிருந்து வெளியேறும் திரவத்தில் விந்துக்கலங்கள் குறைவாக அல்லது முற்றாக இல்லாமல் இருப்பதாகும். இவ்வாறு விந்துக்கலங்கள் திரவத்தில் குறைவாக இருப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று கூகைக்கட்டு (MUMPS) என்ற சிறுவயதில் ஏற்படும் கன்னம் வீங்குகின்ற நோயாகும். இவ்வாறு கூகைக்கட்டு ஏற்பட்ட ஒருவருக்கு விஷேடமாக பருவ வயதை அடைந்த பின் இந்தக் கூகைக்கட்டு நோய் ஏற்பட்டு கன்னம் வீங்கினால் அதன் மூலம் சிறுவனின் விதைகள் (TESTIS) பாதிக்கப்படக்கூடும். இதனால் விதையினால் விந்துக்கலங்களை உருவாக்க முடியாமல் போகலாம். கூகைக்கட்டு ஏற்பட்ட அனைவருக்கும் இது ஏற்படுவதில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே கூகைக்கட்டு ஏற்படும் போது விதை பாதிப்படைகிறது.

**குறிப்பு :** தற்போது கூகைக்கட்டு நோயைத் தவிர்த்துக்கொள்ள MMR என்ற (Mumps Measles Rubilla) தடுப்பூசி பாவனையில் உள்ளது. குழந்தைகளுக்கு மூன்று வயதானதும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதன் மூலம் இந்த நோய் வராமல் தடுக்க முடியும். இந்த தடுப்பூசி அரசாங்க வைத்தியசாலையில் கொடுக்கப்படுவதில்லை. தனியார் பாமஸிகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் விதையிலிருந்து விந்துக்கலங்களை வெளியே கொண்டு வரும் VAS என்ற குழாயில் அடைப்புகள் இருந்தாலும்

விந்துக்கலங்களின் எண்ணிக்கை குறையும். இந்த நிலையும் குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருப்பதற்கு காரணமாக அமையும். ஆணிலிருந்து வெளியேறும் திரவத்தை பரிசோதனை செய்து பார்ப்பதன் மூலம் விந்துக்கலங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளனவா என்பதைப் பார்த்துக் கொள்ள முடியும். இப்பரிசோதனை பல இடங்களிலும் செய்யக்கூடிய வசதி வாய்ப்புகள் உள்ளன.

மேலும் ஆணுறுப்பில் துவாரம் உரிய இடத்தில் இல்லாமல் மேலாகி (Epispidiasis) அல்லது கீழாகி (Hypospidiasis) இருப்பதும் சிலவேளைகளில் ஆணுறுப்பு வளைந்திருப்பதும் (Chordae) கருக்கட்டலில் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும்.

பெண்களைப் பொறுத்தவரை சூலகைக் கட்டு நோய் ஏற்கனவே சொன்னது போல பெண்ணிலும் சூலகத்தை பாதித்து முட்டை உருவாக்கத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும். மேலும் பலோப்பியன் குழாயில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் சில நோய்கள் காரணமாகவும் ஒரு பெண் மலட்டுத்தன்மை உள்ளவராக இருக்க முடியும்.

சில சந்தர்ப்பங்களில் ஆணிலும் பெண்ணிலும் எந்தக் குறையும் இருக்காது. ஆனால் ஆணின் விந்துக்கலம் குறிப்பிட்ட பெண்ணுக்கு அலர்ஜியாக இருக்கக்கூடும். இப்படிப்பல காரணங்களால் தம்பதிகளுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருக்கும்.

அநேகமான சந்தர்ப்பங்களில் ஆணிலும் பெண்ணிலும் எந்தவிதமான பிரச்சினைகளும் இருக்காது. ஆனால் அவர்கள் குழந்தைப் பாக்கியம் பெறாதவர்களாக இருப்பார்கள். இப்படியான தம்பதியினரே அதிகமாக இருப்பர்.

இந்நிலை ஏன் ஏற்படுகிறது? இந்நிலை பற்றி பெண்ணோயியல் வைத்திய நிபுணரிடம் பேசியபோது இவ்வாறு சொன்னார்: *''கருக்கட்டல் எவ்வாறு நடைபெறுகிறது என்பது பற்றி நாம் அறிந்த விடயங்களை விடவும் அறியாத விடயங்கள் அதிகமாக இருக்கக்கூடும். கருவின் உடனடியான சூழல். (Immediate Micro Environment) பற்றி நாம் இன்னும் நிறைய ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த விடயத்தில் எமது அறிவு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் எம்மால் செய்யக்கூடிய பரிசோதனைகளும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றன. கருக்கட்டல் என்ற அந்த அற்புதமான நிகழ்வுக்கு காரணமாக அல்லாஹ் அமைத்து வைத்திருக்கும் பாரிய ஏற்பாட்டை விளங்கிக் கொள்ளுமளவுக்கு மருத்துவம் இன்னும் முன்னேறவில்லை என்பதே யதார்த்தம்'*

குழந்தைப் பாக்கியம் பெறாத தம்பதிகள் என்ன செய்ய வேண்டும்? முதலில் ஒரு பெண்ணோயியல் வைத்தியரைச் (VOG) சந்தித்து ஆரம்பகட்ட பரிசோதனைகளைச் செய்துகொள்ள வேண்டும். அதன் பிறகு பரிசோதனை முடிவுகளுக்கு ஏற்ப கருக் கட்டலை ஊக்குவிக்க சில வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றையும் செய்ய வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றுக்கெல்லாம் காரணமாக இருக்கும் அல்லாஹ்வின் சக்தியை மறந்துவிடாமல் அவனிடம் தொடர்ந்தும் உதவி கேட்டவர்களாக இருக்க வேண்டும்.

எவ்விதமான நோயோ அல்லது பிரச்சினைகளோ இல்லாத, அதேநேரம் குழந்தைப பாக்கியம் பெறாத தம்பதிகளும், நோய்கள் ஏற்பட்டு அவை குணமாகிய பின் குழந்தை பெற முயற்சித்து, பல வைத்தியர்களை சந்தித்தும் பலனில்லாமல் நம்பிக்கையிழந்து விரக்தியடைந்து வாழ்க்கையே வேண்டாம் என்று சமுகத்திலிருந்து ஒதுங்கி வாழும் தம்பதிகளும் பலர் உள்ளனர். இவர்களுக்கு ஒரு வைத்தியர் என்ற முறையில் என்னால் தீர்வு சொல்ல முடியாமல் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் என்ன நடக்கிறது என்பதை நாம் அறியமாட்டோம். வைத்தியர்கள் கைவிரித்துவிடும் பல கட்டங்களில இதுவும் ஒன்று. நவீன வைத்தியத்தில் தீர்வு இல்லை என்ற இந்தப் பிரச்சினைக்கு வேறு ஏதும் தீர்வு உண்டா? நிச்சயமாக உண்டு. அதுதான் தவக்குல். அல்லாஹ் தருவான் என்பதில் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை. நான் கண்கூடாகக் கண்ட ஒரு நிகழ்வை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இது ஒன்றும் 'பெரியார்கள்' சொன்ன கற்பனைக் கதை அல்ல. சில வருடங்களுக்கு முன் என் கண்முன்னால் நடந்த நிகழ்வு. இதன் மூலம் பல தம்பதிகளுக்கு அல்லாஹ் தீர்வு கொடுப்பான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஊட்டுவதற்காக இதனை சொல்கிறேன்.

எனக்குத் தெரிந்த ஒரு தம்பதியினர் ஐந்து ஆறு வருடங்களாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்தார்கள். கணவனிலும், மனைவியிலும் செய்யப்பட்ட எல்லாப் பரிசோதனைகளும் சாதாரணமாகவே இருந்தன. மலட்டுத்தன்மைக்கு எந்தக் காரணமும் அறியப்படவில்லை. பல வைத்தியர்களிடம் கலந்தாலோசனை பெற்றும் தீர்வு கிடைக்கவில்லை. விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருந்த அந்தத் தம்பதிக்கு எப்படியாவது குழந்தை பெற்றுவிட வேண்டும் என்று ஆசை... இப்படியிருந்த வேளையில் அவர்களின் நண்பன் ஒருவன் இன்னும் ஒரு வழியைக் காட்டிக் கொடுக்கிறான். அதுதான் குறிபார்த்தலும், இன்னும் சில விடயங்களும். அவர்களோ குழந்தை வேண்டும் என்ற ஆசையில் ஷிர்க்கான விடயங்களைக்கூடச் செய்ய ஆயத்தமாயிருந்த வேளையில் அத்தம்பதியரின் சகோதரர் (அவர் ஓர் இஸ்லாமிய இயக்க ஊழியர்) குறுக்கிட்டு அவர்களை ஷிர்க்கிலிருந்து தவிர்த்து இப்படி வழிகாட்டினார்:

*''குழந்தைப் பாக்கியத்தை தருவதும், தராமலிருப்பதும் அல்லாஹ்வின் கையில் இருக்கிறது. ஆணின் உதவியின்றியே ஈஸா (ஸல்) அவர்களைப் படைத்த அல்லாஹ் எங்களுடன் இருக்கிறான். அல்லாஹ்வின் உதவியை, தருவான் என்ற முழுமையான நம்பிக்கையோடு கேட்டால் நிச்சயமாக அவன் தரக் காத்திருக்கிறான். எனவே, தயவு செய்து குறிபார்த்தல் மற்றும் ஷிர்க்கான விடயங்களில் இருந்து தவிர்ந்து இன்னும் இரண்டொரு மாதங்கள் பொறுத்திருங்கள். இன்ஷா அல்லாஹ் கர்ப்பமடைவீர்கள்''* என்று கூறி ஷிர்க்கில் இருந்து அவர்களைத் தடுத்த அந்த சகோதரர் என்னைச் சந்தித்த வேளையில் இப்படிச் சொன்னார்.

*''நான் அவர்ளை ஷிர்க்கிலிருந்து தடுத்திருக்கிறேன். நான் அல்லாஹ்வை முற்று முழுதாக நம்பி ஏதோ என் பையில் இருக்கும் ஒரு பொருளை கொடுப்பதைப் போல், அல்லாஹ் தருவான் என்று முழு நம்பிக்கையோடு சொல்லிவிட்டேன். அதற்காக இன்று தஹஜ்ஜத் தொழுகையில் ஸுஜூதில் இருந்து அழுது, மனமுருகி அல்லாஹ்விடம் மன்றாடிக் கேட்டிருக்கிறேன். மேலும் எனது சகோதரி கர்ப்பமடையும் வரைக்கும், எனது துஆ அங்கீகரிக்கப்படும் வரைக்கும் தொடர்ந்து, பல வருடங்கள் சென்றாலும் விடாமல் நோன்பு நோற்க தீர்மானித்திருக்கிறேன். எனது சகோதரி கர்ப்பமடைந்து விட்டாள் என்ற செய்தி கிடைக்கும்வரை நான் நோன்பு நோற்பதை விடப்போவதில்லை. நான் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவிதேடும்படி அல்லாஹ் சொல்வதனால் அதனை இப்போது செய்கிறேன். நிச்சயமாக அல்லாஹ் நான் அவன் மீது வைத்திருக்கும் அபார நம்பிக்கைக்கும் வேண்டுதலுக்கும் பதில் தருவான்''* என்று சொல்லிய அந்த சகோதரர் அன்றும் நோன்பு நோற்றிருந்தார்.

அல்லாஹ்வின் உதவி எவ்வளவு சமீபமாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்! 10 நாட்களில் அந்தப் பெண் கர்ப்பமாகி விட்ட செய்து கிடைத்தது. அல்ஹம்து லில்லாஹ் இதுதான் தூய்மையான தவக்குலின் விளைவு. இப்போது அந்தத் தம்பதியருக்கு பல குழந்தைகள் இருக்கின்றனர். ■



# இப்படியும் ஓர் அழகிய முன்மாதிரி!

*அபூ முஸ்அப் – கஹடோவிட*

இன்று முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் அந்நியம் ஆகிப் போனதன் விளைவாக இஸ்லாத்தின் பல அம்சங்கள் அவர்களுக்குப் புதிதாகத் தெரிகின்றன. இதனால் இந்த விடயங்களைப் பேசும் தாஇகளும் இயக்கத் தலைவர்களும் புதிதாக இஸ்லாம் பேசுவோராக சமூகத்தின் ஒரு சாராரால் நோக்கப்படுவதைக் காண்கிறோம். இஸ்லாமிய சமூக அமைப்பு பற்றிப் பேசினால் அது அந்நியமாகத் தெரிகிறது. ஸகாத் கொடுப்பது பற்றிப் பேசினால் அது புதிதாகத் தெரிகிறது. இஸ்லாத்தில் புகுந்து ஒன்றை அது பிழையென்று பேசினால் அது புதிதாகத் தெரிகிறது. மக்களுக்கு மத்தியில் மறைந்துபோன ஒன்றை உயிர்ப்பிக்க முயற்சித்தால் அதுவும் புதிதாகத் தெரிகிறது. இவ்வாறு இஸ்லாம் முஸ்லிம்களுக்குள்ளேயே அறிமுகமற்று அநாதையாகி நிற்கிறது. "**இஸ்லாம் அறிமுகமின்றி ஆரம்பித்தது. அது மீண்டும் அதே நிலைக்குத் திரும்பிச் செல்லும். அந்த அறிமுகமற்ற நிலையில் இஸ்லாத்தோடு இருப்பவர்களுக்கு சுபசோபனம் உண்டாகட்டும்!**" என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இந்த வகையில் முஸ்லிம்கள் மத்தியில் மறைந்துபோன ஒரு நபிவழியை மிகவும் சிறப்பாக செய்துகாட்டிய முன்மாதிரியான ஒரு விடயம் பற்றியே இங்கு கூறவருகிறேன். அல்லாஹ் கூறுகிறான்:

"**நீங்கள் உங்களுக்கு விரும்பிய பெண்களிலிருந்து இரண்டு, மூன்று, நான்காக திருமணம் முடித்துக் கொள்ளுங்கள். உங்களால் நீதியாக நடந்துகொள்ள முடியாது என்றிருப்பின் ஒன்றை முடித்துக் கொள்ளுங்கள்**"

நமது சமூகத்தில் பலதார மணம் பொதுவாக வெறுக்கப்படுகிறது. ஒருவர் அவ்வாறு செய்தால் விபச்சாரம் செய்ததைவிடவும் பெரிய குற்றவாளியாக நோக்கப்படுகிறார். அல்லாஹ்வும் ரஸூலும் உருவாக்கிய ஒரு விடயத்தை வேண்டுமென்றே புறக்கணிப்பது 'ரித்தத்' ஆகும்- இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும் செயல். ஏனோ இந்த சமூகம் உணர்வதில்லை. பலதார மணம் செய்த பலர் தமது குடும்ப வாழ்வில் சறுக்கியுள்ளனர் என்பது உண்மையாக இருப்பினும் உண்மையிலேயே தூய எண்ணத்துடன் இவ்வாறு செய்து முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட விரும்பும் ஒரு சகோதரனை ஏன் இந்த சமூகம் குற்றவாளியாகப் பார்க்க வேண்டும்?

ஒரு அறிஞரின் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது. *"நடைமுறையில் பின்பற்றப்படும் ஒரு ஸுன்னா, வாஜிப் - கட்டாயம் என மக்களால் நம்பப்படுமாயின், அது வாஜிபல்ல என்பதை உணர்த்துவதற்காக அதனை விடவேண்டும். இன்னுமோர் நடைமுறை தேவையற்றது என புறக்கணிக்கப்படும் சமயத்தில் அதனை செயற்படுத்திக் காட்டுவது வாஜிபாகும்.'*

பலதார மணம் 'வாஜிப்' என்ற நிலையை அடைந்து விட்டதோ என நினைக்கின்ற அளவுக்கு சூழல் மாறியிருக்கிறது.

- சீதனப் பிரச்சினையால் திருமணம் செய்ய முடியாமை.
- இளம் வயதிலேயே விதவையானோர்
- ஆண்களைவிடவும் பெண்களின் விகிதாசாரம் கூடிச் செல்வது

போன்றவை இத்தேவைக்கான பிரதான காரணங்கள் என முன்வைக்க முடியும்.

எனவே இந்த வகையில் அவசியமான ஒரு மார்க்க விடயத்தை அண்மையில் ஒரு சகோதரர் செய்துகாட்டினார். பலரும் பலதார மணம் செய்யவே செய்கிறார்கள். ஆனால, இலங்கையிலேயே இதுதான் பலதார திருமணங்களில் முதலாவதாக இருக்குமோ என வைபவத்தில் கலந்து கொண்ட பலரும் வியந்தனர்.

இரண்டாவது திருமணம் செய்து முன்மாதிரி காட்டிய அந்த சகோதரர் உணர்வுமிக்கவர்; த.'வாப் பணியில் அக்கறை செலுத்துபவர். பொருளாதார வசதி நிரம்பியவர்; தான் இரண்டாவது திருமணம் செய்யவேண்டுமென்ற எண்ணம் பத்து வருடங்களுக்கு முன்பே இருந்தாலும் இப்போதுதான் அதை செயல்படுத்திக் காட்டினார்.

விதவைகள், அநாதைகள் என பல இடங்களில் பெண் தேடி, இறுதியில் மிகவும் வறுமைப்பட்ட ஒரு பெண்ணைத் தெரிவு செய்து தனது இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார். அதற்காக இவர் குறுக்குவழிகளையோ, முறைகேடான வழிகளையோ நாடிச் செல்லவில்லை. தனது தாய், அன்பு மனைவி சகிதம் அப்பெண் வீட்டுக்குச் சென்று, முறையாகப் பெண் பார்த்து, பூரண சம்மதம் பெற்ற பின் முதல் திருமணத்தைப் போன்றே எல்லா ஏற்பாடுகளும் செய்து, அழகான அழைப்பிதழும் அடித்து பிரபல்யமான ஒரு திருமண மண்டபத்தில் வெகு சிறப்பாக செய்து காட்டினார். முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த நடைமுறையைக் காண வேண்டும் என்பதற்காக தனக்குத் தெரிந்த முஸ்லிமல்லாத நண்பர்களையும் விருந்துக்கு அழைத்து அவர்களும் இவ்வழகிய நிகழ்வைக் காணச் செய்தார்.

உண்மையில் இந்த வைபவத்தில் கலந்துகொண்ட நானும் என் போன்ற பலரும் இந்த சகோதரரை உளமாரப் பாராட்டினோம். இதே முன்மாதிரியை இறையச்சமும், பலமும், வசதியும் கொண்ட சகோதரர்கள் செய்வார்களாயின் இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பாரிய சமூகப் பிரச்சினைகளான சீதனம், வெளிநாட்டுத் தொழில், இளம் விதவைகள் போன்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இந்த முன்மாதிரியை குறித்த விடயத்தில் தகுதியுள்ளவர்கள் பின்பற்றுவார்களாக!

# ஈமானுக்கு வரைவிலக்கணம் கொடுத்தால்...?

- இஸ்லாஹிய்யா யாசிர் -

இஸ்லாம் மனிதனுக்கு அருளப்பட்ட ஓர் அறிவுடைமையான மார்க்கம். இதற்கு எதிரானதுதான் அறியாமை என்பதாகும். எனவே, முஸ்லிம் என்றால் அறிவாளி என்பதுதான் அதனது பொருள். இந்த தூய அறிவு ஈமானுடன் தொடர்புபட்டதாகும். ஆகையால் இது ஒரு மனிதனை ஆளுமென்றால் அவன் இவ்வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை விளங்கிக் கொள்வான். ஒரு நீண்ட பிரயாணத்தை உணர்ந்து அப்பிரயாணத்துக்குரிய கட்டுச் சாதத்தை தயார்படுத்தும் முயற்சியிலே ஆர்வத்தோடு இருப்பான். இதைப் பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"தயார்செய்து வைத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக தயார் செய்து வைப்பவற்றில் மிகச் சிறந்தது இறையச்சமேயாகும்" (2:197)**

**"ஈமான் என்பது ஆசை வைப்பதும், எதிர்பார்ப்பதும் அல்ல. எது உள்ளத்தில் பதிந்து, அதை செயல் உண்மைப்படுத்துகிறதோ அதுதான் ஈமான்" (தைலமி)**

அப்படியென்றால் மனிதனின் வாழ்க்கை பற்றிய நோக்கமும், அதனடிப்படையில் விளங்குகின்ற செயல்களின் பெறுமானமும்தான் ஈமானாகும். இந்தக் கேள்விக்கான விடையை குர்ஆன் இரண்டு விதமான மனிதர்களுக்கு இரண்டு விதமாகப் பதிலளிக்கிறது.

1. இவர்கள் வாழ்வின் நோக்கம் உண்பதும், குடிப்பதும், உலக இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதுமாகும். சுருங்கச் சொன்னால், இவர்களது நோக்கம் இவ்வுலகமும் அதிலுள்ள இன்பங்களுமாகும். இதைத் தவிர வேறு நோக்கங்கள் இவர்களுக்கு இல்லை. இவர்களது

**"நான் மனிதனையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவன்றி படைக்கவில்லை" (51:56)**

இந்த நோக்கத்தினால் விளைகின்ற செயற்பாடுகளை குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"மனிதனே! நீ உன்து இரட்சகனிடம் செல்லும் வரையில் கஷ்டத்துடன் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறாய். பின்னர் நீ அவனை சந்திக்கின்றவனாகவும் இருக்கிறாய" (84:6)**

இந்த நோக்கில் செயல்படுபவனின் வாழ்வியல் விவகாரங்களிலும், போராட்டத்திலும், மரணத்திலும், தியாகத்திலும், வியாபாரத்திலும் கஷ்டநஷ்டத்திலும் அல்லாஹ்வின் திருப்தி நிலைத்து நிற்கும்.

மனிதன் இன்று ஆயுதம் ஏந்துவதும், அதனைக் கீழே வைப்பதும் (சமாதானம் செய்து கொள்வதும்) அவன் இவ்வுலகில் நிம்மதியாக

ஆகையால் ஒரு முஸ்லிம் இரவிலும் பகலிலும் அதற்காகவே செயற்படுவான். அவனது உள்ளம் நரகத்தின் மீதான பயத்திற்கும், சுவர்க்கத்தின் மீதான எதிர்பார்ப்பிற்கும் மத்தியிலே இருக்கும். அவனது பயம் அறிவாளியின் பயமாகவும், அவனது எதிர்பார்ப்பு உழைப்பாளிகளின் எதிர்பார்ப்பாகவும் இருக்கும். இதைத்தான் ஸஹாபிகள் தெளிவாக அறிந்திருந்தார்கள். எனவே எச்சந்தர்ப்பத்திலும் எத்தியாகங்களையும் செய்வதற்கு அவர்கள் தயங்கியதில்லை. இதுதான் ஒவ்வொரு முஸ்லிமிற்கும், தாஇக்கும் இருக்க வேண்டிய அறிவுப் பண்பாகும். அது அவனை இறைவன் பக்கம் மக்களை அழைப்பதற்கும், ஷைத்தானை விட்டும் தூரமாவதற்கும் அவனைத் தூண்ட வேண்டும். என்றாலும் இன்றைய முஸ்லிம்கள் இந்த அறிவை விட்டும் திசைதிருப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் மனிதனின் நோக்கம் என்ன? அதன் விடை ஈமானுடன் இணைந்துள்ளது. எனவே விடைக்கு முன்னர் ஈமான் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்:

உள்ளங்களோ மரணித்துக் கிடக்கின்றன. இத்தகையவர்களின் நோக்கத்தையும், அவர்களுக்கான முடிவையும் குர்ஆன் இவ்வாறு வர்ணிக்கிறது:

**"உலக இன்பங்களை அனுபவித்துக் கொண்டும், கால்நடைகள் தின்பதைப் போல் தின்றுகொண்டும் இருக்கிறார்கள். நரக நெருப்பே இவர்களின் தங்குமிடமாகும். (47:12)**

அமைப்பு, உருவம் தவிர்ந்த மற்றைய விடயங்களில் கால்நடைகளைப் போன்றவர்கள்; மனிதர்களில், ஈமானிலும், அறிவிலும் கீழ்த்தரமான பெறுமானத்தைக் கொண்டவர்களும் இவர்கள்தான்.

2. இவர்கள் வாழ்வையும் அதனது நோக்கத்தையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள். இவர்களின் உள்ளங்களில் பதிந்திருப்பது அல்லாஹ்வின் திருப்தியாகும். இந்தப்பதிவின் அடிப்படையிலேயே அவர்களின் செயல்கள் அமைந்திருக்கும். இது ஈமானின் உயர்ந்த பெறுமானமாகும். இவர்களது வாழ்வின் நோக்கம் அல்லாஹ்வின் நோக்கமாகும். இதனை அல்குர்ஆன் இவ்வாறு விளக்குகிறது:

வாழ்வதற்குத்தான். அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஜரிஷ் போராட்டக்குழு மற்றும் தேசிய சர்வதேச மட்டத்தில் இன்னும் எத்தனையோ குழுக்கள் தமது போராட்டக் கொள்கையிலிருந்து மாறிவிட்டார்கள் எனில், அவர்களது வாழ்வின் நோக்கத்தை இவ்வுலகிலேயே ஆக்கிக் கொண்டார்கள். எனவே, ஒரு வழிமுறை கைகூடாது போனால், இன்னுமொரு வழிமுறையைக் கையாண்டாவது தமது நோக்கத்தை இவ்வுலகிலேயே அனுபவிக்க முயற்சிக்கின்றார்கள் போலும். இவ்வாறான பெறுமானமற்ற நோக்கம்தான் அவர்களது பலவீனத்திற்கும், மாற்றங்களுக்கும் காரணமாகும். வாழ்வின் நோக்கம் மறுமை என்றாக்கிக் கொண்டு போராடும் குழுக்களை நாம் பலஸ்தீன், காஷ்மீர், ஆப்கானிஸ்தான், செச்னியா மற்றும் இன்னும் பல இடங்களிலும் காண்கிறோம். இவர்களது உள்ளத்தில் பதிந்திருப்பது மறுமையாகும். அந்தப் பதிவை உண்மைப்படுத்துவது கனரக ஆயுதங்களின் முன்னால் கற்களால் தாக்கும் அவர்களது வீரதீரச் செயல்கள். இந்தப் போராட்டத்தின்

முடிவு மரணமாகும். ஏனெனில், மறுமையின் (நோக்கம்) ஆரம்பம் மரணம்தான். இவ்வாறு மனித வாழ்வின் நோக்கத்திற்கும், ஈமானுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

இவ்விடயத்திலேயே இன்னுமொரு விடயத்தையும் புரிந்து கொள்ள முடியும். அதாவது, மனிதன் தன் செயல்களுக்குப் பின்னால் உடனேயே கூலியை எதிர்பார்க்கிறான். அவ்வாறான செயல்களில்தான் அவன் பெரிதும் அக்கறை கொள்கிறான். வியாபாரம், உழைப்பு தொழில் எனப் பல்வேறு வேலைகளில் அவன் மூழ்கி இருப்பதற்குக் காரணம் அவன் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்ற இலாபமாகும். மாறாக வேறு சிறந்த செயல்களின் கூலி பின்னர் பன்மடங்காக கிடைக்குமென்றிருந்தால் அவன் அவற்றில் ஆர்வம் கொள்வதில்லை. அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதற்கு முன்வருவதில்லை. அவனுக்காக போராடுவதற்கும் உயிரை விடுவதற்கும் துணிவதில்லை. கண்விழித்து வணக்கம் புரிவதற்கும் தயாரில்லை. காரணம் இவற்றின் பிரதிபலன்கள் தாமதமாகும். இவர்களது அறிவும், ஈமானினது அந்தஸ்தும் அவ்வளவுதான். இதைக் குர்ஆன் இவ்வாறு வர்ணிக்கிறது:

**“எவன் நம்மை நினைவுகூருவதையிட்டும் திரும்பிக் கொண்டானோ அவனை நீர் புறக்கணித்துவிடும். இவ்வுலக வாழ்வைவிட வேறு எதையும் அவன் நாடவில்லை. அவனின் அறிவு எல்லையும் அதுதான்”**

**(53: 29,30)**

எந்தப் போதனையும் உபதேசமும் அவர்களது உள்ளத்தைத் தொடுவதில்லை. ஏனெனில் அவை மரணித்துள்ளன. அவர்களோ மறுமையைவிட இவ்வுலக வாழ்வை மேலாக மதிக்கின்றனர். உலகம் அவர்களை மயக்கிவிட்டது.

**“மனிதர்களே! இறைவனின் வாக்கு சத்தியமானது. எனவே இவ்வுலக வாழ்வு உங்களை மயக்கிவிட வேண்டாம்” (35:05)**

அல்லாஹ்வின் இந்த உபதேசமும் அந்த இதயங்களை தொடாமைக்கான காரணம் அதுவே. எனவே, மரணித்த உள்ளம் உயிர்பெற என்ன வழி? அதுதான் அல்லாஹ்வின் திருப்தி அதற்கு ஊட்டப்பட வேண்டும். எவ்வேளையிலும் மரணத்தை சந்திக்க தயாராக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்:

**“நீ காலையானால் மாலையை எதிர்பார்க்காதே மாலையானால் காலையை எதிர்பார்க்காதே”**

ஆதாரம் : புகாரி

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி)

இந்த உணர்வு உள்ளத்தில் உதயமானால் அவன் கடைசிப் பிரயாணத்திற்கு தயாராவான். அப்போது கஷ்டத்தில் சுகத்தையும், கவலையில் சந்தோஷத்தையும், களைப்பில் ஓய்வையும் காண்பான். அங்கே அவனது அறிவு வாழ்க்கையின் நோக்கத்தையும் ஈமானையும் சீர்படுத்தும். இதனால் சிந்தனையும், அவனது செயலும் தூய்மைபெறும். இவை அல்லாஹ்வின் திருப்தியை உள்ளத்திற்கு ஊட்டும். அது உயிர் பெறும், இன்ஷா அல்லாஹ்!

# மீடியா வொட்ச்

## இருமுகம் காட்டும் வானொலி நேயர்!

எவ்வளவுதான் அலைவரிசை அடிமைத்துவம் பற்றி ஊன்றி எழுதினாலும்கூட எமது சகோதர சகோதரிகளின் பொழுதுகள் அலைவரிசைகளோடுதான் கழிகின்றன. இதே வரிசையில் எமது சகோதரர் ஒருவர் தொடராகப் புரிந்துவரும் தவறை சுட்டிக்காட்டி அதனை அவர் திருத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

அண்மைக் காலமாக கம்பளையைச் சேர்ந்த எமது சகோதரர் ஒருவர் தனியார் வானொலி மற்றும் இலங்கை வானொலி போன்ற அலைவரிசைகளுக்கு அழைப்பை ஏற்படுத்தி பாடல் கேட்பதிலும் பார்த்து ரசித்த திரைப்படங்கள் பற்றி சொல்லி மகிழ்வதிலும் பெண் அறிவிப்பாளர்களோடு கொஞ்சி மகிழ்வதையும், இரட்டை அர்த்த நகைச்சுவைகளில் உரையாடுவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளார். அதே நேரம் வியப்பும் நகைப்பும் என்னவெனில் அதே சகோதரர் முஸ்லிம் நிகழ்ச்சியின் கருத்துக்களம், இளம்பிறை போன்ற இன்னும் பல தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சிகளோடு இணைந்து குர்ஆன், ஹதீஸ் நிழலில் உபதேசித்து பிரச்சினைகள், தீர்வுகள், சர்வதேசம் பற்றியெல்லாம் அழகாக பேசுகிறார். அத்தோடு எமது சகோதரிகள் அலைவரிசைகளுக்கு அடித்துச் செல்லப்படுவதையும் சாடுகிறார். உண்மையில் நல்ல விடயம்தான் இருந்தாலும் தானும் அதே சாக்கடையில் சிக்குண்டு கிடப்பதை சகோதரர் சிந்திக்கவில்லை போலும். ஊருக்கு மட்டும்தான் உபதேசம் தனக்கு இல்லை என்பதுபோல இவருடைய போக்கு அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

தொலைபேசி வாயிலாக இணைந்து பொழுதைக் கழிப்போம் என்று இவ்வாறு செய்கிறாரோ அல்லது தன்னுடைய பெயரைப் பிரபல்யப்படுத்திக் கொள்ள இவ்வாறு செய்கிறாரோ...? எது எவ்வாறிருப்பினும் சகோதரர் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் வெறும் புகழ் வரப் போவதில்லை. மாறாக உங்கள் பெயருக்கும், முஸ்லிம் நிகழ்ச்சிக்கும் ஏன், முஸ்லிம்களுக்கும் 'இகழ்ச்சி' தான் ஏற்படும். பகிரங்கமாக ஒரு தவறு நடைபெறும்போது அதனை பகிரங்கமாக சுட்டிக்காட்டுவதே சாலப் பொருத்தம். எனவே சகோதரர் அவர்களை தாழ்மையோடு கேட்டுக் கொள்வது, உங்கள் சிறந்த சிந்தனைகள், கருத்துக்கள், உபதேசங்கள் போன்றவற்றை தொடர்ந்தும் முஸ்லிம் நிகழ்ச்சி வாயிலாக வழங்குவதை வரவேற்கிறோம். மாற்றமாக ஏனைய அலைவரிசைகளுக்கு அழைப்பை ஏற்படுத்தி பாடல் கேட்பது, திரைப்படக் கதை சொல்வது, பெண் அறிவிப்பாளர்களோடு கொஞ்சுவது போன்ற 'ஜாஹிலிய்யத்'தான விடயங்களை விட்டும் தயவுசெய்து நீங்கிக் கொள்ளுங்கள்.

சம்பந்தப்பட்ட சகோதரர் மட்டுமல்ல ஏனைய எமது சகோதர, சகோதரிகளும் அலைவரிசைகளுக்கு 'டயல்' பண்ணுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். இப்படி பொழுதைப் போக்க இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. அதிலும் சகோதரிகளே! உங்கள் உடல் மட்டுமல்ல குரலும் மறைக்கப்பட வேண்டியவற்றுள் ஒன்றுதான். காலம் பெறுமதிமிக்கது. காலத்தை செலவளித்தது பற்றி நாளை மறுமையில் அல்லாஹ்விடம் கேள்வியும் உண்டு. எனவே, காலத்தை பயனுள்ளதாய் மாற்றி இறைவழியில் செலவழிப்போமாக!

**மாஹிர்- ஹெம்மாதகமை**

**- எம்.எச்.எம். ஹஸன் -**

> உயிரிகளின் மரபணுக்களைப் பெற்று உருவாக்கப்பட்டுள்ளவற்றை உணவாகக் கொள்வது தொடர்பான ஷரீஅத் கண்ணோட்டம் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. சாப்பிட ஹராமாக்கப்பட்ட விலங்குகள் அருவருப்பான புழு வகைகள் போன்றவற்றின் மரபணுக்கள் சோயா, தக்காளி, சோள வகைகள், காய்கறி வகைகளுடன் இணைக்கப்பட்டு நவீன மரபணு மாற்றத் தானியங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அத்தகைய தானியங்கள் பழங்கள் என்பவற்றில் மூல மரபணுக்களின் தன்மை உண்டா, இல்லையா என்றும் அவ்வாறு இருப்பின் அவற்றைச் சாப்பிடுவது கூடுமா என்றும் ஆராய வேண்டியுள்ளது.

# மரபணு மாற்றப்பட்ட உணவுகள்:

## மனிதனுக்கு உகந்ததா?

உயிரியல் விஞ்ஞானத்துறையின் புரட்சிகரமான ஒரு கண்டுபிடிப்பு (GeneTechno) மரபணு தொழில்நுட்பம் என்றால் மிகையாகாது. 'வொட்சன்', 'க்ரீக்' ஆகிய இரு விஞ்ஞானிகளின் அற்புதமான கண்டு பிடிப்பு இது என்பதை வியப்போடு நோக்காதோர் இல்லை எனலாம். அவர்கள் இக் கண்டுபிடிப்பு மூலம் டீ.என்.ஏ (D.N.A) மாதிரியைக் கண்டுபிடித்ததன் மூலம் உயிரியல் விஞ்ஞானத் துறையில் பல மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளனர். இந்த உயிரியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்று புதிய எல்லைகளைத் தேடி சிறகடிக்கத் தொடங்கியுள்ளது.

மரபணுத் தொழில்நுட்பத்தினால் ஏராளமான நன்மை கிடைப்பதாக விஞ்ஞானத்தினடியாக நிருபிக்கப்பட்டுள்ளது. ஆனால் கலாசார ரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் இன்று உணவுச் சந்தையில் ஏராளமான மரபணு மாற்றப்பட்ட உணவுவகைகள் குவிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இன்று உலக நாடுகளில், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு வகைகள் குறித்து பல்வேறு விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு என்றால் என்ன? ஒரு பிராணியின் அல்லது தாவரத்தின் அல்லது பற்றீரியாவின் அல்லது பங்கசின் வடிவம், நிறம், மணம் போன்ற பல்வேறு இயல்புகளைத் தீர்மானிக்கும் சிக்கலான கட்டமைப்பைக் கொண்ட ஒரு பகுதியே 'மரபணு' அல்லது 'பரம்பரை அலகு' எனப்படும். ஒரு விலங்கில அல்லது தாவரத்தில் அதிக எண்ணிக்கையிலான மரபணுக்கள் காணப்படும். ஒவ்வொரு மரபணுவும் அந்த விலங்கின் ஒவ்வொரு இயல்பைத் தீர்மானிப்பதாக அல்லது அறியப்படுத்துவதாக அமையும். உதாரணமாக, ஒரு தாவரத்தின் மலரை எடுத்துக் கொள்வோம். அதில் நிறத்தைத் தீர்மானிக்கும் மரபணு, மணத்தை தீர்மானிக்கும் மரபணு, வடிவத்தைத் தீர்மானிக்கும் மரபணுவும் இன்னும் இயல்புகளைத் தீர்மானிக்கும் எண்ணற்ற மரபணுக்களும் உண்டு. எந்தவொரு உயிரிலும் இத்தகைய ஒவ்வொரு இயல்பையும் தீர்மானிக்கும் எண்ணற்ற மரபணுக்கள் உண்டு.

மரபணு அல்லது பரம்பரை அலகு மாற்றப்பட்ட உணவு வகைகள் உருவாக்கப்படுவது. மேற்கூறப்பட்ட மரபணு தொடர்பான தகவல்களை அடிப்படையாக கொண்டாகும். ஓர் உயிரில் காணப்படும் ஏதாவது ஒரு இயல்புக்குரிய மரபணுவுக்குப் பதிலாக வேறு ஒரு உயிரிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அதே இயல்பு மேலும் விருத்தி நிலையில் உள்ள ஒரு மரபணு முன்னைய மரபணுவில் புகுத்தப்படும். நவீன உயிரியல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் இந்த சிக்கலான செயலொழுங்கு மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மரபணு அல்லது பரம்பரை அலகில் மாற்றம் செய்யப்பட்ட பல்வேறு உற்பத்திகள் இன்று பாவனையில் உள்ளன. உணவுற்பத்திகளுக்கான தானியங்கள் மற்றும் விலங்குகளின் உற்பத்தி, வைத்தியத் துறையில் பயன்படுத்தப்படும் பல்வேறு மருந்து வகைகள், அழகுக்காக வளர்க்கப் படும் தாவரங்கள், செல்லப் பிராணிகள் போன்ற பல்வேறு துறைகளில் இப்புதிய தொழில்நுட்பம் இன்று வியாபித்துள்ளது. தாவரங்களின் உற்பத்திகளுக்கு வேறு ஒரு தாவரத்தின் மரபணுதான் பாவிக்கப்படுகிறது என்றில்லாமல் தாவரங்களும் விலங்குகளும், பற்றீரியாக்களும் பங்கசுக்களும் இணைக்கப்பட்ட உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

நீண்டகாலமாக துல்லியமான பல ஆய்வுகளை மேற்கொண்டு பாரிய செலவுகளின் பின்தான் இத்தகைய மரபணு மாற்ற உற்பத்திகள் வெளிக்கொணரப்படுகின்றன. இன்று தனிப்பட்ட விஞ்ஞானிகளும் பாரிய நிறுவனங்களும் பல்வேறு நாடுகளில் இது போன்ற உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதே.

இத்தகைய செலவுகளுடன் புதிய மரபணு மாற்றப்பட்ட உற்பத்திகளை கொண்டு வருவதற்கான காரணம்தான் என்ன? இதன் மூலம் அடையக்கூடிய பாரிய பண இலாபமே இதற்கான காரணமாகும். உணவுக்கான தாவரங்கள், கால்நடை வளர்ப்பு, மருந்து உற்பத்தி போன்ற இவ்வகை உற்பத்திகளின்போது பல்வேறு நோய்களையும், பங்கசுத் தாக்கங்களையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றலுடன் கூடியதாக மரபணு மாற்றப்பட்ட உற்பத்திகள் இருப்பதும், கூடிய போஷாக்கும் அதிகரித்த அறுவடையும் பல்வேறு காலநிலை இயல்புகளை தாக்குப்பிடிக்கும் நிலையும் இவற்றின் அடிப்படைகளாகும்.

ஒரு புதிய மரபணு மாற்றுத் தாவரத்தை அல்லது தானியத்தை உற்பத்தி செய்யும் நிறுவனம் அதன் 'பேற்றன்' உரிமை மூலம் நீண்ட காலத்துக்கு அதனை உற்பத்தி செய்து விநியோகிக்கும் தனியுரிமை பெறுவதால் சந்தையில் தனது வர்த்தக ஆதிக்கத்தின் மூலம் பாரிய இலாபத்தை உழைக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உதாரணமாக உலர்வலயத்தில் மட்டும் பயிரிடக்கூடிய ஒரு தானியத்துடன் கடும் குளிருக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒரு மீன் வகை அல்லது துருவப் பிரதேச உயிரியின் மரபணுவைக் கலந்து புதிய தானியம் உருவாக்கப்பட்டால் அது குளிர்ப் பிரதேசத்திலும் உலர்பிரதேசத்திலும் ஒரு சீராக பயிரிடக்கூடியதாக இருக்கும் அதேவேளை, விலங்கு மரபணு சேர்க்கப்பட்டிருப்பதால் கூடிய போசாக்குக் கொண்டதாகவும் இருக்கும். குளிர், வெப்பம் என்ற இரண்டு நிலைகளையும் செவ்வனே தாக்குப்பிடிக்கக்

கூடியதாகவும் இருக்கும். இத்தகைய தானியங்கள் நீண்டகாலம் பாதுகாத்து வைக்கக்கூடியதாகவும் இருக்கும்.

இவ்வளவு நன்மைகளும் நிறைந்த தாகத் தெரியும் மரபணு மாற்றப்பட்ட உற்பத்தியை ஏன் எதிர்க்க வேண்டும்? என்ற பிரச்சினை அடுத்து எழுகின்றது. சுற்றாடல் நிறுவனங்கள் மட்டுமன்றி பாரம்பரியமான விலங்கு மற்றும் விவசாய நாடுகளும் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின் அறிஞர்களும் மரபணு மாற்றப்பட்ட உற்பத்திகளை கடுமையாக விமர்சிப்பதைக் காணலாம்.

மரபணு மாற்று உணவு வகைகள் சந்தைக்கு வந்த இக்குறுகிய கால அனுப வத்தில் இவ்வகை உணவை உட்கொண்ட வர்கள் பல்வேறு நோய்களுக்குள்ளாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் பீடிக்கப்பட்ட நோய்களின் பெயர்களைத்தானும் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். பல்வேறு ஒவ்வாமை நிலைகள், மகப்பேற்று வாய்ப்பு களில் பலவீனம், நோய் எதிர்ப்புச் சக்தியில் வீழ்ச்சி உட்பட இன்னும் பல அறியப்படாத நோய்களுக்கு ஆளாகியுள்ளமை அறியப்பட்டுள்ளது.

1989ம் ஆண்டில் அமெரிக்காவில் மிகக் குறுகிய காலத்தில் பல நோய்கள் பரவி யமை கண்டறியப்பட்டது. நரம்பு நோய்கள், பக்கவாதம், தோல்வீக்கம், தசைநார்களில் வலி, கழிவகற்றும் தொகுதிகளில் ஏற்படும் கோளாறுகள் இவற்றுள் சிலவாகும். ஒரு சில மாதங்களில் 5000க்கு மேற்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட் டனர். 37 பேர் குறுகிய காலத்தில் இறந்தும் விட்டனர். 1,500 பேருக்கு மேற்பட்டோர் நிரந்தர வலதுகுறைந்தோர்களாக மாறினர். இதுபற்றி தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்ட அமெரிக்க நோய் நிவாரண நிறுவனம் இறுதியில் இதற்கான காரணத்தை கண்ட றிந்தது. ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட ட்ரைப்டோபான் (Tryptophan) என்ற மரபணு மாற்று உணவை உட்கொண்டமை இந் நோயைத் தோற்றுவித்தது என்று கண்டு பிடிக்கப்பட்டது.

மரபணுமாற்றத் தொழில்நுட்பம் மூலம் ஏற்படக்கூடிய வேறு பல ஆபத்துக்கள் பற்றியும் எச்சரிக்கப்பட்டுள்ளது. சக்திவாய்ந்த பரம்பரை இயல்புகள் கொண்ட மரபணுத் தாவரங்களில் நீண்ட காலத்தில் தோன்றும் சக்திவாய்ந்த பங்கசுக்கள் போன்றவற்றை இல்லாதொழிப்பதென்பது பாரிய பிரச்சினை ஆகிவிடும். மரபணுமாற்ற தாவரங்களைப் பீடிக்கும் இத்தகைய நீடித்த பங்கசுகள்

**மரபணுமாற்ற உணவு வகைகள் குறித்து அவதானமாக இருப்பதற்கு ஒரு குறிப்பு மட்டும் இப்போதைக்கு உண்டு. அதாவது அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூ ஸிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் மரபணு மாற்று முறையில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதே அந்தக் குறிப்பு.**

பாரம்பரியமான தாவரங்களில் தொற்றி இயற்கைச் சமநிலையையும், உயிர்ப்பல் வகைமையையும் வெகுவாகப் பாதித்து விடும் ஆபத்துள்ளது. தாவரங்கள், தானியங்கள் போன்றவற்றின் செய்கைக் கான விதையுற்பத்தி மரபணு மாற்று உற்பத்தி நிறுவனங்களில் மட்டுமே இருக்கும் நிலை தோன்றுவதுடன் அவற்றுக்குத் தேவையான மருந்துவகைகள், களைகொல் லிகள், பசளை வகைகள்கூட அந்நிறுவனங் களில் இருந்து மட்டுமே பெறவேண்டி இருப்பதும் பாரிய தீய விளைவுகளைத் தோற்றுவிப்பதாக அமையும்.

பாரம்பரியத் தாவரங்கள் முற்றுமுழுதாக அழிந்து போதல், அந்நிலை பரவுதல், விஷம் கலந்த தாவரங்கள் உருவாதல் மட்டுமன்றி இவற்றின் மூலம் ஏற்படும் உயிர்ப்பல் வகைமைச் சமநிலை பாதிப்படைதல் என்பது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இதுவரை அறியப்பட்டுள்ள மரபணு மாற்று உற்பத்திகளில் விலங்குகள் மற்றும் உயிரிகளின் மரபணுக்களைப் பெற்று உருவாக்கப்பட்டுள்ள பழவகைகள், காய் கறிகள், புதிய சோயா இனத் தானியங்கள் போன்றவற்றை உணவாகக் கொள்வது தொடர்பான ஷரீஅத் கண்ணோட்டம் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலம் உரு வாகியுள்ளது. சாப்பிட ஹராமாக்கப்பட்ட விலங்குகள் அருவருப்பான புழு வகைகள் போன்றவற்றின் மரபணுக்கள் சோயா, தக்காளி, சோள வகைகள், காய்கறி வகை களுடன் இணைக்கப்பட்டு நவீன மரபணு மாற்றத் தானியங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அத்தகைய தானியங்கள் பழங்கள் என்பவற்றில் மூல மரபணுக்களின் தன்மை உண்டா, இல்லையா என்றும் அவ்வாறு இருப்பின் அவற்றைச் சாப்பிடுவது கூடுமா என்றும் ஆராய வேண்டியுள்ளது.

மனிதத் தோலின் நிறத்தையும் தன்மை யையும் கொண்ட தக்காளிப் பழங்கள் இன்று சந்தைக்கு வந்துள்ளன. தக்காளியுடன் மனிதத் தோலின் நிறத்தையும் தன்மையை யும் தீர்மானிக்கும் மரபணு இணைக்கப் பட்டுள்ளதே இதற்கான காரணமாகும். நாடுகளைத் தமதாக்கி சுரண்டிப் பிழைத்த ஏகாதிபத்தியவாதிகள் அந்நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கிய பின்பும் வர்த்தகக் கொள்கை ரீதியான நவீன ஏகாதிபத்தி யத்தை நிலைநிறுத்தியது போலவே, அதிலி ருந்து ஒருபடி மேலே சென்று முழு உலகையும் மரபணுத் தொழில் நுணுக்கம் மூலம் தமதாக்கிக் கொள்ளும் இந்த நவீன போராட்டம் பயங்கரமானதாகும்.

மரபணுமாற்று உணவுப் பொருட்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. மரபணுமாற்றத்திற்குட்படுத்தப்பட்ட உணவுவகைகளை வெளித்தோற்றத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளமுடியாது என்பதே அது. இலங்கை உட்பட மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தமட்டில் அத்தகைய உணவுகளை இனங்கண்டு கொள்ளும் ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய ஆய்வு கூட வசதிகள் அறவே இல்லை. ஆயினும் மரபணுமாற்ற உணவு வகைகள் குறித்து அவதானமாக இருப்பதற்கு ஒரு குறிப்பு மட்டும் இப்போதைக்கு உண்டு. அதாவது அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூ ஸிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் மரபணு மாற்று முறையில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதே அந்தக் குறிப்பு. மரபணுமாற்று முறையில் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்யும் அநேக நாடுகள் ஆபத்துக்களில் இருந்து தப்பும் நோக்கில் அவை தடைசெய்யப்பட் டுள்ளன. அதேவேளை மூன்றாம் உலக நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்து அந்நாட்டு மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை அவதானித்து வருகின்றன. அதேநேரம் மரபணு மாற்று உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாடுகளின் பட்டியலும் மூன்றுடன் நின்றுவிடாமல் நீண்டுகொண்டு போவதும் அலட்சியப்படுத்துவதற்கான விடயமாக இல்லை.

# அல்லாஹ்வின் பொறுப்புக்களை நிறைவேற்றாதிருக்க உங்களுக்கு அதிகாரமுண்டா?

**- அப்துல்லாஹ் மென்டிஸ் -**
**தமிழில் : எம்.எஸ்.எம். லாபிர்**

*நான் பௌத்தனாக இருந்து பாடசாலைப் பருவத்திலே கிறிஸ்தவனானேன். பிறகு கிறிஸ்தவ பிரசாரகனாக பணிபுரிந்தேன். நமது பிரதேசத்தில் தேவாலயம் ஒன்றை ஆரம்பித்து அங்கே சேவை செய்தேன். 1993ல் அல்லாஹ்வின் அழைப்புக் கிடைத்து இஸ்லாத்தை ஏற்றேன். அல்லாஹ்வின் வரம்புகளுக்குட்பட்டு அதன் பொறுப்புகளை சுமந்துகொண்டு காலம் கழிக்கிறேன்.*

அஸ்ஸலாமு அலைக்கும் அன்புள்ள முஸ்லிம் சகோதர சகோதரிகளே!

முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 'தூதுச் சேவை' முக்கியமானதும் பாரதூரமானதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும். அது ஒரு மனிதனிடமிருந்தோ பல மனிதர்களிடமிருந்தோ வந்தது அல்ல. சர்வ உலகையும் படைத்து உங்களையும் தோற்றுவித்த அல்லாஹ்வால் பொறுப்பாக்கப்பட்டதே இதிலுள்ள விசேட தன்மையாகும். இதுபற்றி உங்களுக்கு அறிவிப்பதை அல்லாஹ் எங்களுக்கும் கடமையாக்கியுள்ளான். இதனால் ஏதும் அசௌகரியங்களுக்கோ, மனவேதனைகளுக்கோ ஆளாகுவதாக இருந்தால் அல்லாஹ்வுக்காக எம்மை மன்னித்துக் கொள்ளுங்கள்.

முஸ்லிம்களாகிய நீங்கள் பரிசுத்த குர்ஆனின் கட்டளைகளையும் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் முன்மாதிரிகளையும் பின்பற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதை விசேடமாகக் கூறவேண்டியதில்லை. எல்லா முஸ்லிம்களுக்கும் இப்பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அவை யாவை? அவற்றை நீங்கள் நிறைவேற்றுகிறீர்களா?

**"தூதரே! உம் இறைவனிடம் இருந்து உமக்கு அருளப்பெற்றதை அறிவித்து விடும். நீர் அவ்வாறு செய்யாவிடில் அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர். இதில் எவருக்கும் அஞ்சாதீர். மனிதரின் தீங்குகளிலிருந்து அல்லாஹ் உங்களைப் பாதுகாப்பான். நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் மக்களை நேரான வழியில் செலுத்த மாட்டான்" (அல்குர்ஆன் - 5:67)**

**"ஒவ்வொரு வகுப்பாருக்கும் அவர்கள் வணங்குவதற்குரிய வழியை ஏற்படுத்தியிருந்தோம். ஆகவே அதுபற்றி அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்ய வேண்டாம். அன்றி நீர் அவர்களை உம்முடைய இறைவன்பால் அழையும். நிச்சயமாக நீர்தான் நேர்வழியில் இருக்கிறீர்" (அல்குர்ஆன் 22:67)**

இதன்படி இஸ்லாத்தின் தூய்மையான தூதை மற்றோருக்கும் அறிவிக்கும் பொறுப்பு முஸ்லிம்கள் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வின் கட்டளையாகும். அது சுருக்கக்கூடிய அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். தவிர அம்மனிதருக்குள் ஏற்படும் விகற்பங்களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு அவர்களோடு சத்திய வேதத்தையும் அருள் செய்தான். (பார்க்க அல்குர்ஆன் - 6:90, 2:143)

இவ்வாறு தெளிவாக அத்தாட்சிகள் வந்த பின்னர் அதனைப் பெற்றுக் கொண்ட அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாக மாறுசெய்ய முற்பட்டனர். ஆயினும் அவர்கள் மாறுபட்டு புறக்கணித்துவிட்ட அந்த சத்தியத்தளவில் செல்லும்படி விசுவாசிகளுக்கு அல்லாஹ் தன் அருளைக் கொண்டு நேர்வழிகாட்டினான்.

**"மனிதர்கள் அனைவரும் (ஆரம்பத்தில் ஒரே மார்க்கத்தைப் பின்பற்றும்) ஒரே சமுதாயத்தினராக இருந்தனர். பின்னரே (தங்களுக்குள் ஏற்பட்ட** ஒன்றல்ல. ஏனெனில் இவ்வுலக மக்கள் அனைவருக்கும் மரணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனவே உண்மையான வழிக்கு நுழையும் வாய்ப்பு மரணத்தோடு முடிவடைகிறது. மரணத்தின் பிறகு கப்று வேதனையும் கியாம நாளில் நிரந்தர நரக நெருப்பும் அவர்களுக்கு சொந்தமானதாக முடியும். இதற்கு முன்னேதான் உலக மக்கள் இருக்கிறார்கள். இந்த ஆபத்தான நிலையை அறிவிப்பதற்காக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தூய்மையாக வாழ்ந்து அல்லாஹ்வின் தூதுத்துவத்தில் ஈடுபடுவது முஸ்லிம்களின் பொறுப்பாகும். அவர்கள் இதனை நிறைவேற்றுகிறார்களா? அல்லாஹ்வின் பொறுப்புக்களை நிறைவேற்றாதிருக்க அவர்களுக்கு அதிகாரமுண்டா?

## பல்லின மக்கள் பற்றி இஸ்லாத்தின் கருத்து

மனிதர்கள் ஆரம்பத்தில் ஒரே சமூகத்தவராக இருந்தனர். அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு நன்மை செய்வோருக்கு நன்மாராயம் செய்யும்படியும், தீமை செய்வோருக்கு

**பொறாமையின் காரணமாக பல வகுப்பினராகவும்) பிரிந்து விட்டனர். (வினைக்குரிய கூலி மறுமையில்தான் கொடுக்கப்படுமென்று நபியே) உமது இறைவனின் வாக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்காவிடில அவர்கள் செய்து கொண்டிருந்த விகற்பத்தின் காரணமாக அவர்களுடைய காரியம் (இது வரையில்) முடிவு பெற்றே இருக்கும்" (10:19)**

**"எல்லா மனிதர்களும் ஆதமினதும் ஹவ்வாவினதும் சந்ததிகளே. நற்பணிகளை அடிப்படையாகக் கொண்டே தவிர அரபியர் அரபியரல்லாதாரை விடவும் அரபியல்லாதார் அரபிகளை விடவும், வெள்ளையர் கறுப்பர்களை விடவும், கறுப்பர் வெள்ளையரை விடவும் உயர்ந்தோரல்லர்"** இது நபி (ﷺ) அவர்களின் இறுதி உபதேசம்.

மனிதர்கள் அனைவரும் ஒரே மூலத்தில் தோன்றியவர்களாக இருந்த போதிலும் மனிதனின் சுபாவத்தினால் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொண்டமையால் அல்லாஹ்வின் அளவற்ற அருளால் மனிதர்களுக்கு

மத்தியில் நபிமார்களும் வேதங்களும் அருளப்பட்டமை தெளிவாகின்றது.

மனித வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே சத்தியமார்க்கத்தை பாதுகாத்து மனித சமுதாயத்தின் முன்வைத்துள்ள முறை புகழ்ச்சிக்குரியது. அல்லாஹ்வின் முன்னிலையில் உலக மக்கள் அனைவரும் சம அந்தஸ்தும், சமஉரிமையும் கொண்டவர்கள். அல்லாஹ் முழு மனித இனத்தையும் அளவற்ற அருட்பார்வையோடு படைத்துள்ளான். சுவனபதியின் வாசல் அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் உன்னதமான இந்தப்பேறு புனித குர்ஆன் பூராகவும் நபி (ﷺ) அவர்களது வாழ்வு பூராகவும் அறிவு ரீதியாகத் தென்படுகிறது. இந் நற்பேற்றை முஸ்லிம்கள் மூலமே உலகம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**இஸ்லாமிய சுப செய்தியை வெளியிடல்**

**“நான் ஜின் வர்க்கத்தையும் மனித வர்க்கத்தையும் என்னை வணங்கவே அன்றி படைக்கவில்லை” (51:56)**

இதன் மூலம் மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் விளங்குகிறது. அனைவரும் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்பதே அதன் விளக்கம். அளவற்ற நற்பேறு கொடுக்கப்பட்டு அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்று படைக்கப்பட்ட மனிதன், அவனது அறிவீனத்தால் கற்கள், மரங்கள், சிலைகள், நெருப்பு ஆகியவற்றோடு, மனிதனுக்கும் வழிபாடு செய்கிறான். தன்னைப் படைத்தவனை அவன் அறியாதிருக்கிறான். அல்லாஹ்வின் கடுமையான கோபத்திற்கு உலக மக்கள் ஆளாகும் இந்நிலையில் இஸ்லாமிய தூதை எத்திவைக்க வேண்டிய முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் அந்நியர்களை காபிர்கள் என சுட்டிக்காட்டிவிட்டு சுவனபதியின் உரிமை தமக்கே என்று கூறிக்கொண்டு தூங்குகிறார்கள். அல்லாஹ்வின் அளவற்ற அருளை அந்நியர் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை மறைக்கிறார்கள். தமக்குப் பொறுப்பாகவுள்ள எத்திவைக்கும் தூதுத்துவப் பொறுப்பை அல்லாஹ்வுக்கே சாட்டிவிட்டு வாய்மூடி இருக்கிறார்கள். இது பற்றிய ஒரு முஸ்லிமின் செயற்பாடு யாது?

அவர்கள் அந்நியர்களை காபிர்கள் என சுட்டிக்காட்டிவிட்டு சுவனபதியின் உரிமை தமக்கே என்று கூறிக்கொண்டு தூங்குகிறார்கள். அல்லாஹ்வின் அளவற்ற அருளை அந்நியர் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை மறைக்கிறார்கள். தமக்குப் பொறுப்பாகவுள்ள எத்திவைக்கும் தூதுத்துவப் பொறுப்பைக்கூட அல்லாஹ்வுக்கே சாட்டிவிட்டு வாய்மூடி இருக்கிறார்கள்.

**“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிக்க வேண்டியவாறு முயற்சியுங்கள். அவனே உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளான். இந்த மார்க்கத்தில் அல்லாஹ் உங்களுக்கு எந்த வொரு கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை. இது உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும். அவர்தான் உங்களுக்கு முஸ்லிம் என்று பெயரிட்டவர். இவ்வேதத்தில் அவ்வாறே உங்களுக்கு பெயர் கூறப்பட்டுள்ளது. இதற்கு நம்முடைய இத்தூதரே உங்களுக்கு சாட்சியாக இருக்கிறார். நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாக இருங்கள். தொழுகையைக் கடைப்பிடித்து ஒழுகுங்கள். ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வைப் பலமாகப் பற்றிக் கொள்ளுங்கள். அவனே உங்களது இரட்சகன். இரட்சகர்களில் எல்லாம் அவனே மிக்க நல்லவன். உதவிசெய்வோரிலும் அவனே மிக்க நல்லவன்” (அல்குர்ஆன் 22:78)**

அல்லாஹ்வுக்கும் மற்ற மக்களுக்குமிடையிலான தூதுச் சேவையை நிறைவேற்றுவது முஸ்லிம்களின் பொறுப்பாகும். அவனது எதிர்பார்ப்பை நிறைவேற்றி அவனது பாதையில் முயற்சிப்பதே முஸ்லிம்களின் இலட்சியமாக இருக்க வேண்டும். உலகுக்குப் பயந்து மந்த நிலையில் செயற்பட ஒரு முஸ்லிமுக்கு முடியாது. ஏனெனில் கப்றுடைய வாழ்வு, கியாம நாள், சுவர்க்கம் நரகம் உண்டென அவர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

**இஸ்லாமியத் தூதை அந்நியர்களிடம் கொண்டு செல்லுங்கள்!**

இஸ்லாமிய தூதை அந்நியர்களுக்கு எடுத்துச் செல்வது உங்கள் பொறுப்பு என்பதை இப்போது விளங்கியிருப்பீர்கள். இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடம் இதைக் கொண்டு செல்ல வேண்டும். எனினும் இஸ்லாமிய நிறுவனம் ஒன்றோ, குழுவொன்றோ இதனை இலங்கையில் நிறைவேற்றவில்லை. அதற்குரிய காலம் இன்னும் வரவில்லை என்று கூறுகின்றனர். முஸ்லிம்கள் குறைவான இஸ்லாமிய அறிவு, பலவீனமான நடைமுறை, சிங்கள மொழியில் தேர்ச்சியின்மை என்று காரணம் கூறுகின்றனர். இப்படிக் கூறி அல்லாஹ்வின் ஏவல்களை மீறுவதற்கு இடமுண்டா? இஸ்லாமிய அறிவின்றி மரணிப்பதன் பாரதூரத்தை அவர்கள் மறந்துவிட்டனர். நிறைவேற்றாத பொறுப்புக்களைப் பற்றி மறுமையில் வினவும்போது தப்பிக்கொள்ள காரணங்கள் உண்டா? இதில் ஈடுபடுவதில் நீங்கள் ஏன பராமுகமாக இருக்கிறீர்கள்? அலுவல்கள் மிஞ்சி விட்டதா? அன்றி வேறு ஏதும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளீர்களா? இவற்றில் எம்மோடு பங்கெடுக்க உங்களுக்கு முடியுமல்லவா? அது எப்படியென்றால் இம்மாபெரும் நற்காரியத்திற்காக செலவு செய்வதில் பங்கெடுப்பதாகும்.

**“அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசித்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து தானம் செய்து வந்தால் அதனால் இவர்களுக்கு என்னதான் நஷ்டம் ஏற்பட்டுவிடும்? அல்லாஹ் இவர்களை நன்கறிந்தே இருக்கிறான்” (4:39)**

நற்காரியங்களுக்காக அல்லாஹ்வின் பாதையில் உதவி புரிதலும் நற்கிரியை என்று விளங்குகின்றதல்லவா? இந்த நற்பணிக்காக அல்லாஹ்வின் பெயரால் நீங்கள் புரியும் உதவிகள் முக்கியமானது என்று உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்.

**“உலோபித்தனம் செய்பவர்களையும் மற்றோரை உலோபித்தனம் செய்யும்படி தூண்டுபவர்களையும் அல்லாஹ் தன் அருளால் தங்களுக்கு கொடுத்ததையும் (பிறருக்கு கொடுக்காமல்) மறைத்துக் கொள்பவர்களையும் (அல்லாஹ் நேசிப்பதில்லை) நிராகரிப்போருக்கு இழிவுபடுத்தும் வேதனையை நாம் சித்தப்படுத்தி வைத்துள்ளோம்” (அல்குர்ஆன் 4:37)**

ஒரு முஸ்லிமின் பொறுப்பு எத்தகையதென்று இப்போது விளங்கியிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதற்கான தீர்மானம் எடுப்பது உங்கள் பொறுப்பாகும். எங்கள் கடமையை நிறைவு செய்தோம்.

வஸ்ஸலாமுஅலைக்கும்

# முஸ்லிம் உலகம்: (கடந்த இதழ் தொடர்)

# சவால்களும் பரிகாரங்களும்!

- எஸ்.எம். மன்சூர் -

**கம்யூனிஸக் கெடுபிடிகள்**

இவை இப்படி இருக்கும்போது மறுபக்கம், 1917ல் ரஷ்யாவில் கம்யூனிசப் புரட்சி வெடிக்கிறது. ஸார் மன்னர்களின் வழி வந்த ஆட்சி அதனுடன் முடிவுற்று சம தர்மக் கொள்கை ஆட்சியில் அமர்கிறது. அதன் பின் அக்கம் பக்கத்து நாடுகளை கம்யூனிஸ ரஷ்யா ஆக்கிரமிக்கிறது. கஸாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ் தான், தாஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், அஸர்பைஜான், செச்னியா ஆகியன ரஷ்யா ஆக்கிரமித்த நாடுகளாகும். யூகோஸ்லா வியா ஆக்கிரமித்த நாடு பொஸ்னியா. இவைகளில் இஸ்லாமிய செயற்பாடுகள் பலவற்றுக்குத் தடை வந்தது; நாத்திகம் போதிக்கப்பட்டது. அதேபோன்று அல் பேனியாவும் முஸ்லிம் நாடொன்று. கம்யூனிஸ உறவில் வளர்ந்து வந்தது. இங்கெல்லாம் இஸ்லாத்திற்கெதிரான கெடு பிடிகள் ஏராளமாக இருந்தன. கம்யூனிஸம் வீழ்ந்ததோடு இவற்றுள்ளும் இஸ்லாத்தின் அலைகள் வெகுவாக வீசுகின்றன. பொஸ் னியாவிலும் செச்னியாவிலும் நடந்த நடக் கின்ற கொடுமைகள் சொல்லித்தரமன்று.

பலஸ்தீன், காஷ்மீர், பிலிப்பைன்ஸின் மிந்தனோவ் போன்றவற்றில் விடுதலைப் போராட்டங்கள் தொடர்கின்றன. இங்கு குறிப்பிடப்படாத ஏனைய நாடுகளும் மேற் கத்திய உலகின் ஏதோவொரு வகையிலான அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளன என்றுதான் குறிப்பிட வேண்டும்.

இவற்றுள் பல நாடுகளில் எதிர்ச் சக்திகளின் தொடரான தொந்தரவுகள் இருக்கும் அதேவேளை தமக்குள்ளும் ஆட்சி அதிகாரம் என்ற வகையில் போராட் டங்கள் இருக்கின்றமையையும் அவதா னிக்க முடிகிறது. உதாரணமாக பாகிஸ் தான், சூடான், லிபியா, ஈராக், ஆகிய வற்றில் ஆட்சியைப் பிடிக்கவென நடத்தப் பட்ட புரட்சிகளைக் குறிப்பிடலாம். ஈரான்-ஈராக் போர், ஈராக்-குவைத் போர் காரண மாக விளைந்த அனர்த்தங்கள் ஏராளம். ஈரான் ஒட்டுமொத்த முஸ்லிம் உலகுடன் ஒட்டியும் ஒட்டாமலும் நடந்து வருவது கவனிக்கத்தக்கது. காதியானி அமைப்பு முஸ்லிம்களின் மார்பில் எதிரிகள் தோற்று வித்த ஒரு குஃப்ரிய்யத். அதுவும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் இழி வையும் வேதனையையுமே கொண்டு வந்தது.

பொதுவாக முழு முஸ்லிம் உலகமும் அந்நியரின் தொந்தரவுகளுக்கு ஆளாகியும், தம்முள் தமது நாட்டு ஆட்சியாளர்களின் கெடுபிடிகள் காரணமாகவும் பல்வீனப் பட்டுள்ளதைக் காணலாம்.

**இஸ்லாமிய அமைப்புகள்**

இத்தகைய நிலை தோன்றிய ஆரம்பக் கட்டத்தில், இஸ்லாமிய சிந்தனையாளர்களும் மார்க்க மேதைகளும் தோற்றுவித்த இஸ்லாமிய அமைப்புக்கள் தம் பணியை மேற்கொண்டதைப் பார்க்க முடிகிறது. அவற்றுள் ஆரம்ப அமைப்புக்களாக துருக்கி யில் தோன்றிய 'அல்முஹம்மதிய்யா', எகிப்தில் தோன்றிய 'அல்இக்வானுல் முஸ்லிமூன்', இந்திய உபகண்டத்தில் தோன்றிய 'ஜமாஅதே இஸ்லாமி' என்பன முக்கியமானவை. இவற்றைத் தொடர்ந்து உலகின் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் இன்னும் எண்ணற்ற அமைப்புக்கள் உருவாயின.

இத்தகைய இயக்கங்களின் இடையறாத முயற்சிகள் மற்றும் பணிகள் இஸ்லாத்தின் பால் மக்கள் திரண்டு வரக் காரணமாயின. இஸ்லாம் ஓர் உலக சக்தி எனும் நிலைக்குக் கம்பீரமாக எழுந்து நின்றது. முஸ்லிம்கள் மட்டுமன்றி முஸ்லிம்களல்லாத நாடு களிலும் அது தனதாதிக்கத்தைப் பரவச் செய்ய ஆரம்பித்தது. இஸ்லாம் ஒரு வளரும் சக்தியாக உலக மக்களை ஆட்கொள்ள ஆரம்பித்ததன் விளைவு பாதையில் நடக்கும் நால்வரில் ஒருவர் முஸ்லிம் என்ற நிலையைத் தோற்றுவித்ததுதான்.

**ஒரு காலம் வரும்!**

அல்லாஹ் இஸ்லாத்தை ஒரு வளம் கொழிக்கும் சக்தியாக மீண்டும் கொண்டு வந்துவிட்டான். அதன் பயன்பாடுகள் மட்டும் தான் தீயவரின் போக்கைக் கட்டுப்படுத்த முடியும்; தீய பாவங்களை வேரறுத்து விட முடியும். ஆனால் இது சும்மா நடவாது. இஸ்லாத்தை தனது உயிராக ஏற்றவர்கள் அந்த வகையில் எடுத்துக் கொள்ளும் முயற்சியே வெற்றி தோல்வியை முடிவு செய்ய முடியும். மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) இந்நிலையை இப்படி விபரிக்கிறார்:

*"இஸ்லாத்தின் முன்பு தற்பொழுதுள்ள உண்மையான பிரச்சினை ஒழுக்க வீழ்ச்சி அன்று; தொழுகையில் அசிரத்தையாக இருப்பதன்று; மதக் கிரியைகளை புறக் கணிப்பதன்று. பிற இனத்தினரை கண் மூடித்தனமாக பின்பற்றுவதுமன்று. இவை முக்கியமான விடயங்கள் என்பதில் சந்தேக மேயில்லை. ஆனால் இஸ்லாத்தின் ஆணிவேரையே ஆட்டங்காணச் செய்யும் இமாலயப் பிரச்சினையாக உருவெடுத்திருப் பது மத நம்பிக்கைக்கும் மத நிராகரிப் புக்கும் இடையேயுள்ள போராட்டமாகும். இஸ்லாம் உலகில் தொடர்ந்தும் ஒரு சக்தியாக விளங்கப் போகிறதா? அன்றி, அதனை பழம் புடவை போன்று தூக்கி யெறியப்படப் போகிறதா என்பதாகும். இன்று இஸ்லாமிய உலகில் நிகழும் போராட்டம் இஸ்லாத்திற்கும் மேற்கத்திய லோகாயத வாதத்திற்கும் இடையே நிகழும் போராட்டமாகும். ஒரு பக்கம் இறை விசுவாசமற்ற நாத்திகவாதம்; மறுபக்கம் இறைவனின் சட்டம். மதத்திற்கும் மத விரோத சக்திகளுக்கும் இடையே நடைபெறும் இறுதிப் போராட்டமாக இது இருக்கும் என்றும், இதன் முடிவாக உலகம் முழுவதும் இதில் இரண்டில் ஒன்றின் பக்கம் பூரணமாகத் திரும்பிவிடும் என்றும் நான் நம்புகிறேன்"*

*(நூல் - காலத்தின் அறைகூவலும் முஸ்லிம்கள் பணியும் 1969, பக்.21)*

இன்று மேற்குலகம் மூன்று அம்சங்களை முன்னிறுத்தி இஸ்லாத்திற்கு எதிராக அணி திரண்டு நிற்கின்றது.

1. **இராணுவ ரீதியிலான தாக்குதல்கள் மற்றும் கெடுபிடிகள்.**
2. **சிந்தனை மற்றும் அறிவியல் ரீதியிலான மாற்றங்கள்.**

**3. உலகமயமாக்கல் (பொருளாதாரம் மற்றும் அவர்களது கலை, கலாசார, தீயொழுக்க ஏற்றுமதிகள்) மூலம் உலகாதிக்கத்தை தனது கைக்கு எடுத்துக் கொள்ளல்.**

இவை மூலம் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள், நாடு நாடாக பல்வேறு துறை சார்ந்த மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றன. எங்கோ ஒரு மூலையில் வெறுமனே குந்திக் கொண்டிருக்கும் ஒரு தனிமனிதன்கூட அவர்களது தாக்கத்திலிருந்து தப்பமுடியாது எனும் அளவுக்கு அவ்வளவு நுணுக்கமாக திட்டமிட்டு செயற்படுகிறார்கள். அது வெற்றிபெறுமாயின் உலகமே அமெரிக்காவின் தீமைகள் விதைக்கப்பட்ட பூமியாக மாறலாம்.

> எங்கோ ஒரு மூலையில் வெறுமெனே குந்திக் கொண்டிருக்கும் ஒரு தனிமனிதன்கூட அவர்களது தாக்கத்திலிருந்து தப்பமுடியாது எனும் அளவுக்கு அவ்வளவு நுணுக்கமாக திட்டமிட்டு செயற் படுகிறார்கள். அது வெற்றிபெறுமாயின் உலகமே அமெரிக்காவின் தீமைகள் விதைக்கப்பட்ட பூமியாக மாறலாம்.

### இஸ்லாம் ஒரு சக்தி

இதற்கு ஒரேயொரு மாற்றுச் சக்தியாகத் திகழ்வது இஸ்லாம் மட்டுமே! இந்த இரண்டும் பத்ர் களத்தில்போல் ஒன்றை ஒன்று எதிர்கொண்டு நிற்கின்றன. இஸ்லாம் வென்றால் உலகில் சத்தியம் நிலைக்கும். குஃப்ரிய்யத் வென்றால் உலகமே தீமை வயப்படலாம்.

இதனை இஸ்லாத்திற்கெதிரான ஒரு தாத்தாரியப் படையெடுப்பு எனவும் குறிப்பிடலாம். அன்றைய தாத்தாரியப் படையெடுப்பை வெல்வதற்கு எந்த இஸ்லாமிய உணர்வும் உழைப்பும் போராட்டத் தன்மையும் காரணமாக இருந்தனவோ அவை இன்று நமக்குத் தேவைப்படுகின்றன. அல்லாஹ்வின் கட்டளைகளைக் கவனியுங்கள்:

**“இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை (மார்க்கத்தை) இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்”**

**(அல்குர்ஆன்: 3:103)**

**“அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள். ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் உங்களிடையே பலவீனம் தோன்றிவிடும். மேலும், உங்கள் மதிப்பும் வலிமையும் அழிந்துவிடும்”** **(அல்குர்ஆன்: 9:36)**

**“எவ்வாறு இணைவைப்பாளர்கள் ஒன்றிணைந்து உங்களுடன் போரிடுகிறார்களோ அவ்வாறே நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து அவர்களுடன் போர் புரியுங்கள்”**

**(அல்குர்ஆன் : 9 :36)**

இக்குர்ஆன் வசனங்கள் யாவும் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து போரிடுவதையே வலியுறுத்துகின்றன. அவ்வாறு இல்லாவிடத்து ‘‘பலவீனம் வரும்; வலிமை குன்றிவிடும்” என எச்சரிக்கின்றன.

எனவே, இஸ்லாத்தின் வழியில் நாம் ஒன்றுபடுவது ஒரு மார்க்கக் கடமை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வரலாற்றை நோக்கும்பொழுது முஸ்லிம்கள் ஒரே கொள்கை, ஒரு தலைமை, ஒரே சமூக அமைப்பு என்று நம்பி செயற்பட்ட காலமெல்லாம் எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் உயர்ந்து காணப்பட்டார்கள்; உலகுக்கு வழிகாட்டும் உத்தமர்களாக மதிக்கப்பட்டார்கள். எப்பொழுது இந்த நிலை மாறி நின்றார்களோ அப்பொழுது அழிவையும் இழிவையும் சந்திக்கும் துரதிஷ்டத்திற்கு ஆளானார்கள்.

### இஸ்லாத்தின் வழிநின்று செயற்படுவோம்!

எமக்கு முன்மாதிரி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களை அடியொட்டி வாழ்ந்த சஹாபாக்களுமே. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னைச் சார்ந்த மக்களுக்கு இஸ்லாத்தையே கொள்கையாக வழங்கினார்கள்; தனது முன்மாதிரியையே ஏற்று வாழும்படி பணித்தார்கள். சஹாபாக்களிடம் இதற்கு எத்தகைய மறுப்பும் இருக்கவில்லை. அவர்கள் இஸ்லாத்தை கொள்கையாக ஏற்று வாழ்வதில் இம்மியளவும் விலகியிருக்கவில்லை ; நபிகளாரின் தலைமையை விடுத்து மற்றொரு தலைமையில் சுகம்காண விளையவும் இல்லை. இஸ்லாத்தைக் கூறுபோட்டு துண்டுதுண்டாக்கி, சிதைத்து பலவித போக்குகளை பின்பற்றவும் முற்படவில்லை.

மாறாக இஸ்லாத்தை மனித வாழ்வின் எல்லாத் துறைகளையும் மேம்படுத்தும் சக்தியாக நம்பி, எல்லாவித இன்னல்களையும் சகித்துக் கொண்டு அவர்கள் போராடினார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை வழங்கினான்; வளமும் நலமும் கொண்ட சமுதாயத்தினராக ஆக்கினான்; உலக மக்கள் அவர்களிடம் அபயம் தேடி வரும் நிலையைத் தோற்றுவித்தான்.

எனவே, நாமும் உலக ஆசையில் மூழ்கி பிழையான கொள்கை வழியில் போவதை விடுத்து இஸ்லாத்தை முழுமையாகப் பின்பற்றும் உணர்வுடன் செயற்பட முன்வரவேண்டும். இஸ்லாத்திற்கு முரணான தலைமைத்துவங்களை விடுத்து இஸ்லாத்தின் வழிசார்ந்த தலைமை ஏற்று வாழவும், பணிபுரியவும் தயாராக வேண்டும்.

இன்று மனித சமுதாயம் எதிர்கொண்டுள்ள பாவங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு இஸ்லாம் அன்றி இன்னொரு கொள்கையில் பரிகாரம் காணமுடியாது. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தி உழைக்கும் பொறுப்பு முஸ்லிம்களுக்கு உண்டு. இந்தப் பொறுப்பை மறந்து இஸ்லாம் அல்லாத பிற வழிகளில் சுகங்காண விழைவது ஒருபோதும் நன்மையைத் தராது. அல்குர்ஆன் , முஸ்லிம்களின் பொறுப்பை இவ்வாறு குறிப்பிடுகிறது:


**“மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயங்களில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நல்லதை ஏவுகிறீர்கள். தீயதைத் தடுக்கின்றீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமான) நம்பிக்கை கொள்கிறீர்கள்”**

**(அல்குர்ஆன் 3:110)**

முஸ்லிம்கள் இவைபற்றி நன்கு சிந்தித்து செயற்பட முன்வருவார்களாக. இதுவே மறுமையில் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தரும் ஒரே வழியாகும்.

Dr. ஆகில் அஹ்மத் MBBS (SL)

எமது புவிக்கிரகத்தின் முழுமையான சரிதவியல் ஏடுகள் (Primary History Book) எனக் கருதப்படுபவை கண்டத் திணிவுகளில் காணப்படுகின்ற பாறைகளாம். பளிங்குப் பாறை (Crystalline rock) களின் ஆக்கக் கூறுகள் மற்றும் அதன் கட்டமைப்பு, இன்னும் அடையற்பாறை (Sedimentary rock) களில் காணப்படக்கூடிய உயிர்ச்சுவடு (Fossil) வகைமை போன்றவற்றின் துணையுடன் புவிச்சரிதவியலானது இற்றைக்கு 600 மில்லியன் ஆண்டுகள், 600 மில்லியன் ஆண்டுகள் முதல் 2.5 பில்லியன் ஆண்டுகள், 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.




# நகருது! நகருது! நிலம் தினம் நகருது -2

வரலாற்றில் எம்மை அண்மிய 600 மில்லியன் ஆண்டுகளுக்குரிய வரலாற்றை ஆராயும் போது கண்ட நிலத்திணிவுகளில் துண்டாதல், நகர்தல், நெருங்கி ஒட்டுதல் போன்ற நுணுக்கமான நடத்தைகள் நிகழ்வது புலனாகிறது. இவை மொத்தமும் சேர்த்து 'கண்ட நகர்வு' எனப்படுகிறது.

கண்டநகர்வு கருத்தியலானது முதன் முதலில் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஜேர்மன் நாட்டு அறிவியலாளரான Alfred Wegener என்பவரால் முன்வைக்கப்பட்டது. தென் அமெரிக்காவின் கிழக்குக் கரையோரமும், ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமும் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிசையக் கூடிய தோற்ற அமைப்பைக் கொண்டிருப்பதனை அடிப்படையாகக் கொண்டு இவரது கருத்தியல் தாபிக்கப்பட்டது மட்டுமல்லாது தென் அத்திலாந்திக் சமுத்திரத்தின் இருமருங்கிலும் காணப்படக்கூடிய பாறைகளின் மற்றும் உயிர்ச்சுவடுகளின் ஒத்ததன்மை என்பன இவரது கருத்தியலுக்கு வலுசேர்த்தன.

கண்டநகர்வு எனும் நிகழ்வானது கண்ட நிலத் திணிவுகளைக் கொண்டிருக்கும் தட்டுக்களின் நகர்வினால் ஏற்படுகின்ற விளைவு என இன்று துணியப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்க நிலத்திணிவும், தென் அமெரிக்க நிலத்திணிவும் சுமார் 225 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் அருகருகே அமைந்திருந்தன. இக்கண்டங்களைச் சூழ்ந்திருந்த புவியோட்டுப் பகுதி உடைந்து இரு தட்டுக்களாகி விலகிச் சென்றபோது கண்டங்களும் இடம்நகர்ந்தன. புவியோட்டுப் பகுதியின் உடைவான தட்டுக்களின் விலகல் விளிம்பான Mid-Atlantic Ridge நெடுகிலும் ஏற்பட்டது. இத்தொழிற்பாட்டின் விளைவாக Mid-Atlantic Ridge இன் இரு பக்கமாகவும் சமுத்திரத்தாழிகள் தோற்றம் பெற்றன.

விலகுகின்ற இரு கண்டங்களினதும் ஒன்றையொன்று எதிர்த்த விளிம்புகள் நகர்தல் தொழிற்பாட்டினால் பாதிக்கப்பட்டு மாற்றத்திற்கு உள்ளாவதில்லை. இதனால் இவ்விளிம்புகள் Passive Margins எனப்படுகின்றன. தென் அமெரிக்காவின் மேற்குப்புற விளிம்பு கண்டநகர்வுத் தொழிற்பாட்டினால் தகைப்படைந்திருக்கிறது. இவ்வாறு தகைப்புறுகின்ற விளிம்புகள் Active Margins எனப்படுகின்றன. தென்னமெரிக்க மேற்கு எல்லையில் பசுபிக் சமுத்திரங்களின் தட்டுக்களில் ஒன்றான Nazca Plate உம் South American Plate உம் ஒன்றையொன்று நெருங்கி வருகின்றன. இதன்போது மெல்லிய சமுத்திரத் தட்டானது கீழ்நோக்கி வளைந்து தென்னமெரிக்காவின் கீழான பாகுப்படையினுள் அமிழ்ந்து விடுகிறது (Subduction). பெரும் நிலநடுக்கங்களும் எண்ணிக்கை மிக்க உறங்குகின்ற மற்றும் குமுறிக் கொண்டிருக்கும் எரிமலைகளும் இன்னும் Andean மலைத்தொடரும் இப் பகுதியில் காணப்படுவதானது தகைப்பினால் உண்டானவையாகும்.

கண்ட நிலத்திணிவுகளில்கூட உடைதல் நடைபெறுகிறது. உடைதல் செயற்பாட்டின் ஆரம்பப்படிகள் தற்காலத்தில் ஆபிரிக்க நிலத்திணிவின் கிழக்குப் பகுதியில் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. East African Rift System இன் நெடுகிலும் நடைபெறுகின்ற தொழிற்பாட்டின் விளைவாக இந்நிலப்பரப்பு அகன்று வருகிறது. பிளவுபட ஆரம்பித்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் செங்கடல் நெடுகிலும் ஏற்பட்ட உடைதலின் விளைவாக அரேபியத் தீபகற்பமானது ஆபிரிக்காவிலிருந்தும் விலகிச் சென்றிருக்கிறது.

ஒருங்கலின்போது கண்டத்தட்டின் கீழாக மடிந்து பாகுப்படையினுள்ளே அமிழ்ந்து போகின்ற சமுத்திரத்தட்டு ஒன்றானது தனது முதுகின் மேல் நிலத்திணிவொன்றைக் கொண்டிருக்கும் பட்சத்தில் நிலத்திணிவுக்கு என்னவாகும்? அடுத்த இதழ் வரை பொறுத்திருங்கள்!

# நம்மிடையே

# இளையவரைக் காவுகொள்ளும் வானொலி!?

கீழ்வானம் சிவந்திருக்கின்றது. உதயத்திற்கான அறிகுறி அது, ஸுபஹ் தொழுது, குர்ஆன் பாராயணம் செய்து உள்ளத்தை அன்றைய நாளுக்காய் தயாரிக்கும் அந்த இனிய பொழுதுகள்.... எம் போன்ற இளசுகள் இப்பொழுதின் பெறுமதி புரியாமல் வானொலி அலைவரிசைகளுடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காய் பிரயத்தனம் மேற்கொள்கின்றனர். அவ்வாறு தொடர்புகள் கிடைத்து வானொலி அறிவிப்பாளருடன் உரையாடி தமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வதில் அத்தனை ஆர்வம் அவர்களுக்கு! அதை ஒரு பாக்கியமாக கருதுவோர் எத்தனை பேர்! அப்பொழுது தொடங்கி அர்த்தஜாமம் வரை இது தொடர்கிறது. ஆனால் இவையெல்லாம் அங்கே நிலவுகின்ற யதார்த்தம் புரியாத தன்மையின் விளைவுகளே.

மனித சிந்தனையை வழிநடத்தும் அபார சக்தியைப் பெற்றிருக்கின்ற ஊடகங்களுள் (Media) இலத்திரனியல் ஊடகங்கள் மிகுந்த பங்கினைச் செலுத்துகின்றன. அதுவும் குறிப்பாக வானொலி அலைவரிசைகளைப் பொறுத்த வரைக்கும் அவற்றின் தாக்கம் இன்னும் அதிகமாகவே அமைந்துள்ளது. புரியக்கூடிய மொழியில் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்து தனக்குப் பின்னால் ஒரு பெரிய ரசிகர் கூட்டத்தினை தயார்செய்து அதனூடாக தமது விளம்பரங்களுக்கு களமமைத்து இலாபமீட்டுவதில் வானொலி அலைகள் போட்டாபோட்டியுடன் செயற்பட்டு வருகின்றன. அதற்குப் பின்னணியில் பல்தேசியக் கம்பனிகள் தமது முதலீடுகளை வழங்கி வருகின்றன. இதனால் அவர்களது உற்பத்திகளில் எவ்விதக் கேள்வியுமின்றி நகர்வதற்குரிய நுகர்வோர் சந்தை உருவாக்கப்படுகிறது.

இந்த நிலையில் எம்மவர்கள் குறித்த வானொலி அலைவரிசைகளையும் அதில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும் மெய்மறந்து ரசிக்கத் தொடங்கியது மட்டுமன்றி அறிவிப்பாளர்களையும் தெய்வமாக மதிக்கத் தொடங்கி விட்டனர். இதற்கிடையே ஒவ்வொரு வானொலி அலைவரிசையும் தமக்குத் தகுந்தாற்போல் போட்டி நிகழ்ச்சிகளையும் அறிமுகம் செய்து மக்களைக் கவர்ந்து கொண்டுள்ளனர்.

அது மட்டுமன்றி ஒலி அல்லது ஒளிபரப்பு நிறுவனங்களும் தமது கைவரிசையை தாராளமாக் காட்டத் தலைப்பட்டுவிட்டனர். குறுந் தொலைக்காட்சித் தொடர்களை பரிவர்த்தனை செய்வதனூடாகவும் நிகழ்ச்சிகளில் கவர்ச்சிகரமான பெண் பாடல்கள் பாடகர்களைப் பயன்படுத்தியும் அவை தயாரிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய நிகழ்ச்சிகளில் மதிமயங்கி அவையே சரியென அலையும் ஒரு பெரும்பகுதியினர். இன்று சமுதாயத்தில் வலம்வருகின்றனர். இதையும் ஒரு விதத்தில் போதை தரவல்லதாகவே கொள்ள வேண்டும்.

இன்றைய இளைய சமுதாயம் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவால்களுள் இப்பிரச்சினையும் உள்ளடங்குகிறது. இதனால் ஏற்படும் சிந்தனைத் தாக்கம் இளையவர்களை காவு கொண்டுள்ளது. இத்தகைய நிலையிலிருந்து மீண்டு கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு அவற்றிலிருந்து விலகிக் கொள்வதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் காலத்தின் தேவையாகும்.

கீழ்த்தரமான சிந்தனைகளையும் மோசமான கலாசாரங்களையும் மனங்களில் விதைத்திடும், உண்மைச் செய்திகளை உருமாற்றி உரைத்துவரும், இளைய தலைமுறையை பாவங்களின்பால் அழைப்பு விடுக்கும் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இருந்து நாம் எம்மை பாதுகாத்திட விரைவோமாக. அதே நேரத்தில் மாற்றீடாக இஸ்லாத்தினடிப்படையில் அமைந்த எமக்கென்ற வானொலி தொலைக்காட்சி பற்றியும் அவசர அவசியமாக சிந்திப்போமாக.

# களச் செய்திகள்

### கலபொட ஆற்றங்கரை முகாம்

உலப்பனை இம்இய்யா கிளையின் தர்பிய்யாப் பகுதி அதன் ஊழியர்களுக்கான ஆற்றங்கரை முகாமொன்றை கலபொட எனும் இடத்தில் அண்மையில் நடத்தியது. ஜம்இய்யாவின் உலப்பனைக் கிளைப் பொறுப்பாளர் ஸியாத் தலைமையில் இம்முகாம் நடத்தப்பட்டது.

### புதிய கிளைக்கான ஏற்பாடு

13.07.2002 சனிக்கிழமை காலை நிந்தவூரில் ஜம்இய்யாவின் புதிய கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

### இணை அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல்

கல்முனை உபபிராந்தியத்தில் இணை அங்கத்தவர்களுக்கான நிகழ்ச்சியொன்று 13.07.2002 சனிக்கிழமை ம.ஃரிப் முதல் அடுத்தநாள் நண்பகல் 12 மணிவரை நடைபெற்றது. இதில் ஜம்இய்யாவின் த.ஃவா தர்பிய்யா பொறுப்பாளர் அஷ்ஷெய்க் அஸ்மின் நளீமி கலந்து கொண்டார்.

### தலைமைத்துவ பயிற்சிநெறி

கிண்ணியா மத்திய கல்லூரியில் ஜம்இய்யாவின் அனுசரணையுடன் தலைமைத்துவ பயிற்சிநெறி நடைபெற்றது. நாஸிம் மக்பூல் ஜெனீபர், வட-கிழக்குப் பிராந்திய நாஸிம் ஸாஜஹான், அரபாத் அக்ரம் ஆகியோர் நிகழ்ச்சிகளை நடத்தினர்.

### விவசாயக் கல்லூரியில் ஜம்இய்யா நிகழ்ச்சி

ஜுன் மாத இறுதிப்பகுதியில் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் ஜம்இய்யா நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பொழுது இங்கு இரண்டு வாரங்களுக்கொரு முறை ஜம்இய்யா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### ஏழு நாள் பயிற்சி நெறியைத் தொடர்ந்து

இம்முறை நடைபெற்ற ஏழு நாள் பயிற்சிநெறியைத் தொடர்ந்து கிழக்கு, மேற்கு பிராந்தியங்களில் பின்கட்ட வேலைகள் பல நடந்தேறி விட்டன. மத்திய பிராந்தியத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### கஹட்டோவிட்ட செய்தி

கஹட்டோவிட்ட ஜம்இய்யா கிளையினால் ஆற்றங்கரை முகாமொன்று 22.07.2002 திங்கட்கிழமை நடைபெற்றது. திஹாரி, நாம்புளுவ, கள்எலிய, கஹட்டோவிட்ட, தும்மலதெனிய ஆகிய இடங்களைச் சேர்ந்த ஜம்இய்யா அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### மாவனல்லைச் செய்திகள்

மாவனல்லை ஜம்இய்யாக் கிளையினால் ஊழியர்களுக்கான முகாமொன்று போவல்ல ஆற்றங்கரைக்கருகாமையில் அமைக்கப்பட்டது. இதில் 40க்கும் அதிகமான ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஜுலை 23ம் திகதி காலை 9.00 மணிமுதல் 24ம் திகதி காலை 11.30 மணிவரை நடைபெற்ற இம்முகாமில் போட்டி நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் ‘முஜாஹிதுகளின் வரலாறு’ பற்றிய கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

மாவனல்லை ஜம்இய்யாக் கிளையினால் வளவ்வத்தையில் GYM ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

### Cassette Library

ஒலிப்பதிவு நாடாவகம் நீண்ட நாட்களாக இக்கிளையினால் இயக்கப்பட்டு வருகிறது. அண்மையில் புதுப்பொலிவுடன் புத்துயிர்பெற்று ‘பைத்துல் ஹிக்மா’ என்ற பெயரில் இயங்கி வருகிறது.

### WAMY யின் நான்கு நாள் பயிற்சிப் பாசறை

**WAMY** நிறுவனத்தால் பம்மன்னையில் நடத்தப்பட்ட தாஇகளுக்கான பயிற்சிப் பாசறையில் ஜம்இய்யா ஊழியர்கள் எட்டுப் பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சிநெறி 26.07.2002 வெள்ளிக்கிழமை முதல் 29.07.2002 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது.

தயாரிப்பு:
A.R.I. யாகூப்

# சிறுவர் பூங்கா

# ஒரு புனிதப் போராளியின் மரண சாசனம்!

பாசமிகு தந்தையே,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

நீங்கள் நன்றே வாழ அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். நானோ அவனது எதிரிகளை முகம் கொள்வதற்காக போர்க்களத்தின் மத்தியில் களம் அமைத்துக் கொண்டேன்''

**''நீங்கள் சொற்ப (மான போர்த் தளவாட)ங்களைக் கொண்டிருந்தாலும் சரி, நிறைய(ப் போர்த் தளவாடங்களைக்) கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் புறப்பட்டு உங்களது பொருட்களையும், உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிகவும் நல்லது.''** என இறைவன் தன் திருமறையில் ஒன்பதாவது அத்தியாயத்தின் நாற்பத்தியோராவது வசனத்தின் மூலம் எடுத்துக்கூறி நம்மீது சுமத்தும் கடமையும் அதுதான்.

வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் அப்பயணத்தில் குறைவே இருக்காது. இருந்தும் அந்த அல்லாஹ் உதவி புரிவான் என்ற உறுதிமிகு நம்பிக்கையில் அவனிடமே அதைத் தேடுகிறேன். மன உறுதியும் தைரியமும் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

எண்ணிக்கையும், படைபலமும் குறைந்திருந்த 'பத்ர்' போர்க்கள நிலவரத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றியை அளித்த அல்லாஹ் நிச்சயம் நமக்கும் அளிப்பான்.

பூகோள சுவர்க்கம் என புகழ்பெற்ற அந்த இஸ்லாமிய பெரு நிலப்பரப்பை, தன் அடாவடித்தனங்களாலும், அதிரடி நடவடிக்கைகளினாலும் நரகமாக மாற்றிவிட்ட அந்நரிகளை எதிர்த்துப் போராடி, வானலோக சுவர்க்கத்தை முன்னோக்கி நடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறான். ஜிஹாதிய வழியை விட்டு விடாதீர்கள்.

இஸ்லாமிய உடன்பிறப்புக்களே! நண்பர்களே! வாருங்கள் அநியாயத்தின் மொத்த வடிவங்கள் காஷ்மீரில் புரிந்துவிட்ட, புரிந்துகொண்டிருக்கின்ற அநியாயத்தைப் பாருங்கள்.

அவர்களது காமப் பசிக்கு தீனியாகும் உங்கள் சகோதரிகளை காப்பாற்ற என்ன செய்வதாக உத்தேசம்? இஸ்லாத்தின் எதிரிகளை விரட்டியடிக்க முடியாது திணறுவது ஏன்? இந்த இரு வினாக்களை இந்த இறுதி சாஸனம் (வஸியத்) மூலம் உங்கள் முன் விடுக்க விரும்புகிறேன்.

வெறும் தாளில் எழுதப்பட்ட இந்த இறுதி சாஸனம் (வஸிய்யத்) உங்கள் கரங்கள் தழுவுமுன், சிலவேளை நான் வீரமரணம் (ஷஹாதத்) அடைந்திருக்கலாம். அப்படியாயின் இறைவனுக்கு நன்றி செலுத்தி, எனக்காகப் பிரார்த்தியுங்கள்.

புனிதப்போரை (ஜிஹாதை) வழிநடாத்துகின்ற தலைமைகளே! உங்களிடம் ஒரு வேண்டுதல். வீரமரணம் (ஷஹாதத்) என்ற மகுடத்தில் மாநாடு ஒன்று நடாத்துங்கள். புனிதப் போருக்காய் மக்களைத் தூண்டுங்கள்.

என் அன்புத் தந்தையிடம் ஒரு வேண்டுதல். எனக்காக தொழப்படும்போது அஷ்ஷெய்க் ஷிஹாபுத்தீன் அவர்களை அல்லது அஷ்ஷெய்க் ஜெமீலுர் ரஹ்மான் அவர்களை இமாமத் செய்ய அனுமதியுங்கள்.

வயதான என் தாயாருக்கு பணிவிடை செய்ய முடியாமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

உறவினர்களே!

உங்கள் மகன் அல்லாஹ்வுடைய பாதையில் புறப்பட்டு விட்டான். அவனது வீரமரணத்திற்காகவும் அவன் வாழ்வுக்காகவும் பிரார்த்தியுங்கள், என் தாயாருக்கு எடுத்துச் சொல்லி ஆறுதல் கூறுங்கள். வாருங்கள், அனைவரும் இணையுங்கள் புனிதப் போரின்' அணியில் சேருங்கள். முன் சென்ற ஷுஹதாக்கள் கொட்டிய செந்நீர் வீண் போகாது பார்த்துக் கொள்ளுங்கள்.

**நுவைத் அ.்.வான்**

**ஸியாஹதுல் உம்மாஹ் - 52**

**தமிழில் : அகத்தி முறிப்பான்**

## படைப்பினங்களில் அல்லாஹ்வின் விந்தை

குளங்களிலும் குட்டைகளிலும் வசிக்கும் முதலை ஏதாவது பிராணியைப் பிடித்து இரையாக்கிக் கொள்ளும்போது அதன் பற்களின் இடுக்கில் இறைச்சித் துண்டுகள் சிக்கி அதற்கு தொந்தரவைக் கொடுக்கும். அப்போது முதலை கரைக்கு வந்து தன் வாயை 'ஆ....' வெனத் திறந்து கொண்டு ஒரு பட்சிக்காகக் காத்திருக்கும். முதலை குளக்கரையில் வாயைத் திறந்து கொண்டு நிற்பதை இப்பட்சி பார்த்து விட்டால் போதும். பறந்து வந்து அதன் வாயில் அமர்ந்து தன் அலகினால் முதலையின் பல் இடுக்கில் உள்ள இறைச்சித் துண்டுகளை கொத்திச் சாப்பிட ஆரம்பிக்கும். அனைத்து இறைச்சித் துண்டுகளையும் அப்பட்சி உண்டுவிட்டதை உணரும் முதலை பட்சியை இரையாக்கும் நோக்கில் வாயை வேகமாக மூடிக் கொள்ளும். பட்சி முதலையின் வாயில் அகப்பட்டு விடுமா? அதுதான் இல்லை! பட்சியின் தலையில் சற்று நீண்ட ஒரு கூரிய முனை இருக்கிறது. முதலை வாயை மூடிக் கொண்டதும் அம்முனை அதன் வாயில் குத்தி விடும். வேதனையில் முதலை மீண்டும் வாயைத் திறக்கும்போது பட்சி மெதுவாகப் பறந்து விடும்.

ஸுப்ஹானல்லாஹ்! பாருங்கள் அல்லாஹ்வின் இந்த ஏற்பாடு எவ்வளவு விந்தையானது?

அப்பட்சி இல்லையெனின் முதலை பல்லிடுக்கில் சிக்கிய இறைச்சித் துண்டுகளோடு தொடர்ந்து வேதனைப்பட்டிருக்கும். பல் இடுக்கில இறைச்சித் துண்டுகள் சிக்காமலிருந்தால் பட்சிக்கு உணவில்லாமல் போயிருக்கும். பட்சியின் தலையில் கூர்முனை இல்லாதிருந்தால் முதல் தடவையோடு பட்சி முதலைக்கு இரையாகியிருக்கும். அல்லாஹ் மிகுந்த ஞானமுடையவன்.

# சிறுவர் பூங்கா

## குறுக்கெழுத்துப் போட்டி -24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 | ■ | ■ | ■ | 13 |
| 14 | ■ | 15 | ■ | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | ■ |
| 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | ■ |
| 34 | 35 | ■ | ■ | 36 | 37 | 38 | ■ |
| 39 | 40 | 41 | 42 | ■ | 43 | 44 | ■ |
| 45 | 46 | ■ | 47 | 48 | 49 | ■ | ■ |

### இடமிருந்து வலம்

1. பலஸ்தீன விவகாரங்களை தாங்கிவந்த அல்ஹஸனாத் வெளியீடு.
10. முஸ்லிம்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும் என முஸ்லிம் அறிஞர்களால் கூறப்பட்ட ஒரு யூத உற்பத்திப் பானம்.
16. பிரபல ஆறு ஹதீஸ் கிரந்தங்களில் இரண்டாவதாகக் கருதப்படுவது.
21. ஸூரதுத் தௌபாவை அடுத்து வருவது.
29. புனிதப் போர் (மாறி)
40. துருக்கியில் அர்பகான் அவர்களின் கட்சி.
47. விலையுயர்ந்த கற்களில் ஒரு வகை.

## குறுக்கெழுத்துப் போட்டி 23 விடைகள்

### இடமிருந்து வலம்

1. தவர்ருக் 6. இங்கிலாந்து 14. பிரான்ஸ் 19. யாசீன் 23. அபஸ 31. உள்ளீடு 37. ஆஸாத் கஷ்மீர்

### மேலிருந்து கீழ்

1. தகிய்யா ஸைபி 12. கஸ்வினி 18. பைஅத் 20. சீனா 27. கொள்ஹார்

**கடந்த அல்ஹஸனாத் இதழை வாசிப்பதினூடாக இலகுவாக கட்டங்களை நிரப்புங்கள்.**

### மேலிருந்து கீழ்

3. நூஹ் நபியுடன் தொடர்புபட்ட வாகனம்.
8. 'கீபத்' என்ற அரபுப் பதத்தின் பொருள்.
9. 'அவிசென்னா' என அழைக்கப்படும் ஒரு முஸ்லிம் மருத்துவ மேதை.
16. அரபு அகராதிகளில் ஒன்று.
26. உதைப்பந்தாட்டத்தில் பிரான்ஸைத் தோற்கடித்த முஸ்லிம் நாடு. (மாறி)
32. கிறிஸ்தவர்களின் மதச் சின்னம்.
35. குர்ஆனின் ஒரு ஸூரா
42. தோட்டாவுக்கு மறுபெயர்

**நீ நேசிக்கும் உனது நண்பனை அளவாக நேசி. ஏனெனில் ஒரு நாளில் அவன் உன் எதிரியாகக் கூடும். அதேபோல் நீ எதிர்க்கும் உனது எதிரியையும் அளவாக எதிர். ஒரு நாளில் அவனும் உனது நண்பனாகக் கூடும்.**

**"நீ மடையர்களை புறக்கணித்து விடு. ஏனெனில் அவன் கூடாது என்று சொல்லும் அனைத்தும் அவனிடமே அதிகம் இருக்கும்"**

**- இமாம் ஷாபிஈ (ரஹ்) -**

## பாராட்டுக்கள்!

**குறுக்கெழுத்துப் போட்டி - 23**

முதற் பரிசான கிறாஅத் ஒலிப்பதிவு நாடாவை பரிசாகப் பெறுபவர்:

செல்வி. ஷஹானா பவ்ஸ்
தரம் - 7B
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி,
கள் எலிய

**தயாரிப்பு**
**மதனி உவைஸ்**

## வாசகர் முறையீடு:

**எமது பணத்தைக் கொண்டு எமக்கான ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் நாளாந்தம் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் வந்துகொண்டிருக்கும் சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இருக்கும்.**

# பத்திரிகைகளைப் பகிஷ்கரித்து விட்டால்

# எமது பிரச்சினை தீர்ந்துவிடுமா?

கடந்த அல்ஹஸனாத் இதழில் கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்த வன்முறைகள் பற்றிய செய்திகளை பொறுப்பற்ற முறையில் வெளியிட்ட தமிழ்ப் பத்திரிகைகளை பகிஷ்கரிக்குமாறு ஒரு வாசகர் கோரியிருந்தார்.

உண்மைதான்! அவ்வாசகருக்கு வந்த ஆத்திரத்தில் அவ்வாறு கோருவதைத் தவிர வேறு மாற்று வழிகள் இருந்திருக்காது.

எமது நாட்டில் தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி ஆகிய நான்கு தினசரி தமிழ் பத்திரிகைகள் உள்ளன.

இந்த நான்கு பத்திரிகைகளும் எமக்குரியவை அல்ல. தேசிய பத்திரிகைகள் என்ற பெயர் கொண்ட இந்நான்கு தினசரித் தமிழ் பத்திரிகைகளதும் உரிமையாளர்கள் தமிழ் சமூகத்தவர்களே. தினகரன் மத்திரமே அரச பத்திரிகையாக லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இருந்து வெளியாகினாலும் அதிலும் அதே நிலைதான்.

இப்பத்திரிகைகளின் உரிமையாளர்களிடம் ஒரு கொள்கை (Policy) இருக்கிறது. அந்த பத்திரிகைகளை சார்ந்த தமிழ்ச் சமூகத்தின் நசுக்கப்படும் உரிமைகளுக்காக குரல் எழுப்புவதும், அவர்களுக்கு ஏனைய சமூகத்தவர்களாலும், ஆட்சியாளர்களாலும் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்புவதும் நீதிபெற்றுக் கொடுப்பதுமே அந்த கொள்கை. அந்த முகாமைத்துவக் கொள்கைக்கிணங்க (Management Policy) அவை வெளியிடும் செய்திகள், தகவல்கள், கட்டுரைகள், மற்றும் விடயங்கள் அமைகின்றன.

இப்பத்திரிகைகளின் மேற்படி முகாமைத்துவக் கொள்கை காரணமாகவும் அவற்றின் போக்கு காரணமாகவும் அவற்றை நாம் தேசிய பத்திரிகை என்று அழைத்தாலும் யதார்த்தத்திற்கும் பத்திரிகை தர்மத்திற்கும் இணங்க தேசிய பத்திரிகை என்று வரையறுக்க முடியாதிருக்கிறது. இதே போன்றுதான் ஏனைய ஆங்கில, சிங்கள தினசரிப் பத்திரிகைகளும்.

தேசிய பத்திரிகை என்றால் பாரபட்சமற்ற முறையில், சமமான முறையில் எல்லா இனத்தவர்களதும் கருத்துகளுக்கும், அபிலாசைகளுக்கும், வாய்ப்பு வழங்கக் கூடியவையாக இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை. இதற்குக் காரணம் அவற்றின் முகாமைத்துவம், முதலீடு, நிர்வாகம் என்பன முழுமையாக சிங்கள, தமிழ் சமூகங்களைச் சார்ந்திருப்பதாகும்.

இந்நிலையில் வீரகேசரி, தினகரன், தினக்குரல் ஆகியவற்றில் எம் சமூகத்திற்காக தம்மை அர்ப்பணித்த மூன்று சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் ஆசிரியர் பீடத்திலிருந்து செயற்பட்டு வருகின்றனர். இப்பத்திரிகைகளில் அவர்கள் நெருப்புத் தணலில் நின்று கொண்டிருப்பது போன்றுதான் கடமையாற்றி வருகின்றனர். அவர்கள் அப்பத்திரிகைகள் வாயிலாக எமது சமூகத்துக்கு ஆற்றும் பணிகள் பாராட்டத்தக்கவை.

முழுமையாக தமிழ் சமூகத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இப்பத்திரிகைகளில் முஸ்லிம்கள் தொடர்பாக ஏதாவது வெளிவருவதென்றால் அது இவர்களின் முயற்சியே. முன்பைவிட அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் தொடர்பாக இப்பத்திரிகைகள் காட்டும் ஈடுபாடு அதிகமாகும். இது அடுத்த வீட்டு விளக்கில் நாம் வெளிச்சம் பார்ப்பது போன்றதே. இவ்வாறான நிலையில்கூட அப்பத்திரிகைகளைத்தான் முஸ்லிம்களும் ஏதாவது செய்திகளுக்காகவும் தகவல்களுக்காகவும் நாட வேண்டியிருக்கிறது.

மாவனல்லை வன்முறைகளின்போது இப்பத்திரிகைகள் முழுமையாக முஸ்லிம்களின் பக்கத்திற்காக குரல் எழுப்பியதையும் ஆசிரியர் கருத்துக்கள் எழுதியதையும் நாம் மறந்துவிட முடியாது. அப்படியிருக்க கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற வன்முறைகளின் போது உடனடியாக எமது பக்கத்தை எடுத்து தூக்கிப்பிடித்து முற்றாக வன்முறையைப் புரிந்தவர்கள் முஸ்லிம்கள் அல்ல, தமிழர்களே என்று எழுதியிருந்தால் நாம் திருப்திப்பட்டிருப்போம்.


இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் போது பத்திரிகைகள் வாயிலாக வரும் சவால்களை ஏற்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். அதற்காக பத்திரிகைகளை வாங்க வேண்டாம், பகிஷ்கரித்து விடுங்கள் என்று வாசகர்களைக் கோருவது எந்த விதத்திலும் புத்திசாலித்தனமல்ல.

இன்று ஊடகத்துறையில் எமக்கென்று எமது சமூகத்தவர்களால் வழிநடத்தும் ஏதாவது பத்திரிகை ஒன்று இருக்கிறதா? ‘நவமணி’ வாரம் ஒரு முறை வெளியாகினாலும் அதனை தேசிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பத்திரிகையாக கருத முடியாது.

பிறரின் விளக்கில் எமக்கு குளிர்காயத் தரவில்லை என்பதற்காக அவர்களுக்கு எதிராக கோஷம் எழுப்புவதை விட்டுவிட்டு எமக்கென்று ஒரு தினசரிப் பத்திரிகையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். எம்மில் எத்தனையோ கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சமூக சிந்தனை அற்றவர்களாக உறங்குகிறார்கள். அவர்களைத் தட்டி எழுப்ப வேண்டும். எமது பணத்தைக் கொண்டு எமக்கென ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் நாளாந்தம் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் வந்துகொண்டிருக்கும் சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இருக்கும். அதைவிட்டு பத்திரிகைகளை படிக்க வேண்டாம், வாங்க வேண்டாம் என்று சமூகத்தை மேலும் இருளில் தள்ளக் கூடாது.

பத்திரிகைகள் எமக்கு விரும்பாத முறையில் தகவல்களை வெளியிட்டால் அவற்றுக்கு எதிராக எமது அதிருப்தியை வெளிப்படுத்தும் பலவழிகள் உள்ளன. அந்த வழிகள் பற்றி யோசிக்க வேண்டும். அதைவிட முக்கியமானதுதான் எமக்கென்று ஒரு பத்திரிகையாவது ஆரம்பிப்பதற்கு எமது செல்வந்தர்களை அணிதிரட்ட வேண்டும் என்பது.

**எம்.ஸத்தாத் - கொழும்பு**



*பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி அமீர் காஸி ஹுஸைன் அஹ்மத் அவர்கள் அண்மையில் அமெரிக்க ஸ்தானிகரைச் சந்தித்து, அமெரிக்க அதிபதிக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதன் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.*

# அமெரிக்கா உணர வேண்டும்!

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அவர்களே!

செப்டம்பர் 11ம் திகதி உலகை உலுக்கிய ஒரு கறுப்புத் தினமாகும். அன்று இடம்பெற்ற அசம்பாவித நிகழ்ச்சி கண்டு முஸ்லிம்களும் மனம்பதைத்து, காரியத்தைக் கண்டித்து, செய்தவர்களை தண்டிக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டனர். அவ் உலக இழப்பு கண்டு நாமும் துயருற்றோம்.

1. பயங்கரவாதத்தையும், உரிமையின்றி கொன்று குவிப்பதையும் உறுதியாகக் கண்டிக்கும் அதேவேளை அந்நிகழ்வுக்கான பழிவாங்கலும், பதிலடியும் அவசரப்பட்டு நிகழ்த்தப்படக் கூடாது என நூற்றுக்கு மேற்பட்ட உலக இஸ்லாமிய இயக்கங்களின் தலைவர்கள் அவ்வேளை அறிக்கைகள் மூலம் எச்சரித்தனர்.

2. அதன்பின் நிகழ்ந்தவை, அமெரிக்கா இஸ்லாத்திற்கெதிராக போர்ப்பிரகடனத்தையே தெரிவுசெய்துள்ளது என்பதை உறுதிப்படுத்தின. உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்கா உலக விவகாரங்களில் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கும் அதேவேளை அது நீதி, நியாயத்தைத் தூக்கிப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் நாகரிக உலகென்றும், காட்டுமிராண்டி நாடுகள் எனவும் உலகை இரண்டாக வகுத்து பலவீனமான நாடுகளை மிரட்டிப் பணியவைப்பது பாஸிஸத்தின் அறிகுறியாகவே தென்படுகிறது. அமெரிக்கா இதைத் தவிர்த்திருக்க வேண்டும்.

3. நாம் தோழமையிலும், கூட்டு முயற்சியிலும், கலந்துரையாடலிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம். பரஸ்பர மதிப்பும், புரிந்துணர்வும் இதற்குத் தேவைப்படுகின்றன. உலகில் பலதரப்பட்ட கலாசாரங்களும், பண்பாடுகளும் இருப்பது மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். ஒருதலைப்பட்ச இலாபமும், மற்றையோரின் நலன்களை முற்றாக புறக்கணிப்பதும், பயமுறுத்தல்களையும், அழுத்தங்களையும் பிரயோகிப்பதும் கொள்கையாக மாறுமானால், அது தோல்வியடைவதோடு பதிலடியையும் வேண்டி நிற்கும்.

4. எவ்வித மனிதஉரிமைகளுக்கும், ஜனநாயகத்துக்கும் மதிப்பளிக்காத கைபொம்மை ஆட்சியாளர்களை அமெரிக்கா தொடர்ந்தும் திணித்து வருமானால் உறுதியான உறவை அது எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உதாரணமாக,

- ''பயங்கரவாதத்திற்கெதிராகப் பாகிஸ்தான வெற்றியளிக்கக்கூடிய யுத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் தேவை. எனவே பாகிஸ்தான் அதிபர் முஷர்ரப் பதவியில் நிலைத்திருப்பது முழுமுதல் தேவையாகும்."
(World & I, May 2nd)
- ஆப்கானிஸ்தானின் 'லோயா ஜிர்கா' வின் (ஆட்சிமன்றம்) அங்கத்தவர்களை அமெரிக்க நிர்வாகமே தேர்ந்தெடுத்தது. அவர்களைக்கூட சுயமே இயங்கவிடாது ரப்பர் முத்திரையாகப் பயன்படுத்துகிறது.
- யாஸிர் அரபாத்தும் அவரது பலஸ்தீன அதிகார சபையும் அமெரிக்க- இஸ்ரேலிய நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்வதில் அயராது உழைத்தனர். எனினும் சிறு எதிர்ப்பொன்றைக் காட்டியமைக்காக அந்த அப்பாவியும் ஒதுக்கப்பட்டுவிட்டார்.
- பாகிஸ்தானும் கூட்டுப்படையுடன் இணைக்கப்பட்டது. எனினும் அவ்வப்போது இந்தியாவுக்குத் தலைவணங்க அது நிர்ப்பந்திக்கப்படுகிறது. இவை அனைத்தும் உலகின் குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் ஜனநாயகத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும், நியாயப் போக்கையும் அமுல்படுத்த அமெரிக்கா உண்மையில் விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றன.

5. முஸ்லிம் உலகின் போராட்டப் பிராந்தியங்களான பலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், காஷ்மீர் ஆகியவற்றில் அமெரிக்காவின் பங்களிப்பு நீதியின் அடிப்படையிலான ஒன்றாகக் காட்சிதரவில்லை. அமெரிக்கா இங்கெல்லாம் வேண்டுமென்றே தன் திட்டங்களை அமுல்படுத்துவதாகவும், 'நவீன சிலுவை யுத்தம்' எனும் ஒருதலைப்பட்ச போராட்டத்தைத் தொடர்ந்தும் விஸ்தரித்து வருவதாகவுமே மனப்பதிவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான மோசமாகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் உலக சமாதானத்தையும், இணக்கத்தையும் அடைவதற்காக எடுக்கப்படும் கடும் முயற்சிகளைப் பாழ்படுத்திவிடுமோ என அஞ்சுகிறோம்.

6. ஏனைய எரிச்சலூட்டக்கூடிய கலாசார விடயங்களுக்குள் செல்ல நாம் விரும்பவில்லை. அண்மையில் நடந்து முடிந்த ஓரிரு விடயங்கள் பற்றியே குறிப்பிட்டுள்ளோம். நாம் கூற வருவதெல்லாம், வாருங்கள் நாம் இணைந்து எல்லோருக்கும் அமைதியை அளிக்கக்கூடிய உலகை உருவாக்குவோம் என்றுதான். அமெரிக்க - பாகிஸ்தான், அமெரிக்க-முஸ்லிம் உறவுக்கான உறுதியான அத்திபாரம் இடுவதற்கான உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பரஸ்பர நம்பிக்கையும், நன்மதிப்பும் மீண்டும் ஸ்தாபிதமானால், நீதியும், நியாயமும் ஏற்படுத்தப்படுமானால், அரசியல், பொருளாதார உறவுகளில் இருபக்க ஒத்துழைப்பு நல்கப்படுமானால் நம்மிரு

நாடுகளுக்கு இடையிலும், பொதுவாக மனித சமூகத்துக்கும் நிரந்தர நட்பும், நன்மையும் ஏற்பட இடமுண்டு.

இதற்கான முன்னெடுப்புக்களை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் பற்றிய சார்புக் கொள்கையை அது முன்வைக்க வேண்டும். அழிவின் தூதுவர்கள் (அமெரிக்க) நிர்வாக இயந்திரத்தைத் தவறான வழியில் இட்டுச் செல்லாதிருக்கட்டும்.

''ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் பங்களிப்பு மேலதிகமாகவே வழங்கப்பட்டுவிட்டது. எனவே அது நிறுத்தப்படல் வேண்டும்'' என்ற கூற்றை அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் ஏற்றுக் கொண்டதாக மிக அண்மையில் வெளிவந்த செய்தியை நாம் வரவேற்கிறோம். கண்மூடித்தனமான அமெரிக்க குண்டுவீச்சுக்கும், அப்பாவி மக்களை கொன்று குவிப்பதற்கும் எதிராக உள்நாட்டில் கிளம்பக்கூடிய எதிரலையைத் திசைதிருப்ப இந்தக் கூற்று முதல் படியாக இருக்கட்டும்.

அழிவுற்றுள்ள ஆப்கான் நாட்டின் அரசியல், பொருளாதார மீட்புக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். அமெரிக்காவின் இந்த சமாதான முன்னெடுப்பும், மீளமைப்பும் எவ்வளவு சாதகமாக அமைகிறதோ அந்தளவு இப்பிராந்திய, தேசிய நிலைமைகள் உறுதியடையும். பலஸ்தீனிலும், காஷ்மீரிலும் அமெரிக்காவின் நிலைப்பாடு சாதகமாக மாறினால் நிலை சீர்ப்பட்டு சமாதானத்திற்கும், ஸ்திரத்தன்மைக்குமான வழிமுறையை சுலபமாக்கும்.''பயங்கரவாதத்திற்கெதிரான போர் திசைதிருப்பப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிரான போராகத் தொடரக் கூடாது'' என பிரித்தானிய MP க்கள் அண்மையில் தெரிவித்த கூற்றுக்கு அமெரிக்கா செவிமடுத்தல் வேண்டும்.


உங்கள் குடும்ப இதழின்

- வாசகர் ஆகுங்கள்
- சந்தாதாரர் ஆகுங்கள்
- பிறருக்கு அறிமுகம் செய்யுங்கள்
- அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்


# சிந்திக்க வைத்த சந்திப்புக்கள்

## நல்லவர்களின் வழிமுறையில் என்றுமே மூன்று வழிகள்

சொந்தக்காரத் திருமண வீடொன்றுக்கு போயிருந்தேன். சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்தேன். அங்கே அந்தந்தக் கூட்டத்தினர் அவரவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். வியாபாரிகள் வியாபாரிகளுடன், ஆசிரியர்கள் ஆசிரியர்களுடன், மௌலவிமார்கள் மௌலவிமார்களுடன்... நானும் எனக்குப் பொருத்தமாக யாராவது இருக்கிறார்களா என்று நோட்டமிட்டுப் பார்த்தபோது கொஞ்சம் தூரத்தில் இரண்டு பேர் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு மெதுவாக அந்த இடம் நோக்கி நகர்ந்தேன்.

என்னை அவர்கள் கண்டதும் அருகில் அழைத்துக் கொண்டு அவர்களுடைய உரையாடலைத் தொடர்ந்தார்கள். அதில் ஒரு நபர் மற்றவருக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார் என்பது விளங்கியது.

அவருடைய பெயரைச் சொல்லி விளித்து, விட்ட இடத்தில் இருந்து தொடங்கினார்.

''உங்களுக்குத் தெரியுமா?
நல்லவருக்கும் நல்லவருக்கும் மூன்று வழிகள்
நல்லவருக்கும் கெட்டவனுக்கும் இரண்டு வழிகள்
கெட்டவனுக்கும் கெட்டவனுக்கும் ஒருவழிதான்'' என்று நிறுத்தினார்.

எங்கள் இரண்டு பேருக்கும் ஒன்றும் புரியவில்லை. திருதிரு என்று விழித்தோம். அப்போது அவர் அதற்கு விளக்கம் தந்தார்.

''நல்லவரும் நல்லவரும் எதிரெதிராக வரும்போது இரண்டுபேரும் ஒருவருக்கு மற்றவர் வழிவிட்டு பாதையின் இரு ஓரங்களாலும்தான் செல்வார்கள். அதனால் நடுவிலும் ஒரு வழியிருக்கும் ஆகவே மூன்று வழிகள்.''

''நல்லவரும் கெட்டவனும் எதிரெதிரே வரும்போது கெட்டவன் உடலில் அல்லது தோளில் முட்டும்படிதான் வருவான். நல்லவர் ஒதுங்கிச் செல்வார். ஆகவே இரண்டு வழிகள்''

''கெட்டவனும் கெட்டவனும் எதிரெதிரே வரும்போது இரண்டுபேரும் ஒருவரையொருவர் முட்டிமோதித்தான் வருவார்கள். ஆகவே அவர்களுக்கு ஒருவழிதான் இருக்கும்'' என்று சொல்லி முடித்தார்.

அதன் பிறகுதான் எனக்கு விளங்கியது ஏன் அதை அவர் கூறினார் என்று. அருகில் இருந்த மற்றவர் புதிதாக ஒரு கடை போடுவதற்கு அவருடைய காணியூடாகத்தான் அந்தப் பாதை செல்லவேண்டும். அதற்கு இடம்கொடுக்காமல் தடையாக இருந்தார். அதற்கு செய்த உபதேசம்தான் அது.

''அத்தோடு நாங்கள் நல்லவர்களாக இருந்தால் எங்களுடன் எல்லோரும் நன்றாகத்தான் இருப்பார்கள்'' என்று நான் என் பங்கிற்குக் கூறினேன். ''உபதேசம் பயனளிக்கும்'' என்ற அல்குர்ஆன் வசனம் நடைமுறைப்படுத்தப் பட்டதை அறிந்து மிகவும் சந்தோஷம் அடைந்தேன்.

ஏனென்றால் அந்தப் பாதைக்கு தடைபோட்டவர் தாராள மனதோடு தடையை நீக்கியிருந்ததை அறிந்தேன்.

அல்ஹம்துலில்லாஹ். இப்படியான உள்ளங்களை அல்லாஹ் எதிர்பார்க்கிறான். தயாராகுவோமாக!

– இப்னு யூஸுப் –

**கேள்வி - பதில் :**

# பகுத்தறிவின் எல்லை எது?

**கேள்வி :**

**எய்ட்ஸ் போன்ற ஆபத்தான நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சர்வதேச மாநாடுகள் நடத்திக் கொண்டிருக்கும் மேற்கத்தியவாதிகள் ஒழுக்கச் சரிவின் பாதிப்புகளை ஏன் உணராதிருக்கிறார்கள்?**

சிராஜ் முஹம்மத்- புத்தளம்

**பதில் :**

மேற்கத்தேயவாதிகளுக்கு மட்டுமல்ல, மேற்கத்தேய சிந்தனை கொண்ட கீழைத் தேயவாதிகளுக்கும் இந்தக் கேள்வி பயனுள்ளதாக இருக்கலாம் என்ற நோக்கில் விடை எழுத முயற்சிக்கிறேன், இன்ஷா அல்லாஹ்.

இன்றைய உலகில் மேலைத்தேயர் அனைத்து அறிவியல், தொழில்நுட்பத் துறைகளிலும் முன்னணி வகிக்கிறார்கள். எனவே உலகின் முன்னணி மனிதர்களாக வும் அவர்கள் தங்களை நிலைப்படுத்தி யிருக்கிறார்கள். முன்னணியில் இருப்பவர் களைப் பின்பற்றும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருவதால் கீழைத்தேய வாதிகளில் பலர் மேலைத்தேய சிந்தனை களால் கவரப்படுதல் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது.

கேள்வி கேட்கும் நாமும் கீழைத்தேயர் என்பதால் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

மேலைத்தேயர் ஒப்பீட்டளவில் அறிவியல தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சநிலைக் குச் சென்றிருக்கிறார்கள் என்பதை காய்தல உவத்தலின்றி முதலில் அங்கீகரிப்போம். அவர்கள் கண்டிருக்கும் அறிவியல் தொழில நுட்ப வளர்ச்சி மனித இனத்துக்கு எண்ணற்ற நன்மைகளை (வாழ்க்கை வசதிகளை)த் தந்திருக்கிறது என்பதையும் நன்றியுடன் நினைவு கூருவோம். மட்டுமல்ல, இந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அத்திபாரம் மனிதனின் பகுத்தறிவுதான் என்ற வகையில் அதனையும் கண்ணியப் படுத்துவோம். அனைத்துக்கும் பின் ஓர் உண்மையையும் அவர்களுக்கு எடுத்துக் கூறுவோம். அந்த உண்மைதான் மேலே உள்ள உங்களது கேள்விக்குப் பதிலாகும். அந்த உண்மை வருமாறு:

பகுத்தறிவு உயர உயர எவ்வளவுதான் சென்றாலும் அதற்குச் சில எல்லைகள் இருக்கின்றன. அந்த எல்லைகளை அது தாண்டிச் செல்ல முடியாது. பகுத்தறிவு தாண்ட முடியாத அந்த எல்லைகளுள் ஒன்று சூழலும், சூழலில் காணப்படும் திண்மம், திரவம், வாயுக்கள், சக்திகள் போன்றவையுமாகும்.

பகுத்தறிவு இந்த எல்லைகளைத் தாண்ட முடியாது எனின், அது இந்த எல்லைக்குள் இருந்த கொண்டுதான் சிந்திக்க முடியும் என்பதையும் மனிதன் ஏற்றாக வேண்டும்.

பகுத்தறிவின் நிலை இதுவானால் அது மனிதனை எவ்வாறு நோக்கும்?

மனிதனின் பிரச்சினைகளை எவ்வாறு அணுகும்?

மேற்கத்தேய மனிதர்கள் ஒழுக்க வீழ்ச்சியையும் அதன் ஆபத்தான விளைவு களையும் ஏன் உணராமல் இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு விடையை நாம் இந்தக் கேள்வியின் பின்னணியில்தான் நோக்க வேண்டும்.

பகுத்தறிவு ஒன்றை மட்டும் ஆதார மாகக் கொண்டு சிந்திக்கும்போது மேற் கத்தேயவாதிகள் மனிதனை இப்படித்தான் பார்க்கிறார்கள்.

- பசி ஏற்படுகிறது. சாப்பிடுகிறான் மனிதன். இதில் என்ன தவறு?
- நித்திரை வருகிறது, உறங்குகிறான். ஆட்சேபணையில்லை.
- வேலை செய்கிறான், களைப்பு ஏற்படு கிறது. நீராடி இளைப்பாறுவதில் தப்பில்லை.

இவற்றைப் போன்றதுதான் தாகம் தீர்த்துக் கொள்வதற்கு என்ன தடை?

எனவே, தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும சுதந்திரம், காமத்தைத் தீர்த்துக் கொள் வதிலும் வேண்டும். இங்கே ஒழுக்கம் சீர் கெடுகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக, மனிதனின் தேவையொன்று நிறைவேற்றப்படுகிறது என்பதுதான் உண்மை. தேவையை நிறைவேற்றப்போய் எயிட்ஸ் வருகிறதா? மருந்து கண்டுபிடிப்போம் என்கி றார்கள் மேற்கத்தேய மனிதர்கள். இது தான் மேற்கின் ஒழுக்கம் பற்றிய கோட் பாட்டுச் சுருக்கம். பகுத்தறிவு ஒன்றினால் மாத்திரம் அனைத்தையும் பார்த்துப் பழகிய மேற்கு மனிதர்களால் இதைவிட வேறு முடிவுகளுக்கு எவ்வாறு வர முடியும்?

ஒழுக்கம் பற்றிய அவர்களது இந்தக் கோட்பாடு எங்களுக்கு சிரிப்பைத் தருகிறது. காரணம் நாங்கள் பகுத்தறிவை நெறிப் படுத்தும் மற்றோர் அறிவையும் (வேத அறிவு) துணையாகக் கொண்டு சிந்திக்கி றோம். அந்த அறிவு ஒழுக்கம் பற்றி முன் வைக்கும் கோட்பாட்டை நாம் கண்டும், கேட்டும், பேசியும், செயற்படுத்தியும் வந்தி ருக்கிறோம். ஆண்-பெண் உறவுகளை அந்த அறிவின் வழிகாட்டலில் நெறிப் படுத்தி வந்த நாங்கள் மேற்கு மனிதர் களின் சிந்தனையைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறோம். அவர்களது சிந்தனை யில் இது மட்டுல்ல, இன்னும் நகைப்புக் கிடமான எத்தனையோ கண்டுபிடிப்புகள் உருவாகியிருக்கின்றன. அவர்கள் ஒழுக்கச் சீர்கேடு என்று எதனைக் கருதுகிறார்கள் தெரியுமா? விபசாரத்தையல்ல, தன்னினச் சேர்க்கையையுமல்ல. கணவன் தன் விருப் பப்படி மனைவியைத் தாம்பத்தியத்தில் ஈடுபடுத்தினால் அதுதான் அவர்களது பார்வையில் ஒழுக்கப்பிறழ்வு. கணவன் மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தினான் என்று கணவன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வார்கள்.

விண்ணுக்கு மண்ணைப் படமெடுக்கும் செய்மதிகளை அனுப்பி வைத்த அறிவு அபாரமானதுதான். ஆனால் அதே அறிவு மனிதப் பலவீனங்களையும் படமெடுத்து அவனது குறைநிறைகளை ஆராய்ந்து அறிந்து வழிகாட்டி வாழ்க்கையை மேம் படுத்தும் என்று தப்புக்கணக்குப் போட் டமை மேற்கு மனிதனின் முட்டாள்தனமே! இந்த முட்டாள்தனத்தை அவர்கள் நாகரி கம் என்கிறார்கள். கீழைத்தேய அறிவாளி களில் பலரும் ஆமாம் அதுதான் நாகரி கம் என்று திருப்பிச் சொல்கிறார்கள்.

நாம் ஆரம்பத்தில் கூறியதுபோல் மனித அறிவு சூழலுக்குக் கட்டுப்பட்ட தாகும். மனிதனது புலன்களுக்கும் பகுத் தறிவுக்கும் எட்டும் தூரம்வரை சூழலில் இருப்பதை ஆராய்ந்து பகுத்துணரும் ஆற்றல் அதற்குண்டு. பின் உணர்ந்த வற்றை பரிசீலனை செய்யும் திறனும், பரிசீலனை முடிவுகளை வைத்து இயற் கையைக் காப்பியடித்து புதிய கண்டு பிடிப்புக்களை உலகுக்கு வழங்கும் வல்ல மையும் ஒருங்கே அமையப் பெற்றதாக பகுத்தறிவு திகழ்கிறது.

பகுத்தறிவின் இந்த அபார சக்தியை அனுபவத்தில் கண்டபோது இந்த அறிவி னால் நினைத்ததையெல்லாம் செய்யலாம் என்ற முடிவுக்கு மனிதன் வந்துவிட்டான்.

கண் எப்படிப் பார்க்கிறது, காது எப்படிக் கேட்கிறது என்பதை இந்த அறிவி னால் பகுத்தும் ஆராய்ந்தும் விளங்க முடியும் என்பது உண்மைதான். அதற்காக கண் எதைப் பார்க்க வேண்டும், எதைப் பார்க்கக் கூடாது, காது எதைக் கேட்க வேண்டும், எதைக் கேட்கக் கூடாது, என்ப தையெல்லாம் பகுத்தறிவினால் தீர்மா னிக்கவோ கண்டுபிடிக்கவோ முடியுமா? இத்தகைய கண்டுபிடிப்புக்கான ஆய்வு முறைகள் என்ன? ஆய்வு வேலையில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் எவை? கண்டுபிடிப்புக்குரிய பரிசீலனைகள் எவை? என்று கேட்டால் பகுத்தறிவு மௌனம் சாதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மௌனத்தைக் கலைத்தால் ‘கணவன் மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினான்’ என்பதுபோல் பகுத்தறிவு எதையாவது உளறித் தள்ளிவிடும். நாங்கள் நகைப்போம். அவர்கள் அதனை நாகரிகம் என்பார்கள்.

## பலஸ்தீன் :

### ''சியோனிஸம் தனது குற்றச்செயல்களுக்கு வெகுமதியைப் பெற்றுக் கொள்ளும்''

- ஹமாஸ் அறிக்கை -

கடந்த 22.07.2002 திங்கள் மாலை மக்கள் செறிந்து வாழும் காஸா நகரின் 'தராஜ்' பகுதியில் அமெரிக்கத் தயரிப்பான F-16 ரக இஸ்ரேலிய யுத்த விமானங்கள் வீட்டுத் தொகுதிகள் மீது பாரிய குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஸியோனிஸ்டு களின் தொடரான குற்றச்செயல்களில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய தாக்குல்களில் ஒன்றே இது.

இத்தாக்குதலில், ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸ்ஸுத்தீன் அல்கஸ்ஸாமின் கொமான்டர் ஷெய்க் ஸலாஹ் முஸ்தபா ஷிஹாதா (வயது 50) ஷஹீதாக்கப்பட்டார். அவருடன் அவரது மனைவி லைலா காமிஸ் ஸபீரா (வயது 40), அவரது மகள் ஈமான் ஸலாஹ் ஷிஹாதா (வயது 15) ஆகியோரும் ஷஹீதாக்கப்பட்டனர்.

இது தவிர கஸ்ஸாம் படைப் பிரிவின் மற்றுமொரு வீரரான ஸஹீர் ஸலாஹ் அபூ ஹுஸைன் (வயது 37) உட்பட பன்னிருவர் ஷஹீதாக்கப்பட்டனர். இவர்களுள் 8 பேர் 5 வயதுக்கு குறைவானவர்களாவர்.

கோழைத்தனமான இத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்டோர் பேர் காயங்களுக்கு உள்ளாயினர். அவர்களுள் அதிகமானோர் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், மற்றும் அங்கவீனர்கள் ஆவர்.

ஹமாஸ் இயக்கம், தனது இராணுவப் பிரிவின் கொமண்டரி னதும் ஏனைய ஷஹீதுகளினதும் படுகொலைகளைப் பொறுத்துக் கொண்டதோடு பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கூறுகிறது:

- ஸியோனிஸ்டுகளை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்த நிலையில் கண்டாலும் அவர்களைத் தாக்குங்கள். அசிங்கமான இந்த எதிரிக்கெதிரான யுத்தத்தில் தடுக்கப்பட்ட வழிமுறைகள் எதுவும் இல்லை.

- நாம் ஸியோனிஸ்டுகளுக்குச் சொல்லிக் கொள்ள விரும்பு வது என்னவெனில், ஷஹீதாக்கப்பட்ட அபூ முஸ்தபாவினதும் அவரது சகோதரர்களினதும் இரத்தம் உங்களை அனைத்து வீதிகளிலும், அனைத்து கஸினோ 'கிளப்'களிலும், பஸ்களிலும் வந்த பலியெடுக்கும். அத்துடன் சிதறிக் கிடக்கும் ஏனைய போராளிகள் மிக விரைவில் பாரிய தாக்குதல்களையும் பெரும் இடர்களையும் உங்களுக்கு ஏற்படுத்துவார்கள். அவர்கள் உங்களை விரட்டிச் சூழ்ந்து கொள்வார்கள். உங்களால் எங்கும் ஒளிந்து கொள்ள முடியாது.

- பலஸ்தீன மக்களுக்கு எதிராக நடைபெறும் குற்றச் செயல் களை உலகம் குருட்டுத்தனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எங்கள் மீது முரட்டுத்தனமான அழுத்தத்தையும் தடைகளையும் சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக உபயோகிக்கிறார்கள். இவ்வாறான நிலைமைகளில் காட்டுமிராண்டித்தனமான செயல் களை நிறுத்துவதற்கு மிகப் பலமானதும் சிறந்ததுமான ஒரே வழி தற்கொலைத் தாக்குதலே ஆகும்.

*இஸ்லாமிய எதிர்ப்பு முன்னணி (ஹமாஸ்)*
*பலஸ்தீன்*
*செவ்வாய் 13, ஜமாதுல் அவ்வல், 1423*
*23.07.2002*

## பிரான்ஸ் :

### முஸ்லிம்களுக்கு எதிரான நூலுக்கு பிரான்ஸ் நீதிமன்றம் ஆதரவு

முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாக சித்தரித்து எழுதிய புத்தகமொன்றினை தடைசெய்யுமாறு கூறி, இனவாதத்திற்கு எதிரான குழுவொன்று கொடுத்த மனுவினை பிரான்ஸ் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுக்க மறுத்துள்ளது. ஒரிஆனா பொலிஸி என்ற ஊடகவியலாளர் எழுதிய ''ரேஜ் எண்ட் பிரைட்'' என்ற புத்தகத்தை விற்பனை செய்வதைத் தடைசெய்யுமாறு கோரியே பிரான்ஸ் இனவாதத்திற்கு எதிரான MRAP என்ற குழு நீதிமன்ற தடையை வேண்டிநிற்கிறது. ஒரிஆனா பொலிஸி தனது புத்தகத்தில் முஸ்லிம் களைப் பலமாகச் சாடியுள்ளதுடன், மேற்கத்தைய சமூகத்தை இனரீதியில் தூண்டுவதற்கு தனது புத்தகத்தின் மூலம் முனைந் துள்ளார். செப்டம்பர் 11 தாக்குதல் இஸ்லாத்தின் உண்மை முகத்தினை காட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஒரிஆனா, இஸ்லாமி யக் கலாசாரத்தைவிட மேற்கத்தைய கலாசாரம் பலமிக்கது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மேற்கத்தைய நாடுகளில் நுழையும் முஸ்லிம்களின் தொகை எலிகளின் எண்ணிக்கை போன்று நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது போன்ற சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

MRAP இன் மனுவினை பரிசீலித்த பிரான்ஸ் நீதிமன்றம் இப்புத்தகத்தில் இனவாதத்தைத் தூண்டக்கூடிய விடயங்கள் இடம் பெறவில்லை என குறிப்பிட்டுள்ளதுடன், இதுவரை இப்புத்தகத்தின் 1 மில்லியன் பிரதிகள் இத்தாலியிலும், 45,000 பிரதிகள் பிரான்ஸி லும் விற்பனையாகி விட்டமையால் அதற்கு தடைவிதிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸ்:

### பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக முழு அளவிலான போராட்டத்திற்கு இஸ்லாமிய இயக்கம் தயார்!

பிலிப்பைன்ஸ் அரச படையினருக்கும், மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கும் இடையில் மீண்டும் யுத்தமொன்று வெடிப்பதற்கான சாத்தியங்கள் தோன்றியுள்ளதாக பிலிப்பைன்ஸில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னர் மலேஷியாவில், பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும், மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கும் இடையில் கைச்சாத்தான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறும் வகையில் அரச படையினர் செயல்பட்டு வருவதே இம்முறுகல் நிலைக்கு காரணமாகும்.

மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணியின் தலைவர் ஷேய்க். ஸலாமத் ஹாஷிம் தற்போதைய நிலைமை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், *''இரு தரப்பினருக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டாலும், அதற்கான பிலிப்பைன்ஸ் இராணுவத் தின் ஒத்துழைப்பு எவ்வாறு அமையும் என்பது எமக்கு தெரியும் என்பதால் நாம் முழு அளவிலான யுத்தமொன்றுக்கும் தயாராகியே இருக்கிறோம்''* என தெரிவித்தார்.

மோரோ மாநில முஸ்லிம்களின் பலத்த ஆதரவு பெற்ற, மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி பலம்வாய்ந்த அமைப்பாக இருப்பதால், இம்முன்னணியின் பலத்தைக் குறைக்க உடன்படிக்கை என்ற பெயரில் இதற்கு முன்னரும் பல சதி நடவடிக்கைகளில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீர்:

### காஷ்மீர் படுகொலையின் பின்னணியில் இந்திய இரகசிய படைப்பிரிவு இருப்பதாக சந்தேகம்!

30 பேரின் உயிரைப் பலிகொண்டு, 35 பேருக்கு அதிகமானோரை படுகாயங்களுக்கு உள்ளாக்கிய இந்திய ஆளுகைக்குட்பட்ட 'காஸிம்' நகர் நிகழ்வின் பின்னால் இந்திய பொலிசார் அல்லது இராணுவம் செயல்பட்டதற்கான ஆதாரங்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஜம்மு காஷ்மீரில் இருந்து வரும் நாளாந்தப் பத்திரிகைகள் பல இப்படுகொலையின் பின்னால் பொலிஸார் அல்லது இராணுவம் செயல்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன. Kashmir Times பத்திரிகை இதுபற்றி குறிப்பிடுகையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பொலிசார் அதனைத் தடுப்பதற்கு முன் வராமை சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

துப்பாக்கிச் சூடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மக்கள் தம்மைக் காப்பாற்றுமாறு மரணஓலம் எழுப்பியும் பொலிஸார் தமது மேல் அதிகாரி வராமையினால் எதனையும் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டுள்ளனார். இப்படுகொலை நடைபெற்ற இடத்துக்கு சுமார் 100 மீற்றர் தூரத்தில் இராணுவ காப்பரண் ஒன்று இருந்தமையும், 500 மீற்றர் தூரத்தில் பொலிஸ் காப்பரண் இருந்தமையையும் சுட்டிக்காட்டும் Kashmir Times பத்திரிகை, *''பொலிஸார் நினைத்திருந்தால் அரைமணி நேரத்தில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்திருக்க முடியும்''* எனக் குறிப்பிடுகிறது.

கண்ணால் பார்த்த சாட்சிகளின்படி படுகொலையில் ஈடுபட்டவர்கள் சென்று விட்டதை உறுதி செய்த பின்னரே பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர். இராணுவத்தினரும் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் சென்ற பின்னர்தான் அருகில் உள்ள காட்டில் தேடுதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

Exselsior என்ற பத்திரிகை, மரணித்தவர்களில் பலர் பொலிஸாரின் உடன் மருத்துவ உதவிகளைப் பெறாதவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளது.

இப்படுகொலை தொடர்பாக இந்திய அரச பத்திரிகைகள் முஜாஹிதீன்கள் மீது குற்றம்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## மொரோக்கோ :

### வறுமையில் வாடும் முஸ்லிம் இளைஞர்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சி

பொருளாதார நெருக்கடி, வறுமை போன்ற காரணங்களை சாதகமாகப் பயன்படுத்தி மொரோக்கோ முஸ்லிம்களை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்ய கிறிஸ்தவ மிஷனரிகள் பல்வேறு வழிமுறைகளில் முயன்று வருவதாக AS-SABAH நாளாந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் இயங்கும் கிறிஸ்தவ மிஷனரிகளும், கிறிஸ்தவ தேவாலயங்களும் கடந்த சில வருடங்களாக மொரோக்கோவின் பின்தங்கிய பகுதிகளை இலக்காக் கொண்டு மதமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக இப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. இவர்களது சூழ்ச்சிகளுக்கு பல பல்கலைக்கழக மாணவர்கள் பலியாகியுள்ளனர். இவ்விதம் மதமாற்றத்துக்குள்ளான அனைவரும், வறுமை காரணமாக தமது பல்கலைக்கழக படிப்பை தொடர முடியாது இடையில் கல்வியை நிறுத்திக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் :

### அமெரிக்காவின் திட்டங்களை கண்மூடித்தனமாக பின்பற்றுவதற்கு பிரான்ஸ் முஸ்லிம்கள் எதிர்ப்பு!

பிரான்ஸ், அமெரிக்க சார்பு அரசியலில் ஈடுபடுவதிலிருந்து முற்றாக விடுபட வேண்டுமென, பிரான்ஸ் முஸ்லிம் கட்சியின் தலைவர் 'முஹம்மத் நாஸிர் லத்ரஸ்' வேண்டுகோள் விடுத்துள்ளார். மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம் தொடர்பான அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் W புஷ் ஆற்றிய உரையை முஹம்மத் லத்ரஸ் கடுமையாக கண்டித்தார். பலஸ்தீன முஸ்லிம்கள் விடயத்தில் அமெரிக்கா உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் நிலையில் பிரான்ஸ் அரசாங்கம் அதற்கு ஆதரவான நிலையைக் கடைபிடிப்பதை அவர் கடுமையாக விமர்சித்தார். கடந்த 23/06/2002 அமெரிக்க ஜனாதிபதி ஆற்றிய உரையில் பலஸ்தீன இன்திபாதாவை முற்றாக ஒடுக்கக் கூடிய ஆக்கிரமிப்பு இடம்பெறும் வரையில் பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது எனக் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்க ஜனாதிபதியின் இப்பொறுப்பற்ற பேச்சு பலராலும் பலத்த விமர்சனத்திற்கு உட்பட்டது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் கட்சியின் தலைவர் மேலும் குறிப்பிடும்போது, பலஸ்தீன் யூதர்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளதா அல்லது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளதா என கேள்வி எழுப்பினார். பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத்தை மாற்ற வேண்டுமென அமெரிக்கா குறிப்பிட்டிருப்பது அந்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகும் எனவும் அவர் குற்றஞ் சுமத்தினார்.

பிரான்ஸ், பலஸ்தீன நாடு உருவாக்கப்படுவதற்கும் அதன் தலைநகராக குத்ஸ் ஆக்கப்படுவதற்கும், ஐ.நா பிரகடனத்திற்கு அமைய ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலிய படைகளை வாபஸ்பெறச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும் என்றார்.

## சுவீடன் :

### சுவீடனின் இரண்டாவது சக்தி இஸ்லாம்!

சுவீடனில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அண்மையில் அந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சுவீடனில், இஸ்லாம் பலம் பொருந்திய இரண்டாவது சமயமாக உருவாகியுள்ளமையை உறுதிசெய்துள்ளன. இஸ்லாம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் Yen Samuwel என்ற சுவீடன் ஆய்வாளர், தனது Islam in Swedan என்ற நூலில், கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சுவீடனில் தற்போது இஸ்லாம் இரண்டாவது பலமுள்ள சமயமாக உருவெடுத்துள்ளது என குறிப்பிட்டுள்ளதுடன், இஸ்லாத்திற்கு காத்திரமான எதிர்காலம் உள்ளதாக உறுதிபடக் கூறுகிறார். இவர் தனது நூலில் 1940 களில் இருந்து இன்றுவரை சுவீடனில் இஸ்லாத்தின் வளர்ச்சி குறித்து விலாவாரியாக எழுதியுள்ளார். இஸ்லாம் போதிக்கின்ற நடைமுறைசார்ந்த நேர்த்தியான வழிகாட்டல்கள் காரணமாக போதைப்பொருள், அநாச்சாரங்கள் மலிந்த சமூகத்தில் முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழும் வாழ்க்கைக்கு வழியமைத்துள்ளதாக அவர் தனது நூலில் மேலும் குறிப்பிடுகிறார்.

அண்மையில் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் ஆனா லிண்டா 'சுவீடனில் இஸ்லாம் சட்ட அந்தஸ்துபெற்ற இரண்டாவது சமயம் என்பதாக குறிப்பிட்டுள்ளதுடன், அது சுவீடன் மக்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

8 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சுவீடனில் மூன்று லட்சத்து 50 ஆயிரம் பேர் முஸ்லிம்கள் ஆவர்.

## இனப்பிரச்சினை விவகாரத்தில் ...

(8ம் பக்கத் தொடர்)

''International Alert பற்றிய செய்திகள் பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. இலங்கையில் மாத்திரமல்ல, வெளிநாடுகளிலும் கூட இதன் பின்னணி மிகவும் சுவாரஷ்யமானதாகும். இலங்கையில் பிரபலமும் செல்வாக்கும் உள்ள பல மனிதர்களை வெளிநாடுகளுக்கு அழைத்து பல்வேறு நிகழ்ச்சிகளை மேற்கொண்டது. இவர்கள் முதல் வகுப்பு விமானக் கட்டணம் செலுத்தப்பட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டனர். இவர்களுள் ......, ........, ..............., (பெயர்களை நாம் வெளியிடவில்லை) முக்கியமானவர்கள். International Alert இத்தகைய பணிகளில் டாம்பீகமாக ஈடுபடுவதற்கு நிதியுதவி எங்கிருந்து கிடைக்கிறது என பலர் ஆச்சரியத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்''

அத்துடன், International Alert ஸியரலியோன், லைபீரியா மற்றும் வேறு ஆபிரிக்க நாடுகளில் ஈடுபட்ட சட்ட யாப்புக்கு முரணான செயல்கள் பற்றியும் மேற்படி சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆபிரிக்க நாடுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இலங்கையைச் சேர்ந்த கலாநிதி குமார் ரூபசிங்ஹ என்பவரது பெயர் பல இடங்களில் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

ஸியரலியோனின் ஜனாதிபதி (1997ல்) அல்ஹாஜ் கலாநிதி தெஜான் கெப்ரா ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அனுப்பி வைத்த முறைப்பாட்டில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

'International Alert நிறுவனம் ஈடுபட்டு வரும் எமது நாட்டுக்கு எதிரான நடவடிக்கைககள் குறித்து நான் அதிக கவலையடைந்துள்ளேன். குறிப்பாக அதன் பிரதான இரு உறுப்பினர்களான திரு. குமார் ரூபசின்ஹ, திரு. அட்டல் ஸ்பபோ ஆகியோரின் நடவடிக்கைகள் அதிருப்தியாக அமைந்துள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேல் சென்று எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடு செய்கின்றனர்."

..... எனது நாட்டில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து நீட்டிச் செல்லும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர். ஏனெனில் யுத்தம் தொடர்வதை காரணம் காட்டி இவர்கள் உதவி வழங்கும் நாடுகளின் பொருளுதவிகளை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கே இவ்வாறு செய்கின்றனர். அதேவேளை கள்ளத்தனமாக வைரக்கற்களை அகழ்ந்தெடுத்து வெளிநாடுகளுக்குக் கடத்தும் சட்டவிரோத வியாபாரம் மூலமும் தனிப்பட்ட ரீதியிலும் நன்மை அடைந்து கொள்கின்றனர்...."

(பார்க்க மேற்படி அறிக்கை பக்: 85-91)

International Alert க்கு நிதியுதவி வழங்கும் நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நிறுவனத்தின் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றி கேள்வியுற்றதும் அந்நாடு இந்நிறுவனம் பற்றி புலனாய்வு செய்து ஓர் அறிக்கையை சமர்ப்பிக்கும்படி Christian Michelson Institute எனும் நிறுவனத்தை வேண்டிக் கொண்டது. அவ்வறிக்கை International Alert க்கு பாதமாக அமைந்தபடியால் அதன் நிதியுதவி தடைப்பட்டது.

இஸ்லாம் என்பது மூடர்களினதும் உளமுதிர்ச்சியற்றவர்களினதும் புகலிடம் அல்ல. 'சாணக்கியம் என்பது முஸ்லிமின் சொத்து' என ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் முஸ்லிம் அரசியல்வாதிகளும், சமூகத் தலைவர்களும், உலமாக்களும் மற்றும் துறைசார்ந்த நிபுணர்களும் புதிதாக தலைதூக்கியுள்ள இவ்வாட்டக்காரர்கள் குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

பகட்டான சமூக அக்கறை, ஆசை வார்த்தைகள், ஊடகப் பிரசாரங்கள், ஆகியவற்றிற்கு மயங்கி பலியாகிவிடக் கூடாது. எமது சமூகத்துக்கு உள்ளேயும் அதேபோல் வெளியிலிருந்தும் தலைதூக்கியுள்ள இவர்களை அடையாளம் கண்டு தடுத்து நிறுத்த முயற்சிக்க வேண்டும். எமது பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதில் எவரிடமிருந்தும் உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வதில் தவறேதும் இல்லை. ஆனால் எமக்கு முன் பல்லிளித்து கூத்துக் காட்டும் அனைவரிடமும் எமது சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் முயற்சியை அடகுவைத்துவிடக் கூடாது.

எமக்கிடையில் ஷுராவையும் (கலந்தாலோசனை) அடிக்கடியான சந்திப்புகளையும் ஏற்படுத்திக் கொள்வது எமது பலத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

## 'மூதூருக்கு துயரம் தந்த படகு விபத்து'

### கவிதைப் போட்டி

திருமலை-மூதூர் கடல்வழிப் போக்குவரத்தின்போது நிகழ்ந்த 'பாதாள மலை' படகு விபத்தில் நூற்றுக்கதிமான பயணிகள் மரணித்த துயரம் நிறைந்த சம்பவத்தின் பத்தாவது ஆண்டை நினைவுகூர்ந்து மூதூர் 'அஸ்ஸில்மு இஸ்லாமியப் பணியகம்' நாடளாவிய ரீதியில் கவிதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

''மூதூருக்குத் துயரம் சேர்த்து தந்த படகு விபத்து'' என்னும் தலைப்பில் நடத்தப்படவுள்ள இக்கவிதைப் போட்டியில் 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்குபற்றலாம். கவிதைகள் 60 வரிகளுக்கு குறையாத வகையில் (புதிய, மரபுக் கவிதைகள்) அமைந்திருத்தல் வேண்டும். சிறந்த கவிதைகளை எழுதுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதோடு, அத்தகைய கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

இக்கவிதைப் போட்டி பற்றிய மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் பின்வரும் முகவரியோடு தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்:

**அமீர் எஸ். ஹமீட்,**
**தலைவர், அஸ்ஸில்மு இஸ்லாமியப் பணியகம்,**
**33, புதிய துறைமுக வீதி, மூதூர் - 01**

# மரணம் வாழ்வின் முற்றுப்புள்ளியல்ல!

**"உங்களில் ஈமான் கொண்டு நற் கருமங்கள் செய்வோருக்கு அல்லாஹ் வாக்குறுதியளிக்கிறான்..."**

1. **"உங்களுக்கு முன்னால் (வாழ்ந்து) இருந்தவர்களை இந்தப் பூமியின் அதிபதிகளாக ஆக்கியதைப் போன்று (ஈமான் கொண்ட) அவர்களையும் நிச்சயமாக (இந்தப் பூமியின்) அதிபதிகளாக அல்லாஹ் ஆக்கி வைப்பான்"**
2. **"...அல்லாஹ் பொருந்திக் கொண்ட மார்க்கத்தை (இந்த உலகத்தை) ஆட்சி செய்யும் மார்க்கமாக இவர்களுக்கு ஆக்கித்தருவான்..."**
3. **"உலகில் அச்ச (த்தோடு வாழும்) நிலைக்கு பதிலாக பாதுகாப்பான (வாழ்க்கை நிலையை) அவர்களுக்கு அமைத்துத் தருவான். (அப்போது) மனித சமுதாயம் என்னை வணங்கி வழிபடுவார்கள். எனக்கு எதனையும் இணைவைக்க மாட்டார்கள்"**

**(24:55)**

இந்தக் குர்ஆன் வசனத்தில் வரும் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மரணத்திற்கு அப்பால் நிறைவேற்றி வைக்கப்படும் வாக்குறுதிகள் அல்ல. மறாக, இந்த உலகத்தில் மு.்மின்களுக்கு நிறைவேற்றித் தருவதாக அல்லாஹ் அளித்திருக்கும் வாக்குறுதிகள் ஆகும். அதாவது மு.்மின்களின் உலக வெற்றிக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஆகும்.

ஆனால் நாம் ஏற்கனவே மேற்கோள் காட்டிய 4:59, 8:46 ஆகிய வசனங்கள் சுட்டிக்காட்டும் தோல்விக்கான காரணிகள் முஸ்லிம் சமுதாயத்தில் இருக்கும்போது முஸ்லிம்களின் உலக வெற்றிக்கான அல்லாஹ்வின் வாக்குறுதிகள் எவ்வாறு நிறைவேற முடியும்?

இந்த உண்மை இன்று த.்வாவில் புறக் கணிக்கப்பட்டிருக்கிறது. மரணத்திற்கு அப்பாலுள்ள தனிமனிதனின் வெற்றி தோல்வி குறித்து த.்வாவில் பேசப்படும் அளவு குர்ஆன் கூறும் (முஸ்லிம் சமுதாயத்தின்) உலக வெற்றி குறித்து தாஇகளும், த.்வா அமைப்புகளும் பேசுவதைக் குறைவாகவே கேட்க முடிகிறது. சிலர் பேச்சுக்காக இத்தலைப்புகளை எடுத்துக் கொண்டாலும் செயலில் எதனையும் காண முடியவில்லை. அதிகமானோர் இத்தகைய தலைப்புக்களைப் பேசுவதற்கே விரும்பவில்லை போலும்.

வேதத்தின் ஒரு பகுதியை அங்கீகரித்து மற்றொரு பகுதியை நிராகரிக்கும் பாவம் பயங்கரமானது. எமது சமூகம் அறியாமையால் இத்தகையதொரு பாவத்தைச் செய்கிறது எனின் அல்லாஹ் அவர்களை மன்னித்து தீனின் விளக்கங்களை அவர்களுக்கு கொடுப்பானாக எனப் பிரார்த்திப்போம்.


## நீங்கள் பௌதீக விஞ்ஞானத்தில் சித்தியடைந்தவரா?

## இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

**உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி**
**(HIGHER NATIONAL DIPLOMA IN ENGINEERING (HNDE)**

மேற்படி பாடநெறிக்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. 2001ம் ஆண்டுக்குப் பின்னர் க.பொ.த (உ/த) பௌதீக விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**M.M.M. Mubeen**
**C/O Fazly Farook**
**42, Rodrigo Place**
**Colombo 15 (TP : 072-910058)**


## குறுக்கெழுத்துப் போட்டி–23 பரிசு பெறுவோர் விபரம்

***ஒகஸ்ட் மாத அல்ஹஸனாத்தைப் பரிசாகப் பெறும் தம்பி தங்கைகள் பத்துப் பேர்:***

1. எம்.ஆர்.எம். சப்ராஸ்
   தரம் - 7
   ஸாஹிரா தேசிய கல்லூரி
   புத்தளம்.
2. அன்வர் சதாத்
   ஆண்டு - 7,
   உலுக்காபள்ளம் மு.ம. வித்.,
   பாலாவி, புத்தளம்.
3. எம்.ஏ.எம். மும்தாஸ்
   137/1, உயன்வத்த,
   தெவனகல
4. முனவ்வறா நூர் முஹம்மத்
   தரம் - 10B
   அல்மின்ஹாஜ் தேசிய கல்லூரி
   ஹபுகஸ்தலாவ.
5. எம்.எம். நியாஸ்தீன்
   ஆண்டு - 09,
   அல்ஹிதாயா மு.ம வித்.,
   மீராவோடை - 04
6. அஜ்மல் முனாஸ்
   தரம் - 06,
   அல்அஸ்ஹர் மு. ம. வித்.,
   கந்தற
7. எச்.ஆர்.எப். றிஸ்தா
   எம்.எல்.ஏ. கல்லூரி,
   கல் எலிய.
8. பஸ்மினா சைனுல் ஆப்தீன்
   அல்-அமீன் முஸ்லிம் ம.வித்,
   கறகொட, யடியன்தொட்ட.
9. சிபானா றப்பாய்தீன்
   தரம் - 9A,
   முஸ்லிம் மகளிர் அ. கல்,
   கள் எலிய.
10. எம்.ரீ. றில்வான்
    ஆண்டு - 04,
    அந்நூர் தேசிய கல்லூரி,
    வாழைச்சேனை.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
'SIRUVAR POONGA'
ALHASANATH
77, DEMATAGODA ROAD,
COLOMBO 00900

## மனிதர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்!

கனம் ஐயா,

தங்களது இலக்கியப் பணி மென்மேலும் விருத்தியுற எல்லார்க்கும் பொதுவான இறைவன் நல்லருள் புரிய வேண்டுகிறேன். இதுவரை தாங்கள் அனுப்பிய மூன்று, மாதாந்த இதழ்களைப் பெற்றுள்ளேன். இத்தகைய நல்லெண்ணம் உடையவர்களது நட்புக் கிடைப்பது இறைவனின் அருள் என்றுதான் கூற வேண்டும்.

உண்மையில் 'அல்ஹஸனாத்' அர்த்தமுடைய பல அம்சங்களைச் சுமந்து சென்று நற்சேவை செய்கிறது என்றுதான் சொல்வேன். ஆனால் மலர் 28 இதழ் 07 ஜுலை இதழைப் படித்தபோது வேதனையாக இருந்தது. காரணம் இலங்கை மக்கள் ஏன் இப்படி, ஆளை ஆள் அடித்துக் கொண்டு தன்னில் பிழையில்லை என்று கூறிக் கொண்டு தப்பித்துக் கொள்ள முயலுகிறார்கள்? உலகில் தர்மத்தைப் போதிக்கும் இருபெரும் மதங்கள் இந்து மதமும், இஸ்லாமும்தான். ஏனோ இன்று அதன் வழியில் தோன்றியவர்கள் வார்த்தையளவில் தம் மதத்தைப் பேசிவிட்டு, அதர்மத்தில் இறங்கிவிடுகிறார்களோ? இதுதான் ஒன்றுமறியாத அப்பாவிகளின் மனக்கிலேசம்.

ஒரு ஜனநாயக நாட்டின் சுதந்திரத்தினையும், சமத்துவத்தினையும் நிர்ணயிப்பவை பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும்தான். அவற்றைக் கூட இன்றைய நிலையில் நம்ப முடிவதில்லை. ஏனெனில் யாருமே இன்று மனசாட்சிக்குப் பயந்து நடப்பதில்லை. எல்லாமே உண்மைக்குப் புறம்பானவையே! இதற்கு எடுத்துக் காட்டாக அண்மையில் மூதூர், வாழைச்சேனைப் பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் மூதூர்ப் பகுதியில் நடந்த நிலைமையினை ஆதாரமாக வைத்து நான் கூறுகிறேன். இன்று வரையில் என்ன நடந்தது, எது எப்படி உருவானது என்பது பற்றிய செய்தியினை உண்மையாக நேரில் கண்டவர்கள் கூட நிச்சயப்படுத்திக் கூறவில்லை. அப்படி நடந்திருக்கலாம், இப்படி நடந்திருக்கலாம் என்று கூறுகிறார்களே ஒழிய, இதுதான் நடந்தது இதுதான் உண்மை என்று யாருமே அறுதியிட்டுக் கூறவில்லை. ஆனால் இந்த உலகில் எந்த மனிதனுமே தான் பிழையை பிழை என ஒத்துக் கொண்டதாக சரித்திரமே இராது.

எது எவ்வாறு இருந்தாலும் நாட்டில் நிலவும் இன்றைய அமைதி நிலையை சகித்துக் கொள்ள முடியாத சில விஷமிகளின் திட்டமிட்ட சூழ்ச்சிகள்தான் இங்கே நடந்து முடிந்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு, ஏன் இன்னும் இன்னும் பிரச்சினையைத் தூண்டுவான்? இதை நான் உங்களுக்காகத்தான் எழுதுகிறேன் நீங்கள் ஒரு மதவாதியாகத்தான் இருப்பீர்கள். அவ்வாறாயின் இறைபணியில் ஈடுபடுபவர்கள் மனிதர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். எல்லா மதங்களையும் மதித்து நடவுங்கள். ஆனால் மதம் மாறுவோரை மட்டும் ஒதுக்கி வையுங்கள். மீண்டும் ஒரு அல்ஹஸனாத்தில் சந்திக்கும் வரை நன்றிகள்

**வித்தியா சித்திரவேல்- கிளிவெட்டி**

குறிப்பு: உங்கள் கருத்துக்களுக்கு நன்றி சகோதரி. இரு விடயங்கள் தொடர்பாக கருத்துக்களைத் தெளிவுபடுத்தலாம் என நினைக்கிறோம். எங்களை 'மதவாதிகள்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். மதவாதிகள் என்பதை விட 'மதசார்புடையவர்கள்' என்பதே பொருத்தமானது. அதேபோன்று 'மதம் மாறுவோரை மட்டும் ஒதுக்கி வையுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். எப்படி கருத்தியல் சுதந்திரத்தை எதிர்பார்த்து திணிப்பு கூடாது என்று வாதிடுகிறோமோ அதேபோன்று ஒருவனது மதம் தொடர்பான கருத்திலும், இன்ன மதத்தை மட்டும் தான் பின்பற்ற வேண்டும் என்ற திணிப்பு ஏற்படக் கூடாது என்பதே எமது கருத்து. அல்குர்ஆனும் (அத்: 2: 255) இதனையே கூறுகிறது: **"நிச்சயமாக மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை"** இது முஸ்லிம், முஸ்லிமல்லாத அனைவருக்கும் பொருந்தும். (ஆ-ர்)

## தவறுகள் திருத்தப்பட வேண்டும்

கடந்த இதழில் பிரசுரமான 'நிர்ப்பந்தம் எனும் நியாயங்கள்' சிறந்ததொரு கட்டுரையாக இருப்பினும் அதில் அல்குர்ஆன் வசனங்களைப் பிரயோகித்திருப்பது கருத்துவேறுபாடுடையதாக உள்ளது.

முதலாவது குர்ஆன் வசனம், **"அல்லாஹ் கூறுகிறான், நிச்சயமாக என்னிரட்சகன் அருள்புரிந்தவையன்றி..."** என்று தொடர்கிறது. உண்மையில் இவ்வசனம் எகிப்திய அரசவை அமைச்சர் மனைவியின் கூற்றாகவே கூறப்பட்டுள்ளது. அதனை 'எகிப்திய அரசவை அமைச்சரின் மனைவியின் கூற்றாக அல்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இரண்டாவது, **"ஆத்மாவின் மீதும், அதனை செவ்வையாக்கியவை மீதும் சத்தியமாக"** என்று இடம்பெற்றுள்ளது. நிச்சயமாக ஆத்மாவைச் செவ்வையாக்கியவன் ஒருவனே. அதைப் பலதாக்கி இஸ்லாமிய தௌஹீதுக்கு மாற்றமான ஒரு கருத்தை இந்த ஒரு சொல் மாற்றம் தந்து விட்டது. எனவே அல்குர்ஆன் வசனங்களைப் பிரயோகிக்கும்போது ஒரு சொல்லேனும், ஓர் எழுத்தேனும் மாறாது பிரசுரமாவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**மஸீதா B. ஹஸன், ஹுபுகஸ்தலாவ**

## 'எங்கள் தேசம்' பொருத்தமான பெயர்

அல்ஹஸனாத் அறிமுகப்படுத்திய 'எங்கள் தேசம்' மிகவும் சிறப்பாகவுள்ளது. எங்கள் தேசம் என்ற பெயர் மிகவும் பொருத்தமானது. அப்பத்திரிகையை அறிமுகப்படுத்திய சகோதரருக்கு நன்றிகள்.

**ரஞ்சனி சுந்தரலிங்கம்- பதிங்கஸ்கொடுவ**

## சேவை தொடரட்டும்

நான் புதிதாக அல்ஹஸனாத்தில் இணைந்து கொண்ட வாசகன். இஸ்லாத்தின்பால் விழிப்புணர்வை அல்ஹஸனாத் ஏற்படுத்துகிறது. இன்று எமது முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அடிப்படையைக் கூட விளங்காது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன என அறியாதிருக்கிறார்கள். எமது பெண்களின் நிலை கிணற்றுத் தவளை போல் இருக்கிறது. இந்நிலையில் மாற்றம் ஏற்பட அல்ஹஸனாத் பங்களிப்புச் செய்யும் என நினைக்கிறேன்.

**அன்வர் சாதாத்- முக்கிரியாவ**

## மனத் திருப்தி

வீட்டில் திடீரென ஏற்படும் சிறு சிறு துன்பங்களுக்கெல்லாம், இதென்ன சோதனை?' எனப் புலம்பும் எனக்கு சென்ற மாத இதழில் வெளியான Dr. மரீனா தாஹா ரிபாய் அவர்களின் 'வாழ்க்கை ஒரு சோதனையா? சாதனை புரிவோம்" என்ற ஆக்கம் துன்பங்களை எவ்வாறு சகித்துக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுத் தந்தது.

**நஸ்ரீன் ஜஹானி நஸார்- அநுராதபுரம்**

## கையேடாக பிரசுரித்தால்...

சியோனிச சூழ்ச்சி பற்றிய கட்டுரை அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று. மேலும், தகவல்கள், படங்கள் புள்ளிவிபரங்களை இணைத்து ஒரு கையேடாக பிரசுரித்தால் நன்றாக இருக்குமே!

**அபூ நுஹா- கொச்சிக்கடை**

## அவசரப்படுத்துங்களேன்!

தயவுசெய்து மாற்று மத சகோதரர்களுக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் தொடரை விரைவாக ஆரம்பித்து அவர்களது உள்ளங்களையும் விரிவுபடுத்துங்களேன்!

**M.I.M. பாரிஸ்- மதவாக்குளம்**

வாசகர்களே! அல்ஹஸனாத் தொடர்பாக பாராட்டுக்களை மட்டும் அனுப்பிக் கொண்டிராமல் ஆக்கபூர்வமான விமரிசனங்களையும் எழுதுங்கள். (ஆ-ர்)

கண்டியில்

# IT Job Suite Programme

**British College of Applied Studies**

கணனித் துறையில்....

- UK, AUSTRALIA.... நாடுகளில் உயர் கல்வி வாய்ப்பினை உறுதி செய்யவும்
- இலங்கையில் தொழில்வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ளவும்

## நிகரற்ற முழு நேர பாடநெறி

**உள்ளடக்கம்**

- தொழில்சார் கணனிப்பயிற்சி Professional Diploma in IT
- பிரயோக ஆங்கிலம் Functional English
- ஆளுமை விருத்திப் பயிற்சி Personality Development

4-5 மாத பாடநெறியின் முடிவில் UK பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் / உறுதிப்படுத்தும் ▶▶ சர்வதேச சான்றிதழ்கள்...!

ஒரு குழுவில் 10 மாணவர்கள் மாத்திரம் நுழைவுப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்

பாடநெறியில் இணைந்து கொள்ள சுய விலாசமிடப்பட்ட கடிதவுறையுடன் விண்ணப்பிக்கவும்

**Professional Diploma in Information Technology**

Module 1 Concepts of Information Technology
Module 2 Operating and Managing Computers- Windows 2000/NT, Dos
Module 3 Computer Application Packages- Ms Office XP
Module 4 Programing Techniques & Programing - VB 6.0, Java 2
Module 5 Web Page Development - HTML, Front Page
Module 6 Desktop Publishing- Page Maker, Corel Draw, Photoshop
Module 7 Hardware Engineering with Networking
Module 8 Internet e-mail Usage

**Functional English**

- Develop the ability to speak with confidence
- Face Interviews effectively
- Acquire necessary skills for higher studies
- Survive in a competitive working environment

**Personality Development**

- Acquire necessary skills for a successful carrier & life

கண்டியில்

# IT Job Oriented Courses

**British College of Applied Studies**

இலங்கையிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் கணனித்துறையில் அதிகளவு வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் மூன்று பாடநெறிகள்



**AUTO CAD** (Computer Aided Engineering Drafting)

For Engineers, Architectures, Designers, Technical Officers, School Leavers

**Web Development & Management**

HTML/DHTML/XML
Front Page
Java Script
VB Script
ASP
Flash

**Desktop Publishing**

Advanced Word Graphics
Page Maker 6.5
Corel Draw 10
Photoshop
Paint Shop pro

*Our Specialities ...*

- University Qualified Lecturers
- Intranet Personal Web Server Environment
- Interactive Training in Air-conditioned Modern Laboratory
- Free Notes & Lab manuals
- Limited enrolment per Batch
- UK University validated Certificates

**British College of Applied Studies**

340/1, D.S. Senanayake Road, Kandy 08-222 229, 077-634508

Registered as a News Paper in Sri Lanka GPO No. QD/36/NEWS/2002

பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள்
மத்ரஸா, ஹோட்டல், திருமண விருந்து
போன்ற வைபவங்களுக்குத் தேவையான
உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட



அலுமினியம் சட்டி (பானை)

(4 கொத்து முதல் 65 கொத்து வரை)

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

பழைய பானைகளைத் திருத்திக் கொள்வதற்கு அல்லது
பழைய பானைகளுக்குப் பதிலாக (செம்பு, அலுமினியம்)
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்வதற்கு
இன்றே நாடுங்கள்

ORCHID ALUMINIUM DISTRIBUTORS

MANUFACTURES OF
ALUMINIUM, STAINLESS STEEL, HOTEL, KITCHEN EQUIPMENTS

# 11, WEDA MAWATHA, WATALPOLA, HENAMULLA, PANADURA.
TEL: 074-282057, HOT LINE: 077-322896
(NEAR THE MULTILAC INDUSTRIES)

A J Prints 44, Station Road, Dehiwala. Tel : 739765, 723205, 723209